கல்கி

'Bar' புகழும் சென்னை!

– 'திடுக்' ரிப்போர்ட்

KALKI
1.6.97
ரூ. 4.00





இருதய கோளாறுகளுக்கு

மாரடைப்பு, இரத்த அழுத்தம், இருதய ஓட்டை,

தெய்வீக மூலிகை மருத்துவம்



இருதயக் கோளாறு ஆரம்ப நிலையாக நெஞ்சு படபடப்பு, லேசான நெஞ்சுவலி, கடின உழைப்பின்போது உடற்சோர்வு, மூச்சு வாங்குதல், லேசான மயக்கம், இரத்த அழுத்தம் அதிகரித்தல் (அ) குறைதல் போன்ற அறிகுறிகள் காணப்படும். இருதயத் தசைகள் தானியங்கும் தசை வகைகளினால் ஆனது. இவைகளின் இயக்கங்கள் முழுக்க, முழுக்க நரம்பு மண்டலக் கட்டுப்பாட்டினால் இயங்கும் தன்மை கொண்டது. சிறு நீரகங்களில் கோளாறு ஏற்படினும், நரம்புப் பகுதியில் கோளாறு ஏற்படினும், இரத்தம் தூய்மையை இழப்பதாலும், இரத்த நாளங்கள் சுருங்குவதாலும் இருதய அடைப்பு (மாரடைப்பு) இரத்த அழுத்தம் இருதயத்தில் ஓட்டை போன்ற கோளாறுகள் உண்டாகின்றன. தூய்மையான உணவு, போதிய உறக்கம், அதிக உடலுழைப்பினை தவிர்த்தல், கடுமையான உடற்பயிற்சி, தேவைக்கு மீறிய உணவு, அதிக கொழுப்பு சத்துள்ள உணவு வகைகள் போன்றவைகளை தவிர்த்தல் மூலமும் உடலுக்கு நல்ல எதிர்ப்பு சக்தியினை அளித்து இரத்த நாளங்களில் அடைபட்டிருக்கும் கொழுப்புப் பொருட்களை கரைத்து வெளியேற்றவல்ல தெய்வீக மூலிகைகளான வேப்பிலை, வில்வம், அத்தி, துளசி, அருகு போன்ற மூலிகைகளை எவ்வாறு உபயோகிப்பது என்பது பற்றிய ஆலோசனைகளை கீழ்க்கண்ட முகவரியிலும், முகாமிலும் டாக்டரிடம் நேரில் பெறலாம்.



மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.C.K.M.**குருபரன்** & Dr.C.K.M.**சபாபதி**, S/o.Dr.C.K. **மாணிக்கவாசகம்**

P.B. No: 30, No: 3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ : 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பிரின்ஸ் மேனர் பக்கத்தில் கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8

✆ : 6424285, 6427638

வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மருந்தினைப் பெற முகாம் விவரம்.
(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

2-ந் தேதி	- வேலூர் (N.A.)	: பிற்பகல்	1 to 2 மணி வரை ஹோட்டல் கன்னா (கங்கா), 16, ஆஃபீஸர்ஸ் லைன், ✆ : 0416 / 23060.
3,6,7,10,13,20,27,28,29ந்தேதி	-சென்னை	: காலை	9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638.
4-ந் தேதி	- கடலூர் (S.A.Dt.)	: காலை	9 to 11 ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 / 30707, 30717
4-ந் தேதி	- விழுப்புரம்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில், ✆ : 04146 / 22962.
4-ந் தேதி	- திருவண்ணாமலை	: மாலை	5 to 6 ராதா லாட்ஜ் (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04175 / 22536.
9-ந் தேதி	- பெங்களூர்	: காலை	11 to 12.30 ஹோட்டல் பிரஸிடே, (கல்பனா தியேட்டர் அருகில் கெம்பே கவுடா ரோட் ✆ : 2266374
9-ந் தேதி	- ஓசூர்	: மாலை	3 to 4 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 / 22699.
9-ந் தேதி	- கிருஷ்ணகிரி	: மாலை	5 to 6 அமராவதி லாட்ஜ், ✆ : 04343 / 22120.
12-ந் தேதி	- சேலம்	: காலை	11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 / 449333.
12-ந் தேதி	- ஈரோடு	: மாலை	4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்ஃபோர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆ : 0424 / 70761.
13-ந் தேதி	- கோயம்புத்தூர்	: காலை	9.30 to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 / 302211, 302220
14-ந் தேதி	- மதுரை	: காலை	9 to 11 ஹோட்டல் கிராண்ட்ஸ் சென்டரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு, ✆ 0452 / 743941
14-ந் தேதி	- தஞ்சாவூர்	: மாலை	5 to 6 அசோகா லாட்ஜ், ✆ : 04362 / 30021 / 30022
15-ந் தேதி	- திருச்சி	: காலை	9 to 11 ஹோட்டல் ஆனந்த், (சென்டரல் பஸ் நிலையம் அருகில், ✆ : 0431 / 460545.
15-ந் தேதி	- நாமக்கல்	: பிற்பகல்	2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, ✆ : 04286 / 20433
18-ந் தேதி	- ஆம்பூர்	: காலை	10 to 11 சம்பங்கி லாட்ஜ், ✆: 04176 / 43311.
18-ந் தேதி	- காஞ்சிபுரம்	: மாலை	4 to 5 ராஜம் லாட்ஜ், (பஸ் நிலையம் அருகில்) 9, காமராஜர் தெரு, ✆ : 04112 / 22519.
19-ந் தேதி	- சென்னை	: காலை	9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638.
22-ந் தேதி	- தர்மபுரி	: காலை	9 to 10 ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ், ✆: 04342 / 60226.
22-ந் தேதி	- திருப்பூர்	: பிற்பகல்	2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ், ✆ : 0421 / 740418.
22-ந் தேதி	- உடுமலைபேட்டை	: மாலை	6 to 7 குறிஞ்சி லாட்ஜ், (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04252 / 24353.
23-ந் தேதி	- திண்டுக்கல்	: காலை	9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, (பஸ் நிலையம் பின்புறம்) ✆:27017.
23-ந் தேதி	- தூத்துக்குடி	: மாலை	5 to 6 ஹோட்டல் ஆல்வின், தேவர் புரம் ரோடு, ✆ : 0461 / 327780
24-ந் தேதி	- திருநெல்வேலி	: காலை	8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சீத்தாபதி, மதுரை ரோடு, ✆ : 0462 / 23312.
24-ந் தேதி	- நாகர்கோவில்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் சரண்யா, மீனாட்சிபுரம், ✆: 04652 / 25689.
25-ந் தேதி	- விருதுநகர்	: காலை	9 to 10 அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ : 04562 / 45537.
25-ந் தேதி	- கரூர்	: பிற்பகல்	2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார், ✆ : 63763.

Dr.CKM
DIVINE HERBAL CENTRE

தகவல்: டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 22 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.50/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.45/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேஸட்டை பெற ரூ.37/-ம் தலைமை முகவரிக்கு M.O. அல்லது D.D. அனுப்பவும்.

ஜெயலலிதாவுக்குத் திருநாவுக்கரசு சவால்!



அண்ணா நகரில் உள்ள திருநாவுக்கரசின் வீட்டின் முன்பாகவும், உள்ளேயும், முடிச்சு, முடிச்சாகத் தொண்டர்கள். மாடியில் கையில் செல்லுடன் திருநாவுக்கரசு. தொடர்ந்து இரண்டு நிமிடம் கூடப் பேச விடாமல் 'செல்' சிணுங்கிக் கொண்டே இருக்கிறது. ஜெயலலிதாவுடன் இருக்கும் படம் இன்னமும் சுவரில் இருக்கிறது.



அரசியலை விட்டே விலகத் தயார்!

"1977-ல் இருந்து 1987 வரை அரசியலில் செல்வாக்கோடு இருந்த நீங்கள், எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு அரசியலில் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் இருந்திருக்கிறீர்கள்" என்று சொன்னபோது, "ஒவ்வொரு பத்தாண்டுக்கும் பத்தாண்டு காலத்துக்கு மனிதர்களின் வாழ்க்கையில் மாறுதல்கள் இருக்குமாம். 1997-ல் துவங்கும் அடுத்த பத்தாண்டில் பார்க்கலாம்" என்று சொல்லிப் புன்னகைக்கிறார் திருநாவுக்கரசு.

"ஜெயலலிதா உங்களை நீக்கியதற்கு முக்கியமான காரணம் என்ன?"

"இது தனிப்பட்ட முறையில் திருநாவுக்கரசுவுக்கும் ஜெயலலிதாவுக்கும் நடைபெறும் மோதல் அல்ல. எம்.ஜி.ஆர்.



• ஆஸ்டின்

திருநாவுக்கரசுக்கு

அடுத்தபடி அ.தி.மு.க.வி லிருந்து விலக்கப்பட்டு, பரபரப்பு ஊட்டியிருப்பவர் கன்னியாகுமரி மாவட்டத் தைச் சேர்ந்த அ.தி.மு.க. ராஜ்ய சபை உறுப்பினர் ஆஸ்டின். இப்போது திருநாவுக்கரசு பக்கம் இணைந்திருக்கிறார். அதியக்காவிளையைச் சேர்ந்த ஆஸ்டின் அ.தி.மு.க.வுக்கு வரு வதற்கு முன்னர் கா.கா.தே.காவில் இருந்தவர். இவரது அண்ணன் ஜஸ்டின், குமரியின் தொண்டராய் இன்னமும் கேசரி காங்கிரஸில் இருக்கிறார். நல்ல வசதியான குடும்பம். 1989ல் ஜெ – ஜா பிரிந்த போது, ஜெ.வுடன் சேர்ந்து விட்டவர். பின்னர் நாகர்கோயில் நகரச் செயலாளராக நியமிக்கப்பட்டவர். ராஜ்ய சபை உறுப்பினராக ஆவதற்காக சசிகலா கோஷ் டியை 'நன்றாக கவனித்த தாகவும்' ஒரு பேச்சு உண்டு.

விசுவாசிகளுக்கும் ஜெயலலிதா விசுவாசிகளுக் கும் இடையே நடக்கும் போராட்டம். ஐந்து வருட காலம் சகல அதிகாரங்களையும் கொண்ட முதலமைச்சராக இருந்து கொண்டு, தம்முடைய தொகுதிக்கு கோடிக்கணக்கான ரூபாய்க்கு திட்டங்களைக் கொண்டு வந்த தாகச் சொன்ன ஜெயலலிதா, அந்தத் தொகுதி யிலேயே மக்களால் ஓரங்கட்டப்பட்டவர். கழகம் 1972-ல் துவங்கி, இரண்டு பொதுத் தேர்தல்களை வெற்றிகரமாகச் சந்தித்த பிறகு பயனை அனுபவிக்க இந்த இயக்கத்திற்கு வந் தவர். புரட்சித் தலைவர் மறைவுக்குப் பிறகு எங்களைப் போன்றவர்களின் தயவால் பொதுச் செயலாளர் ஆனவர். ஐந்து வருட காலம் முதல்வராக இருந்தும், பொது மக்க ளால் இவ்வளவு மோசமாகப் புறக் கணிக்கப்பட்டவர் வேறு யாரும் கிடையாது!

"1991-ல் ராஜீவ் மரணத்தின் மூலம் பெற்ற வெற்றியை, தமது செல்வாக்கால் பெற்றது என்று நினைத்துச் செயல்பட்ட அவரது ஆணவமும் அகம்பாவமும் இன்னமும் அழிய வில்லை. தமது புகழ் பாடுபவர்கள் மட்டுமே கழகத்தில் இருக்க வேண்டும் என்று அவர் நினைத்ததால்தான் என்னை வெளியேற்றி யிருக்கிறார்! பொதுத் தேர்தல் தோல்விக்குப் பிறகு, உள்ளாட்சித் தேர்தல்களிலும், பின்னர் நடந்த புதுக்கோட்டை சட்டமன்ற இடைத் தேர்தலிலும், அவர் பிரசாரம் செய்யாமலேயே நாங்கள் எம்.ஜி.ஆர். புகழை மட்டும் பாடிய தால் கழகம் தனது வலிமையைக் காட்டியது. இதற்குக் காரணம், புரட்சித் தலைவரின் லட்சோபலட்சம் உடன்பிறப்புகள்தான். இத னால் தம்முடைய நிலைக்கு ஆபத்து வந்து விடுமோ என்று கருதி சேடப்பட்டியையும், சத்தியமூர்த்தியையும் எனக்கெதிராகத் தூண்டி விட்டார். இரண்டாம் கட்டத் தலைவர்களுக் குள் ஏதாவது பிரச்னை என்றால் தலைமை தான் சுமுகமாகத் தீர்த்து வைக்க வேண்டுமே தவிர, ஆட்களை வெளியேற்றுவதன் மூலம் தீர்வு காணக்கூடாது. விரைவில் சுத்தமாக அரசியலிலிருந்தே ஜெ. காணாமல் போய் விடுவார். அதற்கான துவக்கம்தான் இது."

"நீங்கள் இப்படி வெளியேற்றப்படுவதும், சேர்வதுமாகவே இருந்தால் எப்படி?"

"எந்தச் சூழலில் சென்ற முறை மீண்டும் அ.தி.மு.க.வில் இணைந்தேன்? ஏதோ தாயுள் ளத்தோடு என்னை மீண்டும் அரவணைத்துக்

"இப்பல்லாம் நான் ஒருநாளைக்கு அஞ்சு அல்லது ஆறு டெலிபோன் கால்தான் பண்ண றேன்..."

"ஏன்? டெலிபோன் பில் அதிகமா வரு துன்னா?"

"இல்லை, அதுக்கு மேல பண்ணினா பக் கத்து வீட்டுல தப்பா நினைச்சுக்க மாட்டாங் களா?"





"நான் கண்ணை மூடின பிறகு என் பணத்தை யெல்லாம் எடுத்துக்கோன்னு என் பையன்கிட்ட சொன்னது தப்பாப் போச்சு..."

"ஏன்...?"

"தூங்கலாம்ன்னு கண்ணை மூடினதும் எல்லாப் பணத்தையும் எடுத்துக்கிட்டு போயிட்டான்..."

– ராதா வாசுதேவன்

கொண்டதாகக் கதை விடுகிறார் ஜெயலலிதா. சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்பாக, த.மா.கா. துவங்காத நிலையில், காங்கிரஸ் அ.தி.மு.க.வோடு கூட்டணி சேரும் சூழலில் நான் கழகத்தில் மீண்டும் இணைந்தேன். அந்தக் காலகட்டத்தில் புதுக்கோட்டை நாடாளுமன்ற இடைத்தேர்தலில், என்னைப் பொது வேட்பாளராக ஒப்புக் கொள்ள கலைஞர் மறுத்து விட்டதால், எனக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு இருந்தது. இந்த நிலையில் என்னை நம்பியிருந்த எம்.ஜி.ஆர். தொண்டர்களுக்குச் சரியான அரசியல் வழிகாட்ட வேண்டிய பொறுப்பு, நிர்ப்பந்தம் எனக்கு இருந்தது. அது தவிர, மிக முக்கியமாக, பல முறை ஆள் அனுப்பி என்னை மீண்டும் இணைய வற்புறுத்திக் கொண்டிருந்தார் ஜெயலலிதா. இதை அவர் மறுக்க முடியுமா? '1990ல் நடராஜன் பேச்சைக் கேட்டுத்தான் உங்களை வெளியேற்றினேன்; இனி அது போல எதுவும் நடக்காது' என்று சத்தியம் செய்யாத குறையாக உறுதியளித்தார்! இந்தக் காரணங்களுக்காகத்தான் மீண்டும் அ.தி.மு.க.வில் நான் இணைந்தேன். பொதுமக்களின் வெறுப்புக்குப் பாத்திரமாகி, மக்களால் தூக்கியெறியப்படும் சூழ்நிலையில் அப்போது ஜெயலலிதா இருந்தார் என்பதையும் கவனிக்க வேண்டும். எம்.ஜி.ஆரின் இயக்கத்தைக் கட்டிக் காக்க வேண்டும், என்ற ஒற்றுமை உணர்வே, அந்த நிலையிலும் என்னை அ.தி.மு.க.வுக்குச் செல்லத் தூண்டியது!"

''மீண்டும் ஜெ. தலைமையில் உள்ள அ.தி.மு.கவில் சேரமாட்டீர்கள் என்று என்ன நிச்சயம்?''

"நான் மீண்டும் கழகத்தில் இணைந்த இந்த ஒரு வருட காலத்தில், மனத்துக்கு நிறைவு தரும் ஒரு விஷயத்தைச் செய்து முடித்தேன். ஜெயலலிதாவின் ஐந்து வருட ஆட்சியின் போது என்னால் எம்.ஜி.ஆர். சிலைகளைக் கூடத் திறக்க முடியவில்லை. அந்த அளவுக்குக் கெடுபிடி செய்தார்! அப்படி மூடி வைத்திருந்த சிலைகளை எல்லாம் திறந்து எம்.ஜி.ஆர். புகழ் பாடினேன். ஏதோ எம்.எல்.ஏ. பதவி பெறுவதற்காக, நான் அ.தி.மு.க.வில் இணையவில்லை. தொடர்ந்து ஆறு முறை ஒரே தொகுதியில் வெற்றி பெற்றுக் கொண்டிருப்பவன் நான். என்னை வெளியேற்ற ஜெயலலிதாவுக்கு அதிகாரம் கிடையாது! எந்தவிதமான நடைமுறையையும் கையாளாமல் என்னை வெளியேற்றி இருக்கிறார். அரசியலில் தொடர்ந்து இருந்து வருவதால், தமது சர்வாதிகார மனப்போக்கைக் கைவிட்டு விட்டு, கொஞ்சம் கனிந்திருப்பார் என்று எதிர்பார்த்தேன்; ஆனால் ஏமாந்தேன்! இதுதான் உண்மை."

"ஜெ.வை விட்டுப் பிரிந்து வந்த தலைவர்களிடமும் மூப்பனாருடனும் உங்கள் உறவு தற்சமயம் எப்படி? ஏதாவது அதிரடி அறிவிப்பு எதிர்பார்க்கலாமா?"

"இந்தக் கேள்விகளெல்லாம் இப்போது அவசியமில்லை. ஜெயலலிதா தவிர்த்து அனைத்து எம்.ஜி.ஆர். விசுவாசிகளின் கையில் கட்சியும், சின்னமும் வர இருக்கிற நிலையில் தொடர்ந்து நான் எம்.ஜி.ஆர். இயக்கமான அ.தி.மு.க.வில்தான் இருப்பேன் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?"

"வெளியேறுபவர்கள் ஏதோ பெயருக்காக பொதுக்குழுவைக் கூட்டுவதும், ஆனால் கட்சி இயந்திரம் தொடர்ந்து ஜெயலலிதா தலைமையிலேயே இருப்பதையும்தானே நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். உங்கள் விஷயத்தில் மட்டும் மாறுதல் இருக்குமா என்ன?"

"தியேட்டர் மானேஜர்கிட்ட 'முதல் நாள் கலெக்ஷன் எப்படி'ன்னு கேட்டுக்கிட்டு திரும்பிட வேண்டியதுதானே? ரசிகர்கள் கிட்டே போய் 'நான்தான் இந்தப் படத்தை எடுத்தது'ன்னு பெருமை அடிச்சுக்கணுமா?"

— வி.எஸ். கணேசன்



''அவர் ஆட்சியில் சகல அதிகாரம் பெற்று இருந்தபோதும் பின்னர் ஆட்சியை இழந்த நிலையில் ஒரு தெளிவற்ற நிலை இருந்த போதும், பலர் வெளியேற்றப்பட்டார்கள். இப்போது இதை ஒரு சவாலாகவே நான் சொல்கிறேன். பொதுக்குழுவைக் கூட்டி என்னை நீக்கியது சரி என்று தீர்மானம் போட்டுக் காண்பிக்கட்டும். அரசியலை விட்டே விலகிப் போய் விடுகிறேன்! பொதுக்குழுவைக் கூட்டும் தைரியம் உண்டா ஜெயலலிதாவுக்கு?''

சந்திப்பு : **ப்ரியன்**

பின் அட்டை வண்ணப்படம், படங்கள் : **சாய்வர்ஷா**

சுவர்ணாவிடம் சில அதிரடிக் கேள்விகள்!



உண்மை பேசக் கூடியவர்கள் ரொம்பக் குறைவு. அதிலும் சினிமா உலகில் ரொம்ப ரொம்பக் குறைவு. அவர்களில் ஒருவர் தான் சுவர்ணா. 'தாய்மனசு' படத்தில் அறிமுகமானவர். அது வெற்றிப் படமாக அமை யாததால் தமிழ்ப் படவுலகின் முன்னணி நடிகைகளில் ஒரு வராக முடியவில்லை. "தமிழில்

"ஐ லவ் யூ சொன்னால் என்ன செய்வீர்கள்?"

நடிக்கும் வட நாட்டு நடிகைகளுடன் போட்டி போட முடியவில்லை. இதுதான் நான் கன்னடப் படங்களிலும் மலையாளப் படங்களிலும் நடிப்பதற்கான உண்மையான காரணம். இருந்தாலும் தமிழில் எனக்கும் ஒரு காலம் வரும்!" என்று நம்பிக்கையோடு பேசும் சுவர்ணாவிடம் மனசுக்குத் தோன்றியபடி அதிரடியாகச் சில கேள்வி களைக் கேட்டோம்....

"ஐ லவ் யூ. நீங்களும் என்னிடம் ஐ லவ் யூ என்று சொல்லித்தான் ஆக வேண் டும். இல்லாவிட்டால் நான் தீக்குளித்து விடு வேன்' என்று பெட்ரோலும் தீப் பெட்டி யுமாக வந்து உங்கள் ரசிகர் ஒருவர் உங்களி டம் சொன்னால் என்ன செய்வீர்கள்?"

"கட்டிக் கொள்ளப் போகிறவரிடம் மட் டும்தான் 'ஐ லவ் யூ' என்று சொல்ல வேண் டுமா என்ன! உயிரையே மாய்த்துக் கொள்ளத் தயாராய் இருக்கும் ஒரு ரசிகரிடம் ஐ லவ் யூ என்று சொல்வதில் எந்தத் தவறும் இல்லை. ஐ லவ் யூ சொல்லி, ஆதரவாக அவரை அழைத்து அருகே உட்கார வைத்து நட்புடன் பேசுவேன். ஊர், பேர், குடும்பப் பின்னணி என்று அவரைப் பற்றிய முழு விவரங்களையும் விசாரித்துத் தெரிந்து கொள்வேன். பிறகு, "உங் களைப் போன்ற புத்திசாலித்தனமான இளை ஞர்களுக்கு இந்த நாட்டில் எத்தனையோ பணிகள் காத்திருக்கின்றன. இதற்கிடையில் என்னை ஐ லவ் யூ சொல்ல வைப்பதுதானா முக்கியம்? இனிமே எந்தக் காரணத்தைக் கொண்டும் தீக்குளிக்க மாட்டேன் என்று சத் தியம் செய்து கொடுங்கள் என்று அவரிடம் சத்தியம் வாங்கிக் கொண்டு அனுப்பி வைத்து விடுவேன்."

"மொட்டையடித்துக் கொண்டால் ஒரு கோடி ரூபாய் தருகிறேன் என்று யாராவது தர முன்வந்தால் என்ன செய்வீர்கள்?"

"மொட்டையடித்துக் கொள்வதில் என்ன

கஷ்டம்? மறுபடியும் முடி வளரத்தானே போகிறது! என்ன, மூன்று மாதங்களுக்கு வெளியில் தலைகாட்ட முடியாது; அவ்வளவுதானே! தாராளமாக அடித்துக் கொள்வேன். ஒரு விஷயம் தெரியுமா, பிறந்த திலிருந்து இதுவரை நான் மொட்டையடித்துக் கொண்டதேயில்லை."

"ஒரு துப்பாக்கியை உங்கள் கையில் கொடுத்து யாராவது ஒருவரை நீங்கள் தாராளமாகச் சுடலாம்; தண்டனையே கிடையாது என்றால் யாரைச் சுடுவீர்கள்?"

"எனக்கு எதிரிகளும் கிடையாது; பிடிக்காத நபர்களும் கிடையாது. இப்படியொரு கொடுமையான தீவிர வாதச் செயலைச் செய்யச் சொல்லி என்னிடம் துப்பாக்கியைக் கொடுத்த அந்த நபரைத்தான் 'ஹேண்ட்ஸ் அப்' என்று துப்பாக்கியைக் காட்டி... சுட மாட்டேன்; பயமுறுத்துவேன்."

"முந்நூறு ஆண்டுகளுக்கு மரணமே இல்லாத வாழ்க்கை அல்லது முப்பதே நாட்களுக்கு உலகத்தையே ஆட்சி செய்கிற வாய்ப்பு. இதில் எதைத் தேர்ந்தெடுப்பீர்கள்?"

"முந்நூறு வருஷ வாழ்க்கையா! சுத்த போர் அது. முந்நூறு ஆண்டுகள் வாழ்ந்து செய்கிற சாதனைகளை விட முப்பது நாட்கள் ஆட்சி செய்வதில் அதிகம் செய்யலாமே! முப்பது நாள் ஆட்சியையே தேர்ந்தெடுப்பேன்."

"தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, கடைசி ஆசை என்ன என்று கேட்டால்..."

"இறக்கை கட்டிக் கொண்டு உலகம் முழுவதும் பறந்து வர வேண்டும். விருப்பம் போல் விருப்பப்படுகிற இடங்களில் இறங்கிப் பார்க்கிற சுதந்தரமும் வேண்டும் என்பேன்."

"உங்கள் விசிறி ஒருவர் முத்தம் கேட்டால்..."

"தாராளமாகக் கொடுப்பேன் - அவர் பெண் விசிறியாக அல்லது குழந்தையாக இருந்தால்!"

"திடீரென்று நீங்கள் ஆணாக மாறிவிட்டால்..."


"அப்பா! லிப்ஸ்டிக் போட்டுக் கொள்வது - விக் வைத்துக் கொண்டு மணிக்கணக்காக ஹேர் டிரஸ் செய்து கொள்கிற வேலையெல்லாம் மிச்சம்! படப்பிடிப்புகளின் போது டிரஸ் சேஞ்ச் பண்ணுவதற்காகத் தனியிடம் தேடியலைகிற வேலையெல்லாம் இருக்காது. இதுவே சந்தோஷம்தானே! அப்புறம் மனிஷா, காஜோல், ஐஸ்வர்யா ராய் போன்ற ஹீரோயின்களை எனது ஜோடிகளாக நடிக்கச் செய்வேன்!"

"உங்கள் உடலின் சிறிய பாகம் ஒன்றை பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் மாற்றியமைத்துக் கொள்ளலாம் என்றால் நீங்கள் எதை மாற்றியமைத்துக் கொள்வீர்கள்?"

"ஐஸ்வர்யாராயின் வயிற்றுப் பகுதி போல எனக்கும் இருக்கக் கூடாதா என்று கொள்ளை ஆசை. அதுபோல **மாற்றியமைத்துக் கொள்வேன்!"**

— ஈஸ்வர்தாஸ்

வண்ணப்படம் : பிரவீண்குமார்



"அரசியல் ஈடுபாடு காரணமா இந்தக் காலத்துப் பசங்க ரொம்பக் குழப்பத்துல இருக்காப்பல தோணுது..."

"எப்படி சொல்றீங்க?"

"ஒரு பையன், 'ஏன் சார் அரிமர்த்தன பாண்டியன் குதிரைகள் வாங்க டெண்டர் நோட்டீஸ் விடாமல் மாணிக்கவாசகரிடம் பணம் கொடுத்து வாங்கி வரச் சொன்னான்'னு கேட்கறான் சார்...!"

— பாலு



"எனக்கும், இதோ அமர்ந்திருக்கும் நண்பர், கூட்டணிக் கட்சித் தலைவர் ராமருக்கும் இடையே 'சிண்டு' முடிந்து விட சிலர் முயற்சிக்கிறார்கள். இது வீண் வேலை!"

— அ.சிவகுமார்

1.1.97 அன்று நிலவரப்படி தமிழகத்தில் 14.7 இலட்சம், ஆந்திராவில் 10.73 இலட்சம், கர்நாடகம் 7.18 இலட்சம், கேரளம் 6.79 இலட்சம் பாண்டிச்சேரி 47 ஆயிரம் பேர் காத்திருக்கின்றனர்! எதற்காக என்கிறீர்களா? எல்லாம் கேஸ் இணைப்புக்காகத்தான்!

கூறியவர்: ஐ.ஓ.சி. இயக்குனர்.

தகவல்: *கதீஜா ஹனீபா*



• திராவிட் : ஒரு ஆள் போதாது!

சென்னையில் நடந்து முடிந்த இந்தியா - பாகிஸ்தான் ஒருநாள் கிரிக்கெட் போட்டியை வானொலிக்காக தமிழில் வர்ணனை செய்தவர்களில் ஒருவர் அப்துல் ஜப்பார். வர்ணனையை ரேடியோவுக்குத் தந்தவர், விமர்சனத்தை நமக்குத் தருகிறார்.

• வாஸிம் அக்ரம், யூனுஸ், முஷ்டாக் அகமது ஆகிய மூன்று மிகச் சிறந்த பந்து வீச்சாளர்களும் பாகிஸ்தான் அணியில் இல்லை. இந்த பலவீனத்தை முழுவதுமாக பாகிஸ்தான் அணி உணர்ந்தே களத்தில் இறங்கியது. 'இந்தியா முதலில் பாட் செய்தால் அது எடுக்கும் ரன்களை வேகமாக 'சேஸ்' செய்வது. நாம் முதலில் ஆடினால் இந்தியா சேஸ் பண்ண முடியாத அளவுக்கு இலக்கை நிர்ணயித்து விடுவது' என்று தீர்மானமாகச் செயல்பட்டது. வெற்றிக்கு அதுவே காரணம்.

• சச்சின் தெண்டுல்கர் ஒரு அதி அற்புதமான ஆட்டக்காரர். சந்தேகமேயில்லை. ஆனால் அவர் அந்த அளவுக்கு ஒரு சிறந்த கேப்டனா என்றால் சந்தேகம்தான். அழுத்தமான சூழ்நிலைகளில் வெற்றிகரமான முடிவுகளை எடுக்கும் முதிர்ச்சி அவரிடம் இன்னும் காணப்படவில்லை.

• என் கருத்தில் உலகிலேயே இன்றைக்குத் தலை சிறந்த காப்டன் ரணதுங்க. இந்தியாவின் காப்டனாக சஞ்சய் மஞ்ரேகர் இருக்கலாம். ஆனால் பாவம், அவர்தான் அணியிலேயே இடம் பெறவில்லையே!

• சென்னைப் போட்டியில் 328 ரன்கள் அப்படி ஒன்றும் எட்ட முடியாத இலக்கு என்று நான் சொல்ல மாட்டேன். நாற்பது ஓவர்கள் வரை 'இந்திய அணி முயன்றால் வெற்றி சாத்தியமே' என்றுதான் நான் என் வர்ணனையில் சொல்லிக் கொண்டிருந்தேன். பலமான அஸ்திவாரத்தை இந்திய வீரர்கள் போட்டார்கள். கோட்டையைக் கட்டியிருக்கலாம். ஆனால் கோட்டை விட்டு விட்டார்கள்.

“கோட்டை கட்டியிருக்கலாம்; கோட்டை விட்டு விட்டார்கள்!”



* அன்வர் : தனி ஆவர்த்தனம்

● அஃப்ரிதி 37 பந்துகளில் சதம் அடித்து சாதனை புரிந்த வீரர். அவர் ஒரு தலைவலியாக இருப்பார் என்று இந்திய அணியும், பக்க பலம் என்று பாகிஸ்தானும் கருதின. அப்படிப்பட்ட வீரரை இரண்டாவது ஓவரிலேயே இந்திய அணி வெளியேற்றியபோது, ஒன்றுமே நடக்காதது போல பாகிஸ்தான் அணியினர் நடந்து கொண்டது அவர்களது மனப்பயிற்சிக்கு உதாரணம்.

● எட்டு ஓவர்கள் ஆனதுமே கும்ப்ளேவைப் பந்துவீசக் கொண்டு வந்தது தப்பு.

● கண்டபடி அடித்து ஆடுவது எப்போதுமே வெற்றி தராது. ஜெயசூர்யா, அரவிந்த் டி சில்வா போன்றவர்கள்கூட முறையான கிரிக்கெட் ஷாட்ஸ்தான் ஆடுவார்களே தவிர, சும்மா விளாச மாட்டார்கள். இதை மிகத் திறமைசாலியான ஜடேஜா போன்றவர்கள் உணர்ந்து கொள்வது நல்லது.

● அதேபோல இருமுனையில் இருப்பவர்களும் அடித்து ஆடுவது என்பது சரியான அணுகுமுறை ஆகாது. ஒருமுனையில் அன்வர் ரன்களை வாரிக் குவித்துக் கொண்டிருக்க, மறுமுனையில் ரொம்ப நேரம் நின்று இருபத்திரண்டு ரன்களை மட்டுமே எடுத்துக் கொண்டிருந்தார் ரமீஸ்ராஜா. அதுவும் ஒன்று, இரண்டு ரன்களாகவே. ஒரு பவுண்டரிகூட அடிக்கவில்லை! இது சரியான அணுகுமுறை என்றே நான் சொல்வேன்.

அன்வரைத் தனி ஆவர்த்தனம் செய்ய விட்டு மற்றவர்கள் அடக்கி வாசித்தார்கள்.

• அப்துல் ஜப்பார்



ஆனால், நமது ஆட்டக்காரர்கள், ஆளுக்கு ஆன லயவின்யாசம் செய்ய முயன்றார்கள். வெற்றியின் தலைவாசல் வரை போய் தடுக்கி, தலைகுப்புற விழுவதென்பது இந்திய அணியை இப்போது பீடித்துள்ள சாபம்.

● திராவிட் நன்றாகவே ஆடினார். காமா சோமா ஆட்டமில்லை. எனினும் ஒரு திராவிட் போதாதே!

தன் பலவீனத்தை நன்கு உணர்ந்து அதையே தன் பலமாக மாற்றிக்கொண்டது பாகிஸ்தான். தன் பலத்தை நன்கு உணர்ந்திருந்தும் பலவீனப்பட்டுப் போனது இந்தியா.

இதுதான் சென்னை மாட்ச்.

சந்திப்பு : **ராணிமைந்தன்**

படங்கள் : **சாரி**


கல்கி-பாலு ஜூவல்லர்ஸ்

இணைந்து வழங்கும்

சீர்வரிசை ஜோக்

போட்டி - 5

முடிவு



"மாப்பிள்ளை வீட்டுக்காரங்க ஒரே ஒரு ரூபாய்க்கு சீர்வரிசை செஞ்சாப் போதும்னு சொன்னாங்களாம். பொண்ணு வீட்டுக் காரங்க பயப்படறாங்க."

"இதில பயப்பட என்ன இருக்கு?"

"அட நீங்க ஒண்ணு. மாப்பிள்ளையோட அப்பா பழைய மந்திரி."

— எஸ். திருமலை

"50 ஆயிரம் ரொக்கம் 50 பவுன் நகையும் போடச் சொன்னோம்...!"

"அவங்க என்ன போட்டாங்க?"

"போலீஸ்கிட்ட சொல்லி விலங்கு போட்டாங்க!"

— எம். வேலவன்

"என்னங்க சீர்வரிசை தட்டுல ஒரு பேப்பர் இருக்கு, சொத்து பத்திரமா?"

"சொத்து பத்திரமல்ல. மாப்பிள்ளை அரசியல்வாதி என்பதால் மாமனார் முன் எச்சரிக்கையா 'முன் ஜாமீன்' மனுவையும் வாங்கி வெச்சிருக்கார்!"

— வி. பாலாஜி

"பிள்ளை வீட்டார் கேட்ட சாமான்களெல் லாம் வாங்கியாச்சா?"

"ஓ. லிஸ்ட்படி எல்லாம் ரெடி பண்ணிட் டேன். எனக்கு எடுக்க வேண்டிய காஷாயம், உருத்திராட்சம், திருவோடு மூன்றும்தான் பாக்கி."

— எம். மும்தாஜ்


"ஹலோ, சம்பந்தியா? நாங்க சீர்வரிசை களை எல்லாம் ஏத்தி அனுப்பிச்ச 'வேன்' இன்னும் இங்க திரும்பி வந்து சேரலியே..."

"அப்ப, 'வேன்' 'எங்களுக்கே எங் களுக்கு' இல்லையா?"

- லெ. நா. சிவகுமார்

"ஏங்க பொண்ணுக்கு நூத்தியொரு பவுன் நகை, வெள்ளிப் பாத்திரம், ஸ்கூட்டர், கட்டில், பீரோ, தனிக்குடித் தனத்துக்கு சாமான், ரெண்டு நாள் கல்யாணம்...'னு தரகர் மூலமா கேட் டிறாங்களே. மாப்பிள்ளை அப்படி என் னங்க பண்றாரு?"





"இதையெல்லாம் வெச்சுத்தான், இனிமே புதுசா தொழில் ஆரம்பிக்கப் போறாராம்!"

– ரா. பிரபு

"என்னப்பா இது, முதலமைச்சர் வீட்டுக் கல்யாணம் மாதிரியே தெரியலையே; சீர்வரிசை எல்லாம் பித்தளைப் பாத்திரங்களா இருக்கு!"

"நீ ஒண்ணு, வீடியோ படம் எடுத்து ஏதாவது சி.பி.ஐ. பிரச்னையாயிடும்னு தங்கப் பாத்திரங்களுக்கு எல்லாம் பித்தளை முலாம் பூசி வச்சிருக்காங்க."

- பூவை சுபாவாணன்

"பிள்ளைக்கு அப்பா ஏன் சத்தம் போடுறார்?"

"ஒரு லாரி சாமான் சீர் தருவதாகக் கூறி விட்டு மண்பாண்டங்களாகக் கொடுத்து விட்டார்களாம்."

– எம். விசாலாட்சி

"சம்பந்தி உங்க பொண்ணுக்கு, நிறைய சீர்வரிசை கொடுக்கறீங்க, உண்மைதான். அதுக்காக கல்யாணப் பத்திரிகையில் உங்க பேருக்கு முன்னாடி 'சீர்வரிசை செம்மல்'ன்னு போட்டுக்கிட்டது நல்லாயில்லே."

– கே. யுவராஜ்

"என்னங்க இது... சீர்வரிசைல ஒரு ஜோடி 'பல்செட்'டும் வெச்சிருக்காங்க...?!"

"மாப்பிள்ளையோட அறுபதாம் கல்யாணத்துக்கான சீரையும் இப்பவே தந்துடணும்னு பிள்ளை வீட்டுக்காரங்க கண்டிப்பா சொல்லிட்டாங்களாம்... அதான்..."

– ஜெயாப்ரியன்

"மாப்பிள்ளை ஏன் கோபமாய் இருக்கார்?"

"பெண்ணோட அப்பா இன்வெஸ்ட்மென்ட் பைனான்ஸ் கம்பெனி நடத்துகிறார். அதனால் சீர்வரிசையெல்லாம் மூன்று வருட பின் தேதியிட்ட காசோலை மூலமாகத்தான் கொடுப்பேன் என்கிறாராம்."

- கே. மனோகர்

"சீர்வரிசை கொடுத்துக் கட்டுப்படி ஆகாது. இந்தக் கல்யாணத்தை நிறுத்தி விடலாம்கிறீங்களே. அப்படி என்ன காஸ்ட்லியா கேட்டுட்டாங்க?"

"சீர் கொடுக்கிற பாத்திரங்கள் எல்லாத்திலேயும் மெட்ரோ வாட்டர் ரொப்பித் தரணும்னு சொல்றாங்களே!"

- வி. பரமசிவம்



பிரசுரமாகியுள்ள ஒவ்வொரு ஜோக்கும் ரூ. 100 பரிசு பெறுகிறது...

'BAR' புகழும் சென்னை!



ஒயின் ஷாப்புகளில் 'பார்' நடத்தக்கூடாது என்று அறிவித்து, நாளிதழ்களில் பத்தி பத்தியாய் அறிக்கை தந்து, தீவிர வேட்டையில் ஈடுபட்டிருப்பதாகச் சொன்னது காவல்துறை.

லைசென்ஸ் வழங்கப்பட்ட 'பார்'கள் தவிர, வேறு பார்கள் எதுவும் இப்போது இயங்குவதில்லை என்று அறிவித்தார்கள்.

அது உண்மைதானா? ஒயின்ஷாப் ஓனர்கள், காவல்துறையின் கட்டளையைச் சிரமேற்கொண்டு தம் கடைகளின் அட்டாச்டு பார்களை மூடி விட்டார்களா?

ஒரு விஸிட் அடித்து வரலாம் என்று சில 'குடி மக்களான' நண்பர்கள் துணையுடன் சென்னை நகரின் பல பகுதிகளில் இயங்கும் ஒயின் ஷாப்களுக்குப் புறப்பட்டோம்.

அதிர்ச்சி தரும்படியாக ஏதுமில்லை. எதிர்பார்த்ததுதான். சில அத்தியாவசிய மாறுதல்களுடன் பார்கள் இன்னும் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

முன்பெல்லாம், கடைக்குப் பின்புறம் விஸ்தாரமான அறை அல்லது வெட்டவெளியில் நாற்காலி, மேசைகள் போடப்பட்டு, ஃபேன் காற்று குளிர்விக்க, கஸ்டமர்களை கவனிக்கப் பையன்கள் வேறு இருப்பார்கள்.

மது தவிர அவர்கள் கேட்கும் குளிர் பானங்கள், சைட்-டிஷ் வகையறாக்கள், சிகரெட் போன்றவற்றை சப்ளை செய்து, கணிசமாக டிப்ஸூம் பெற்று, கிட்டத்தட்ட ஹோட்டல் மாதிரியே இருக்கும்.

இப்போது இதில் மாற்றம். மேசை, நாற்காலிகள் எங்கும் கிடையாது. ஃபேன், சப்ளை செய்யும் பையன்கள் எல்லாம் அவுட். மாறாக, அவரவர் தாமே சவுண்ட்டரில் வாங்கி, உடைத்து, கிளாஸில் ஊற்றி, மதுக்கடைகளின் பின்புறமுள்ள சுவரை ஒட்டினாற்போலிருக்கும் மர ஸ்லாபில் வைத்து, நின்றபடியே குடித்துவிட்டு, நடையைக் கட்ட வேண்டியது தான்! அசப்பில், ஒரு ஃபாஸ்ட் ஃபுட் கடை தோற்றம் கிடைக்கிறது எங்கும்!

குடிமகன்களின் இயக்கமும் ரொம்ப ஃபாஸ்ட்! இந்த மட்டும் நின்றபடிக்காவது குடிக்க முடிகிறதே என்கிற நிம்மதியில் பலர், கடை வாசலிலேயே - தண்ணீர்ப் பந்தலில் நீர் மோர் வாங்கிச் சாப்பிடுவது போல - ஏக் தம் - விழுங்கிவிட்டு, நடையைக் கட்டுவதைக் காண முடிந்தது!



'பார்' விஷயத்தில் சமீப காலமாக ஒரு நூதன பரிமாணம் எழுந்திருப்பதையும் கண்டோம்.

ஒயின் ஷாப்புகளுக்கு அருகே உள்ள பெட்டிக்கடைகள் இப்போது மினி பார்களாக இயங்கத் தொடங்கி உள்ளன. கடையில் சரக்கு வாங்கியவுடன், குடிமக்கள் அருகிலுள்ள பெட்


டிக்கடைகளில் தஞ்சம் புகுகிறார்கள்.

பெட்டிக் கடைக்காரர் பாட்டிலை வாங்கி, தாமே உடைத்து, தம் கடையிலிருந்து சோடா ஊற்றிக் கலக்கித் தர, அவருக்கும் வியாபாரத்துக்கு வியாபாரம்; 'சேவை'க்கு சேவை! (இப்படி உள்ளே வாங்கி, கலக்கிற சாக்கில் பெட்டிக்கடைக்காரர்கள் 'கொஞ்சம் போல்' அடித்து விடுவதும் நடக்கிறதாம்! - புலம்பினார் ஒரு குடிமகன்.)

என்னதான் செய்கிறது காவல்துறை?

"ஒழித்துவிட்டதாகச் சொல்வதெல்லாம் சும்மா. அது சாத்தியமே இல்லை. வழக்கம் போல் மாமூல் தொடர்கிறது. பிஸினஸ் செழிக்கிறது" என்றுதான் எல்லா இடங்களிலும் சொன்னார்கள்.

குறிப்பிட்ட நேரத்தில் ஏரியா இன்ஸ்பெக்டர் ரவுண்ட்ஸ் வருவார் என்பது எல்லா கடைக்காரர்களுக்கும் தெரிந்து இருக்கிறது. அந்தச் சமயத்தில் மட்டும், "இடத்தை காலி பண்ணுங்க" என்று கஸ்டமர்களுக்கு அபாய அறிவிப்பு தந்து விடுகிறார்கள். அப்படியே ரொம்ப ஸ்ட்ரெயிட் ஃபார்வர்ட் இன்ஸ்பெக்டராக இருந்தாலும் ஆதாரங்கள் இருக்கக் கூடாது என்று பல இடங்களில் இப்போது கண்ணாடி தம்ளர்களுக்குப் பதில்



டிஸ்போஸபிள் பேப்பர் தம்ளர்கள்தான் தருகிறார்கள், ஊற்றிக் குடிக்க!

"போற வழியில் எங்கனா போட்டுட்டுப் போயிடுங்க" என்று அறிவுரை வேறு.

இன்ஸ்பெக்டர்கள் ரவுண்ட்ஸ் தவிர அவ்வப்போது சாதா போலீஸ்காரர்களின் 'ரவுண்டஸ்' வேறு.

"பத்து, இருபது, அம்பதுன்னு கணக்கு சரியா குடுத்துட்டா பிரச்னை வராது" என்கிறார்கள்.

இதையெல்லாமும் தாண்டி யாராவது உயர் போலீஸ் அதிகாரிகள் ரவுண்ட்ஸ் வருவதாக இருந்தால், மாமூல் பெறும் ஏரியா காவலர்கள் மூலம் முன்னதாகவே கடைகளுக்குத் தகவல் வந்து விடுகிறதாம்!

சுகமாக, நிதானமாக, ஆர அமர உட்கார்ந்து குடிக்கிற நிலை மாறி விட்டது என்பது மட்டும்தான் நிஜம். துக்குளியூண்டு இருட்டு அறையில் அபாரமான துர்நாற்றங்களுக்கு நடுவே, அசுத்தங்களைப் பொருட்படுத்தாமல் நின்றபடி மூக்கைப் பிடித்துக் கொண்டு குடித்துவிட்டுப் போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள். சில தீவிரக் குடிமகன்கள் அங்கேயே வாந்தியெடுத்து, விழுந்து கிடப்பார்கள். அதையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். (அத்தகையவர்களைத் தட்டியெழுப்பி, அனுப்ப சிறப்புப் பயிற்சி பெற்ற பையன்கள் எல்லா கடைகளிலும் இருக்கிறார்கள்.)

மாறாக, மிகச் சில இடங்களில் மட்டும் எந்த பயமும் கவலையும் இன்றி, முன் போலவே மேசை, நாற்காலி, பிற வசதிகளோடு பார் அட்டாச்ட் கடைகள் இன்னும் இயங்குகின்றன. அவையெல்லாம் 'பெரிய இடத்து'க் கடைகள் என்கிறார்கள். (நாம் பார்த்தவரை அசோக்பில்லர் அருகில் ஒன்றும் மேற்கு மாம்பலம் சீனிவாசா தியேட்டர் அருகில் ஒன்றும் சாஸ்திரிபவன் அருகிலும், இப்படியான 'சுதந்தர பார்கள்' இருக்கின்றன.)

சாஸ்திரி பவனை ஒட்டிய கடைப்பகுதி ஒன்றில், கிராமத்து தோப்பு வீடு ஸ்டைலில், கீற்றுக் கொட்டகை, மேசை நாற்காலி சகிதம் பக்காவாக நடக்கிறது

'கச்சேரி'!

— நமது நிருபர்





8

தமிழில் : ரா. கி. ரங்கராஜன்

விதி விளையாடுகிறதா என்ன?

பேஜுக்குத் தலைசுற்றியது. தான் போகும் இடத்தின் டெலிபோன் நம்பரைக் கையகலக் குறிப்பு நோட்டில் எழுதி வைப்பது பிராடின் வழக்கம். இன்று மட்டும் ஏன் மறந்து போனார்?

ஆனால் இப்போது அதைப் பற்றி யோசனை செய்ய நேரமில்லை. பிற்பாடு பிராடின் ஆபீஸில் யாருக்காவது போன் செய்து கேட்டுக் கொள்ளலாம்.

இப்போது... இப்போது...

திரும்பவும் டெலிபோன் மணி அடித்தது. பாய்ந்து சென்று எடுத்தாள்.

"மிஸஸ் பிராட், புறப்பட்டு விட்டீர்களா?" என்று முதலில் கூப்பிட்ட அதே நெடுஞ்சாலைப் போலீஸ் அதிகாரி கேட்டார். "ஸீரியஸான கேஸ், மேடம்."

"இதோ கிளம்புகிறேன்," என்றாள். 'ஸீரியஸ்' என்றால் என்ன அர்த்தம்? எந்த அளவுக்கு ஸீரியஸ்? ஆலிஸன் உயிரோடு இருக்கிறாளா, அல்லது...

"விபத்து எப்படி, எங்கே நடந்தது? என் பெண் உயிரோடுதான்..." அவளால் பேச முடியவில்லை. தொண்டை பரிதாபமாக அடைத்துக் கொண்டது.

"உயிரோடு இருக்கிறாள். ஆனால் ஆஸ்பத்திரிக்கு வந்தபோது நினைவு இல்லை. இவர்கள் மரீன் கவுன்ட்டிக்குப் போன காரும் எதிரே வந்த இன்னொரு காரும் நேருக்கு நேராக மோதிக் கொண்டு விட்டன, கோல்டன் கேட் பாலத்தில்..." என்றார் போலீஸ் அதிகாரி.

"மரீன் கவுன்ட்டிக்குப் போனார்களா? இருக்காதே? அந்தப் பக்கம் போகப் போவதாக என் பெண் சொல்லவில்லையே!" என்றாள் பேஜ். இவர்கள் ஏதோ தப்பாகச் சொல்கிறார்களோ? அப்படியானால் இது ஆலிஸனாகவே இருக்காது... அவளுக்கு எதுவும் நேர்ந்திருக்காது....

பேஜின் இதயத்தின் மூலையில் ஒரு அசட்டு நம்பிக்கை பிறந்தது.

ஆனால் அது உடனே பொய்த்தது. "இல்லை, மேடம். அவர்கள் மரீன் கவுன்ட்டிக்குத்தான் போய்க் கொண்டிருந்தார்கள். இப்போது மரீன் ஜெனரல் ஆஸ்பத்திரியில் உங்கள் மகள் இருக்கிறாள். உடனே வாருங்கள்," என்றார் போலீஸ் அதிகாரி.

"ஐயோ கடவுளே! இதோ வருகிறேன்," என்றவள், மரீன் ஜெனரல் ஆஸ்பத்திரியின் டெலிபோன் நம்பரைக் கண்டுபிடித்து, தகவல் பிரிவுக்குக் கூப்பிட்டாள்.

அவளுடைய கேள்விகளுக்குப் பதில் கிடைத்தது.

ஆமாம், மேடம். ஆலிஸன் இங்கேதான் இருக்கிறாள். ஆம், உயிரோடு இருக்கிறாள்... இல்லை, இதற்கு மேல் எங்களுக்கு விவரம் தெரியாது... ஊகூம். டாக்டர்கள் யாரையும் கூப்பிடுவதற்கில்லை... எல்லாரும் அங்கே ஆலிஸனுக்குச் சிகிச்சை செய்து கொண்

டிருக்கிறார்கள். ஆமாம், அபாயமான நோயாளிகள் பட்டியலில்தான் ஆலிஸனின் பெயர் இருக்கிறது...

கண்களிலிருந்து வெள்ளமாய்க் கொட்டியது கண்ணீர். கைகள் பயங்கரமாய் நடுங்கின.

அகப்பட்ட உடையை மாட்டிக் கொண்டாள். கிளம்ப வேண்டியதுதான். ஆனால் சிறுவன் ஆண்டியை யாரிடமாவது விட்டு விட்டுப் போக வேண்டுமே?

பக்கத்து வீட்டில் இருக்கும் சினேகிதி ஜேனுக்குப் பரபரவென்று போன் செய்தாள். நான்கு தடவை மணி அடித்த பின்னரே எடுத்தார்கள். பேஜுக்கு விம்மல் வெடித்துக் கொண்டு வந்தது. தெய்வமே, காப்பாற்று. நான் ஆஸ்பத்திரிக்குப் போகும் வரை ஆலிஸன் உயிரோடு இருக்க வேண்டும்....

"ஹலோ," தூக்கக் கலக்கமான குரல், மறு முனையில் கேட்டது.

"ஜேன்! உடனே இங்கே வாயேன்," என்று சொல்வதற்குள் அவளுக்கு மார்பு அடைத்தது. மூச்சு நின்று விடும் போல் இருந்தது. மயக்கம் போட்டு விழுந்து விடுவோமோ? ஆலிஸன்... அவளுக்கு ஏதேனும் நேர்ந்து விட்டால்...

"என்ன, பேஜ்? என்ன விஷயம்?" என்றாள் ஜேன். அவளுக்குப் பேஜுடன் வெகு நாளாகப் பழக்கம். அவள் இப்படிக் கலவரப்பட்டுப் பார்த்தது கிடையாது. "என்ன ஆச்சு? உனக்கு உடம்பு சரியில்லையா? வீட்டில் யாராவது..." திருடன் கிருடன் வந்திருப்பானோ என்ற சந்தேகத்தை ஜேன் வாய் விட்டுச் சொல்லவில்லை.

"யாரும் இல்லை... ஆலிஸன்..." எலிக் குஞ்சு மாதிரி அவள் குரல் கிறீச்சிட்டது. "ஆலிஸனுக்குக் கார் விபத்து... மரீன் ஜெனரல் ஆஸ்பத்திரியில் அபாயமான நிலைமையில் இருக்கிறாள். பிராட் ஊரில் இல்லை. ஆண்டியைத் தனியே விட்டு விட்டுப் போக வேண்டும்...."

"அடக் கடவுளே! இதோ இரண்டு நிமிஷத்தில் அங்கே வருகிறேன்," என்றாள் ஜேன்.

பேஜ் மாட்டிக் கொண்டிருந்த உடை பழசு. அங்கங்கே ஓட்டைகள் ஏற்பட்டிருந்தன. அவளுக்கு அதைக் கவனிக்க நேரமில்லை. பரட்டையாய்க் கலைந்திருந்த முடியை அழுத்தி விட்டுக் கொண்டாள். கைப்பையை எடுத்துக் கொள்ளவும் அழைப்பு மணி அடிக்கவும் சரியாயிருந்தது. கதவைத் திறந்ததும் ஜேன் அவளை இறுக அணைத்துக் கொண்டாள்.

"ஆலிஸனுக்கு ஒன்றும் இருக்காது. எதுவும் நேராது, பேஜ். பதற்றப்படாதே. இப்படித்தான் யாராவது ஏதாவது பயமுறுத்தலாய்ச் சொல்வார்கள். அப்புறம் பார்த்தால் ஒன்றும் இருக்



காது. அமைதியாயிரு," என்றாள்.

பேஜ் இந்த வீட்டுக்குக் குடிவந்தது முதல் ஜேனுக்கும் அவளுக்கும் சினேகிதம். அப் போது ஆலிஸனுக்கு ஏழு வயது. ஆண்டி பிறக்கவில்லை.

தானே பேஜை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல அவள் நினைத்தாள். ஆனால் அவள் வீட்டிலும் யாரும் இல்லை. விடுமுறைக்காக வந்திருந்த இரண்டு குழந்தைகளை அழைத்துக் கொண்டு அவள் கணவன் வெளியூர் போயி ருந்தான். ஆண்டியைப் பார்த்துக் கொள்ளும் படி வேறு யாரிடமாவது சொல்லலாம் என் றால் யாரும் இல்லை.

"நான் என் வீட்டைப் பூட்டிக் கொண்டு வந்திருக்கிறேன். இங்கே இருந்து கொள்கிறேன், ஆண்டிக்குத் துணையாக," என்றவள் ஆண்டி யைப் பார்த்தாள். நடந்தது, நடப்பது எதையும் அறியாதவனாக அந்தச் சிறுவன் நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தான். "இவன் விழித்துக் கொண்டு கேட்டால் என்ன சொல்லட்டும், பேஜ்?"

"ஆலிஸனுக்கு உடம்பு சரியில்லை என்று மட்டும் சொல்லு, போதும். நான் அவளை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போயிருக்கிறேன் என்று சொல்லு. ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்த்து அங்கே நிலைமை எப்படி இருக்கிற தென்று போன் பண்ணுகிறேன். பிராட் போன் பண்ணினாரானால் முதலில் அவருடைய டெலிபோன் நம்பரைக் கேட்டு வைத்துக் கொள். இப்போ அவர் எங்கே இருக்கிறா ரென்றே தெரியவில்லை."

"சரி, நீ போ. காரை ஜாக்கிரதையாய் ஓட்டு. பதற்றப்படாதே."

கூந்தல் காற்றில் பறக்க, கைப் பையை மார் போடு அணைத்துக் கொண்டு, காரிடம் ஓடி, ஒரே தாவலில் திறந்து ஏறி, அந்த நடுராத்திரி நேரத்தில் பறந்தாள் பேஜ். பதற்றப்படாதே. மெதுவாய் மூச்சு விடு. ஆலிஸனுக்கு ஒன்றும் நேர்ந்திருக்காது. கடவுள் இருக்கிறார். தைரிய மாய் இரு. தெய்வமே, என் குழந்தையைக் காப்பாற்று...

வழி பூரா இப்படித் தனக்குத் தானே சொல்லிக் கொண்டு காரை ஓட்டினாள். அப் படியும் கூட நடப்பதெல்லாம் நிஜம்தானா அல்லது சொப்பனமா என்று குழப்பமாகவே இருந்தது.

எட்டு நிமிடத்தில் ஆஸ்பத்திரியை அடைந்தாள். கிடைத்த இடத்தில் காரை நிறுத்தினாள். கார் சாவியைக் கூட அப்படியே விட்டு விட்டுக் கட்டடத்துக்குள் ஓடினாள்.

எமர்ஜென்ஸி பிரிவில் விளக்குகள் ஜகஜ் ஜோதியாய் எரிந்து கொண்டிருந்தன. ஜனங் கள் வேகமாக வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தார்கள். சிலர் அருகிலிருந்த அறைக்குள்ளிருந்து விரைந்து வெளிப்பட்டு எங்கோ சென்றார்கள். வேறு சிலர் உள்ளே நுழைந்தார்கள். ஒரு நிறைமாத கர்ப்பிணி, கணவனின் தோளில் சாய்ந்தவாறு வேதனை யுடன் முனகிக் கொண்டு சென்றாள். சிலர் டாக்டர்களின் வருகைக்காக பெஞ்சில் காத் துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

ஆனால் இது எதுவும் பேஜின் கண்ணில் படவில்லை.

என் குழந்தை... என் பேபி... என் ஆலிஸன்... எங்கே இருக்கிறாள்? எப்படி இருக்கிறாள்?

பத்திரிகை நிருபர்கள் இரண்டு பேர் ஒரு நெடுஞ்சாலைப் போலீஸ்காரரிடம் ஏதோ கேட்டுக் குறிப்பு எடுத்துக் கொண்டிருப்பது கண்களில் பட்டது.

'தகவல்கள்' என்ற அறிவிப்புடன் இருந்த மேஜைக்கு ஓடி, அங்கிருந்த நர்ஸிடம், "ஆலி ஸன் எங்கே இருக்கிறாள்?" என்று கேட்டாள்.

நர்ஸ் அவளை ஏறிட்டுப் பார்த்தாள். சவம் போல வெளுத்திருந்த பேஜ் காலோடு தலை பதறிக் கொண்டிருப்பதைக் கண்டு அந்த நர்ஸுக்கு அளவற்ற பரிதாபம் ஏற்பட்டது.

அருள்வாக்கு

நாம் ஒரு விவாஹம் செய்கிறோம், உபநயனம் செய்கிறோம், ஸீமந்தம் செய்கிறோம் என்றால், அதற்கு இரண்டு நாள் முந்தி பாஷ்யக்ஞரான வேத பண்டிதரை வர வழைத்து, அதிலே பிரயோகமாகிற மந்திரங் களுக்கு என்ன அர்த்தம், சடங்குகளுக்கு என்ன தாத்பரியம் என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். கர்மாவைப் பண்ணுகிறபோதே கேட்டுத் தெரிந்து கொள்வதென்றால் 'டயம்' (பொழுது) இருக்காது. முன்னாடியே தெரிந்து கொண்டால்தான், மனஸிலும் ஊறும்; கர்மா பண்ணுகிறபோது அதில் மனஸாரப் பிடிப்பும் இருக்கும்.

இப்போது நடக்கும் கல்யாணங்களில் ஒரு மாஸத்துக்கு முன்கூட அவகாசம் இருப்பதில்லை. யார் பாண்ட் (Band) வைக்கலாம், யார் டான்ஸ் வைக்கலாம், எப்படி ஊர்வலம் விடலாம் என்று ஏற்பாடு பண்ணுவதற்கே காலம் போதமாட் டேன் என்கிறது! எதுதான் இத்தனைக்கும் உயிர் நிலையோ, எதை வைத்துத்தான் கல்யா ணமோ, அந்த மந்திரங்களையும், அவற்றைச் சொல்லி நடத்தி வைக்கும் வைதிகர்களையும் தான் கடைசி பக்ஷமாக வைத்திருக்கிறோம்! யாருக்காவது சிரத்தை ஏற்பட்டு, அவகாசமும் கிடைத்து, தான் செய்ய வேண்டிய கர்மாக் களின் மந்த்ரார்த்தங்களைத் தெரிந்து கொள்ளப் பிரியப்பட்டால், அதைச் சொல்லி விளக்குவதற் குச் சிலரையாவது தயார்ப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான், வேத பாஷ்யம்



சொல்லிக் கொடுத்து பரீக்ஷைகள் நடத்துகிறோம்.

விவாஹம், உபநயனம் என்று ஒரு கர்மாவின் பெயரைச் சொல்லிப் பத்திரிகை போட்டு, அதற்காக ஊர் கூட்டி, பந்துக்களை வரவழைத்து, ஆயிரக்கணக்கில் செலவும் செய்கிறோம். ஆனால், அந்தக் கர்மாவுக்கு உரிய கவனத்தைச் செலுத்துவதில்லை. அதன் அர்த்தம் என்ன, தாத்பரியம் என்ன என்பதையே தெரிந்து கொள்ள முயலுவதில்லை என்றால், அது சரியேயில்லை.

அர்த்தம் தெரிந்து செய்தால்தான் பலன் ஜாஸ்தி என்று சொல்லியிருக்கிறது. கர்மாவை விட்டு விடுகிற துணிச்சல் வராமல் இன்னமும் பண்ணிக் கொண்டிருக்கிறவர்கள், அர்த்தத்துக்கான முக்யத்வத்தைக் கொடுக்கத்தான் வேண்டும். கர்மாவை விட்டு விட்டால் தப்பு என்று ஏதோ ஒரு பயம் இருப்பதால்தானே, இன்னமும் செய்து வருகிறோம்? அதே மாதிரி, இதற்கு அர்த்தம் தெரியாமல் செய்தாலும் தப்பு என்ற பயம் ஏற்பட்டு, பண்டிதர் மூலமாக அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். கர்மாவைச் செய்கிறவர்கள் அர்த்தம் தெரிந்து செய்தாலே அதன் பலனுக்குள்ள வீரியமும் ஜாஸ்தியாகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

"நீங்கள் ஆலிஸனின் அம்மாவா?"

"ஆமாம்... அவளுக்கு... ஒன்றும்..." பேஜின் தேகம் மேலும் மேலும் நடுங்கியது.

"உயிரோடு இருக்கிறாள்," என்று அந்த நர்ஸ் தைரியம் கூறினாள். எந்த நிமிடத்திலும் பேஜ் விழுந்து விடுவாள் என்று தோன்றவே, மேஜையைச் சுற்றி எழுந்து வந்து அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள். "ஆனால் அவளுக்கு ரொம்ப ரொம்பப் பலமான காயம். அதுவும் தலையில் கடுமையான அடி. நியூரோ சர்ஜன்கள் குழு அவளுக்குச் சிகிச்சை தந்து கொண்டிருக்கிறது. தலைமை டாக்டர் வர வேண்டுமென்று காத்திருக்கிறோம். அவர் வந்ததும் உங்களுக்கு முழுத் தகவல் தருகிறோம். இப்போதைக்கு ஆலிஸன் தாக்குப்பிடித்துக் கொண்டிருக்கிறாள்," என்று சொல்லிவிட்டு, பேஜைக் கைத்தாங்கலாக அழைத்துப் போய் ஒரு நாற்காலியில் உட்கார்த்தி வைத்தாள். "ஒரு கப் காப்பி வரவழைக்கட்டுமா, மிஸஸ் பிராட்?"

வெகு கஷ்டப்பட்டு அழுகையை அடக்கிக் கொண்டு வேண்டாம் என்று தலையை அசைத்தாள் பேஜ்.

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் உலகம் எத்தனை தலைகீழாக மாறி விட்டது? என்னவோ சொன்னாளே அந்த நர்ஸ்... என்ன? நியூரோ சர்ஜன்கள்... நியூரோ சர்ஜன்களின் குழு... நர்ஸ் சொன்னதையெல்லாம் மனசில் வாங்கிக் கொள்ள முயன்றாள். அவளையுமறியாமல் கண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது. ரொம்பக் கடுமையான காயம் என்றாளே.... என்ன நடந்தது? எப்படி நடந்தது?

"மிஸஸ் பிராட்... அமைதியாயிருங்கள்..." என்று அந்த நர்ஸ் கிளிப் பிள்ளை மாதிரி திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அமைதியாகவா? எப்படி அமைதியாக இருப்பது? கைக்குட்டையால் மூக்கையும் கண்ணையும் துடைத்துக் கொண்டாள். கடியாரத்தைப் பின்னுக்குத் தள்ள முடிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! சொன்ன நேரத்துக்கு வீடு திரும்பவில்லை என்று குழந்தையை எத்தனை கோபமாய்த் திட்டிக் கொண்டிருந்தேன்! நான் திட்டிக் கொண்டிருந்த அதே நேரம் அவள் தலையில் அடிபட்டு, நினைவு நீச்சில்லாமல்... ஐயோ! நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை...

ஒருவழியாய்ச் சுதாரித்துக் கொண்டு, "வேறு யாருக்கேனும் அடிபட்டதாமா?" என்றாள்.

"காரோட்டி இறந்து விட்டதாகத் தெரிகிறது. இன்னொரு சின்னப் பெண்ணுக்கும் பலமான காயம்," என்றாள் நர்ஸ்.

"ஐயோ கடவுளே!" என்று வாய்விட்டுக் கூவி விட்டாள் பேஜ்.

தாரென்ஸன் இறந்து விட்டாரா? க்ளோவையும் ஆலிஸனையும் அவர்தானே காரில் அழைத்துப் போனார்? அவர் பலியாகி விட்டாரா...? என்ன அநியாயம்...!

- என்று அவள் பதறிக் கொண்டிருந்த போது எதிரில் வந்து கொண்டிருக்கும் உருவத்தைக் கண்டாள்.

இது... இவர்... தாரென்ஸன் மாதிரி அல்லவா இருக்கிறது? ஆம். தாரென்ஸனேதான். காரோட்டி இறந்து விட்டாரென்று நர்ஸ் சொன்னாளே? எப்படி இது சாத்தியம்? எல்லாமே பொய்யா? யாரோ குரூரமாக ஜோக் பண்ணிக் கொண்டிருக்கிறார்களா? அல்லது மொத்தமும் ஒரு கெட்ட கனவா? அல்லது எனக்குத்தான் பைத்தியம் பிடித்துக் கண்டபடி கற்பனை செய்து கொள்கிறேனா?

இல்லை, நடப்பதெல்லாம் உண்மைதான் என்று சொல்வது போல அவள் எதிரில் வந்து நின்றான் தாரென்ஸன். அவன் கன்னங்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

(தொடரும்)



தங்க ரதம் வந்தது வீதியிலே...!

பா.ஜ.க.வினர்

இம்முறை, "சுவர்ண ஜெயந்தி யாத்திரை" ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மும்பையின் அகஸ்த் கிராந்தி மைதானத்தில் துவங்கிய யாத்திரை, 10 மாநிலங்களையும், 2 யூனியன் பிரதேசங்களையும், 55 நாட்களில் வலம்வர உள்ளது. டாடா 709E தான் இந்தத் தங்கரதம். முன்பக்கத்தில் ஒளிவிளக்கேந்திய விவசாய தம்பதி, பின்பக்கம் காந்தியடிகள் தண்டியாத்திரை, பக்கங்களில் திலக், படேல் போன்ற தலைவர்கள், மத்தியில் கட்டபொம்மனின் கட்-அவுட் (தமிழர் ஸ்பெஷல்?)! – வேகாத வெயிலில் என்ன வேண்டியிருக்கிறது யாத்திரை என்கிறீர்களா? அத்வானிக்கென்றே பிரத்யேக 8'X7' கேபினில், ஸோஃபா-கம்-பெட், குட்டி மேஜை, டிரான்சிஸ்டர், ஃப்ரிட்ஜ், ஏ.ஸி. எல்லாமே உண்டு! இத்தனையுமிருந்தாலும், ராம்ஜென்ம பூமி யாத்திரைக்கு இருந்த வரவேற்பு இதற்கிருக்குமா என்பது சந்தேகம் தான்!

விரத காலம்

இது 'அம்மா'க்களின் விரத சீஸன்! முதலில் அருண் காவ்லியின் அம்மா, பிள்ளையின் விடுதலைக்காக விரதமிருந்தார்; இப்போது சமூக சேவகர் அன்னா ஹசாரேயின் அம்மாவுடைய முறை! அன்னா ஏற்கெனவே உண்ணா-கம்-மௌன விரதத்தை ஆரம்பித்து விட்டார். இவர் சில அமைச்சர்கள் மீது ஊழல் புகார் கொடுக்க, சில நிரூபணமாக, பல உறங்கிக் கிடக்க, தாக்கரேவும் தொண்டர்களும் வெகுண்டு 'அன்னா'வின் இந்து ஸ்வராஜ் ட்ரஸ்ட் மீது 22 கோடிகளுக்கான ஊழல் குற்றம் சுமத்த, மனம் நொந்த ஹசாரே "எங்கள் ட்ரஸ்ட் 22 ரூ.க்குக் கூட ஊழல் செய்யவில்லை! வேண்டுமானால் இக்கணமே சி.பி.ஐ. என்கொயரி நடத்திப் பார்க்கட்டும் என்று சொல்லிவிட்டு, சாகும் வரை உண்ணாவிரதம் அறிவித்திருந்தார். பிள்ளை நிரபராதி என்று நிரூபிக்க, அம்மாவும் விரதமிருந்தார். இது எங்கே போய் முடியுமோ என்று எண்ணிக் கொண்டிருந்த வேளையில் 'ஹசாரேவின் டிரஸ்டில் எந்த ஊழலும் இல்லை' என்று விசாரணை முடிவு வந்து விட்டது. ஆகவே ஜூஸ் குடித்து விரதத்தை முடித்து விட்டார் ஹசாரே. ஆகவே, அவரது அம்மாவும்!

'ரீல்' வாழ்க்கையும் 'ரியல்' வாழ்க்கையும்

ஹிட்ச்காக் நாவல்களை எல்லாம் தூக்கிச் சாப்பிட்டுவிடக்கூடிய விதத்தில் 'கினி கொலை வழக்கு' போய்க் கொண்டிருக்கிறது! மும்பையிலுள்ள 'சாம்னா' அலுவலகத்துக்கு சென்ற கினி, புனாவிலுள்ள அல்கா தியேட்டரில் இரவு 11 மணிக்கு மயங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டு, 11:30க்கு போலீஸ் ஸ்டேஷன் செல்லும் வழியில் மரித்து, 2:30க்கு ஸைஊன் ஹாஸ்பிடலில் போஸ்ட் மார்ட்டம் நடத்திய டாக்டர், கினி, நூதனமான இதயக் கோளாறு ஒன்றினால் இறந்ததாக ரிப்போர்ட் தந்ததாகக் கூறப்பட்டு வந்ததல்லவா? இறந்த உடலில் அப்படி ஒரு நோயைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. மேலும் மயங்கிக் கிடந்தது 'கினி'யே இல்லையாம்! சினிமா போல் "த்ரில்"லிங்காக உள்ள இந்த "ரியல்" லைஃப் சம்பவங்களை எல்லாம் துப்புத் துலக்கி, SIT (Special Investigation Team) தன் கண்டுபிடிப்புகளை சி.பி.ஐயி டம் சமர்ப்பித்து 4 வாரங்களுக்கு மேல் ஓடிவிட்டன! சி.பி.ஐ. ஏன் மௌனவிரதம் அனுஷ்டிக்கிறதோ?

தீக்குளிப்பு தந்திரம்

முதல்வர் ஜோஷியைப் பார்க்க வேண்டுமா? "எங்கள் தற்கொலைக்கு முதல்வரே காரணம்" எனப் பெரிய பானர் எழுதி வைத்துவிட்டு, எடு ஒரு பாட்டில் கெரசினை! கிழி ஒரு தீக்குச்சியை! - இப்படித்தான், பார்வையிழந்தவர்களான குடேவும், சூர்ய வன்ஷியும் மும்பைக்காரர்களுக்கு வழிகாட்டியிருக்கிறார்கள். 'ஜீவன் பிரகாஷன் ஆஷரம் ஸ்கூல்' என்ற ஆரம்பப் பள்ளியை பூகம்பப் புகழ் லாதூரில் துவங்கிவிட்டு, அதை எதிர் காலத்தில் பெரிய கல்லூரியாக்கும் கனவுடன், மராத்திய அரசின் அங்கீகாரத்தைப் பெற, 'மந்த்ராலயா'விற்கு அலையோ அலை என்று அலைந்தும் அங்கிருக்கும் ஒரு புல் பூண்டு கூட அசையவில்லை! வாழ்க்கையே வெறுத்த நிலையில்தான் இந்தத் தீக்குளிப்பு நாடகம்! அடுத்த நிமிடமே போலீசார், முதல்வருடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து விட்டனர். முடிந்து போன கதைகளுக்குத்தான் தமிழர்கள் தீக்குளிப்பது வழக்கம்! கதையைத் துவக்குவதற்கும் தீக்குளிப்பது மராத்தியர் கற்றுத் தந்திருக்கும் ம(த)ந்திரம்!

பலே தாக்கரே!

இமய மலைச்சாரலில் வாழ்ந்து கொண்டிருப்பது போல் புகைமண்டலத்தில் மூழ்கியிருந்த செம்பூர் - செட்டாநகர் - காட்கோபர் வாசிகளுக்கு, ஒருவழியாக அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் 'பனிச்'சென்று "தெரிய" ஆரம்பித்திருக்கிறார்கள். அருகிலுள்ள 'தேவனாரில்' டன், டன்னாக குப்பையை எரித்து, இவர்களுக்கு மூச்சுத் திணறல், கண்ணெரிச்சலிலிருந்து, ஆஸ்த்மா, டி.பி, லங் கேன்சர் வரை விதவிதமான வியாதிகளை வாரி வழங்கிய கார்ப்பொரேஷன்காரர்களை எதிர்த்து, உள்ளூர்வாசிகள் கத்தி, கரைந்து, உருகி, உண்ணாவிரதமிருந்து நடத்திய போராட்டங்கள் இறுதியாக பயன் தந்திருக்கின்றன; காரணம், பால்தாக்கரே! உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் இவர்களுடன் உண்ணாவிரதமிருப்பேன்" என அவர் மிரட்டினாரோ இல்லையோ,



• ஜோஷி

மேயரிலிருந்து மேப்பர் வரை எல்லோரும் திரண்டு, மளமளவென்று காரியங்கள் நிறைவேறி விட்டன!

துணிே(ய)வ துணை!

"போல்ட் அண்ட் ப்யூட்டிஃபுல்லையும் பே வாட்சையும் கட்டிக் கொண்டு நம்மவர்கள் ஏன் அழ வேண்டும்? நம்மிடம் துணிவுக்கோ, அழகிகளுக்கோ குறைச்சலா?" என துணிச்சலுடன் இறங்கி விட்டார் "ஹஸ்ரதைய்ன்" தொடரை வழங்கும் அஜய் சின்ஹா. சந்தேகமிருந்தால் ஜூன் 24, 'ஜீ' டி.வி.யில், இரவு 9:30க்கு, பெயருக்குத் துளி துணியை சீமா சுற்றியிருக்க, சுற்றியிருந்தவர்களுக்கெல்லாம் 'ஷாக்' அடிக்க, சுரேஷ் வாட்கர் பின்னணி இசைக்க, சீமா கூறும் ஹர் ஷத்சாயாவும்... ம்... சின்னத்திரையில் பார்த்துக் கொள்ளுங்களேன்... (ஏதாவது மஹிளா மன்ச் கோஷம் போட்டு எதிர்க்கவில்லை என்றால்)

- ஜெயஸ்ரீ ராஜ்

* குளுமை

✉ முதலில் மாடலிங் செய்து சம்பாதித்த ஜெயலலிதா, இன்று அரசியலில் எப்படியெல்லாம் சம்பாதிக்கலாம் என்பதற்கு ஒரு மாடலாகி விட்டார்!
கமுதி, ராஜி.



வட்ட மேஜை

✉ தி.மு.க. வின் ஓராண்டுக் கால ஆட்சியின் பெரும்பகுதி முந்தைய (ஜெ. ஆட்சி) ஆட்சியைக் குறைகூறுவதிலும், வழக்குப் போடுவதிலுமாகப் போய்விட்டது! இனி மக்கள் நலத்திட்டங்களில் முழுக்கவனம் செலுத்தட்டும்!
திண்டுக்கல், த. சங்கர்.

✉ தி.மு.க. ஆட்சியின் ஓராண்டு சோதனைகள் – சாதனைகள் பற்றிய கட்டுரையில் ஒவ்வொரு துறை அமைச்சரின் சாதனைகளைக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் சுற்றுலா அமைச்சர் சுரேஷ்ராஜன் அவர்களைக் குறிப்பிடும்போது

செய்வாரா தமிழ்க்குடிமகன்?

'ஸ்டாலினுக்கு விசுவாசமானவர்' எனக் குறிப்பிட்டுள்ளீர்கள்! இதைச் சாதனையாக எடுத்துக் கொள்ளவா? சோதனையாக எடுத்துக் கொள்ளவா?
ஸ்ரீவில்லிபுத்தூர், எஸ். விஜயலட்சுமி.


• ஜெ : மாடல்!



✉ தமிழாக்கத் தொடர்களைத் தடைசெய்தால் அதுவே தமிழுக்குச் செய்யும் பெரிய புண்ணியம். அமைச்சர் செய்வாரா?
காப்பரத்தாம்பட்டி, கே. ராஜாதிருவேங்கடம்.

✉ 'வளர்ச்சியைத் தடுக்கும் வன்முறை அரசியல்' என்ற தலைப்பைப் பார்த்ததும், தமிழக அரசைச் சாடியிருப்பீர்கள் என்று நினைத்தேன். ஆனால் டாக்டர் கிருஷ்ணசாமி உட்பட அனைவருக்கும் அன்பான அட்வைஸ் அளித்திருக்கும் கல்கியின் தலையங்கத்தை என்னவென்று பாராட்டுவது?
பூனாம்பாளையம், பி. நடராஜசிவம்.

சுரேஷ் ராஜன் : எப்படிக் கொள்ள?



தமிழ்க்குடிமகன் : செய்வாரா?



✉ நடிகைகள் டெலிவிஷனில் ரசித்த விளம்பரங்களைப் பற்றிக் கூறியிருந்தது அருமை. நிகழ்ச்சிகளைப் பார்க்க நேரம் இல்லையோ?
புதுப்பாளையம், சு. மந்திரமூர்த்தி.


✉ 'கல்யாண' ஜோக்ஸ் களைகட்டுகிறது. தேர்வு செய்யப்படும் ஜோக்ஸ் எல்லாம் அருமையே! கீப் இட் அப்!
விழுப்புரம், வா. க. சங்கீதா பாலு.

✉ "நிலவுக்கு ஒரு தங்கப் பதக்கம்" பாலகுமாரனின் கட்டுரை இதயத்தை மயிலிறகால் தடவுவது போன்ற அற்புத சுகத்தைக் கொடுத்தது என்றால் அட்டை வண்ணப்படமோ, கண்களை மெல்லிய பட்டுத் துணியால் வருடியது போன்ற இதத்தைத் தந்தது!
அரசரடி, நெல்லை. வி. சிவா.

✉ இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த சிறுகதைகள் என்று தொகுக்கப்பட்டால், முதல் பத்தில் தோப்பில் மீரானின் 'குட்டி ஆடு' கண்டிப்பாக இடம்பெறும். அற்புதமான கதை!
சென்னை – 20, சுப்ர.பாலன்.

✉ செய்திகளைத் திருத்தமாக உச்சரிக்கும் கார்த்திகா தேவி மிக நன்றாகப் பிரகாசிப்பார்; வலம் வருவார் என்பது உண்மை. அட்வான்ஸ் வாழ்த்துக்கள்.
திருச்சி – 8, மா. நளினி.

✉ "செலவைப் பற்றிக் கவலைப்படாமல், 'மிஸ்டர் கோல்ட்' நிகழ்ச்சியின் மூலம் பல் வேறுதரப்பட்ட மனிதர்களை அனுபம்கெர்தான் மட்டும் சந்தித்ததோடல்லாமல், லட்சோபலட்ச நேயர்களையும் சந்திக்கச் செய்து விடுகிறாரே! நடிகர் என்ற பந்தா இல்லாத வித்தியாசமான மனிதர் இவர்!
திருச்சி – 2, அ. அனீஸ் ஃபாத்திமா.



1997 ஜூன் 1
ஈசுவர வைகாசி 18
மலர் : 55
இதழ் : 44

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



பெண்களுக்கு ஒதுக்கீடு: விபரீத விளையாட்டு!

'பெண்களுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு தரப்படும்'- கடந்த பொதுத் தேர்தலின்போது அனைத்துக் கட்சிகளுமே தங்கள் தேர்தல் அறிக்கையில் இந்த வாக்குறுதியை அளித்தன.


அதற்கான மசோதா சட்டமாகும் நேரத்திலோ, கருத்து வேறுபாடுகள் வெடித்து உச்சகட்ட குழப்பம் நிலவுகிறது.

ஜனதா தள தலைவர் ஷரத் யாதவ், 'இந்த மசோதாவைத் திருத்தமின்றி ஏற்க இயலாது. பெண்களிலேயே பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் சிறுபான்மை வகுப்பினருக்கும் தனி ஒதுக்கீடு தரப்பட வேண்டும்; இல்லாவிட்டால் குட்டை முடிப் பெண்கள் மட்டுமே பயனடைவார்கள். ஜனதா தளத்தின் சமுதாய நீதிக் கோட்பாடு அர்த்தமற்றுப் போகும்' என்கிறார். (குட்டை முடிப் பெண்கள்' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியதற்காகப் பின்னர் மன்னிப்புக் கேட்டிருக்கிறார் ஷரத் யாதவ்!) 'என்ன ஆனாலும் இந்த மசோதாவை நான் எதிர்ப்பேன். கட்சிக் கொறடாவையும் மீறுவேன்..' என்று குதிக்கிறார். ஜனதா தளம் இந்தக் கருத்து மோதலால் பிரிந்து நிற்கிறது.

சமாஜ்வாடி கட்சித் தலைவர் முலயம்சிங் யாதவ் இதே போல் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்:

'பெண்களுள் பிற்பட்ட வகுப்பினர் அதிக பயனடையும்படி இந்த மசோதா மாற்றப்பட்டு, ஒரு புதிய ஃபார்முலா உருவாக்கப்பட வேண்டும்' என்கிறார்.

பி.ஜே.பி.யிலும் புதிதாக ஒரு பிரச்னைக் குரல் எழுந்துள்ளது. அத்வானி உள்ளிட்ட முதல் நிலைத் தலைவர்கள், 'ஜாதி அடிப்படையிலான எந்த ஒதுக்கீட்டையும் ஏற்பதற்கில்லை' என்பதையே அக்கட்சியின்



கொள்கையாக அறிவித்துள்ளார்கள். அக்கட்சியின் பெண்கள் பிரிவுத் (மஹிளா மோர்ச்சா) தலைவி மிர்துளா சின்ஹா, அந்தக் கொள்கையை மீண்டும் அடிக்கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

ஆனால், பி.ஜே.பி.யின் இளைஞர் பிரிவு (யுவ மோர்ச்சா) தலைவர் உமா பாரதியோ வேறு பல்லவி பாடுகிறார்- 'பெண்களுக்கு இட ஒதுக்கீடு வருமானால், அதில் தலித் பெண்களுக்குத் தனி ஒதுக்கீடு அவசியம்' என்கிறார்.

பிரதமர், 'இது விஷயமாக நாடு தழுவிய விவாதம் நடத்துவோமே..' என்று கொதிப்பின்மீது தண்ணீர் தெளிக்க முயற்சி செய்ய, இடதுசாரிக் கட்சிகள் 'அதெப்படி!' என்று சண்டைக்கு வருகின்றன. 'ஏற்கெனவே நாடு தழுவிய ஆராய்ச்சி நடத்தி, பல தரப்புப் பெண்கள் அமைப்புகளையும் கலந்தாலோசித்துத்தான் இந்த மசோதா வடிவமைக்கப்பட்டது. மீண்டும் விவாதமெதற்கு?' என்று நியாயமான கேள்வி எழுப்புகின்றன.

இந்த விவாதங்கள், கருத்து மோதல்களுக்கிடையே, 'கிடைத்தது வாய்ப்பு' என்று இன்னொரு குண்டையும் தூக்கிப் போடுகிறார் சரத் யாதவ்: முஸ்லிம்களுக்குத் தனியே இட ஒதுக்கீடு வேண்டும் என்கிறார்!

ஜாதி அடிப்படையில் ஒதுக்கீடு

மத அடிப்படையில் ஒதுக்கீடு


பெண்களுக்கான ஒதுக்கீடு

பெண்களுள் ஜாதி-மத அடிப்படையிலான ஒதுக்கீடு...

இப்படி, ஒதுக்கீடு அடிப்படையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்வாகப் போகிறார்கள் எனில், தகுதி என்பதாக ஒன்றிற்கு அவசியமோ அர்த்தமோ இல்லாமல் போய்விடும்.

பெண்கள் நலனிலும் நாட்டு நலனிலும் அக்கறையுடையவர்கள் யோசிக்க வேண்டும். உண்மையான, அவசியமான தகுதிகள் இன்றி, பெண் என்பதால் மட்டுமே பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர், எத்தகைய அபாயகரமான நிலையில் இறுத்தப்படுவார்! தேசமும் எத்தகைய அபாயத்தை எதிர்நோக்க நேரும்!

அதிகாரங்கள் பல, பெண் உறுப்பினர் ஒருவரிடம் இருந்தாலும், அவற்றைக் கையாளும் ஆற்றல் அவருக்கு இல்லாவிட்டால் என்னாகும்?... அவர் எந்த ஆணின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறாரோ,



அவருடைய பினாமியாகத்தான் செயல்பட வேண்டிவரும்.

ஆண்-பெண் சமத்துவம் என்பதை நம் சமுதாயம் முழுமையாக அடைந்து விடவில்லை என்பதை யாவருமே ஒப்புக் கொள்வார்கள். அரசியல் சாசனமும் சட்டமும் அந்த சமத்துவத்தை உறுதி செய்தாலும் அது நடைமுறையில் இல்லாததற்குச் சமுதாய நிலையே காரணம்.

சமுதாய மாற்றத்தைச் சட்டத்தால் மட்டுமே சாதிக்க முடியாது என்பது நாம் மீண்டும் மீண்டும் அனுபவத்தில் கண்ட உண்மை. மன மாற்றமும் மேம்பாடும்தான் சமுதாய மாற்றத்தை உருவாக்க முடியும். சட்டம் அதற்குத் துணை நிற்க மட்டுமே முடியும்.

ஆணாதிக்கம் Vs ஆண் விரோதம் என்கிற போராட்ட நிலையோ, இட ஒதுக்கீடோ ஒருகாலும் பெண் சமத்துவத்தை உறுதி செய்யாது.


சமத்துவம் என்பது பெண்களின் பரிணாம வளர்ச்சியாக, அவர்களுக்குள்ளேயே நிகழ்ந்து, முதிர்ந்து வரவேண்டும். இது சாத்தியமற்ற பகல் கனவு அல்ல. அவ்வாறு வளர்ந்து, தகுதியடிப்படையில் பிரகாசிக்கும் பல பெண்களைப் பார்த்து இன்று பெருமிதம் கொள்கிறோம்.

பெண்களுக்குச் சம வாய்ப்புகள், சம உரிமைகள், சம ஊதியம் என்பதைச் சட்டம் மூலம் ஏற்கெனவே உறுதி செய்திருக்கிறோம். அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தன்னம்பிக்கை வளர்க்கும் கல்வியும் அதன் விளைவான பரந்த நோக்கும்தான் உதவ முடியும்.

எனவே பெண்கள் மேம்பாட்டினை விரும்பும் எந்த அரசும் கல்வித் திட்டத்தில் சிறப்புக் கவனம் செலுத்துவது அவசியம். பெண்கள் கல்வி, ஆண்கள் கல்வி என்ற பாகுபாடின்றி சமநோக்கை உருவாக்கும் கல்வித் திட்டமாக அது அமைய வேண்டும்.

மாறாக, இட ஒதுக்கீடுகள் மூலம் பெண்களின் நிலையை உயர்த்திவிடலாம் என்று முயற்சி செய்வது அந்தப் பெண்களுக்கே எதிராகத்தான் முடியும் என்பதுடன் பாராளுமன்றத்தின் அமைப்பையே மாசுபடுத்தும். ஜனநாயக சித்தாந்தத்தையே நீர்த்துப் போகச் செய்யும்.

இதைப் பார்க்க, பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா என்பது ஒரு விபரீத விளையாட்டு; அந்த மசோதாவிலும் ஜாதியையும் மதத்தையும் புகுத்தும் முயற்சி என்பது நமது அரசியல்வாதி களுக்கேயுரிய 'குறுக்கு வழி சுயலாப' சிந்தனை. அந்த சிந்தனை முளையிலேயே நசுக்கி அழிக்கப்பட வேண்டும்.



பூமராங்

அமுதகுமார்

'ஊழல் குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் அமைச்சர் அம்பலவாணன் கைது! சி.பி.ஐ விசாரணை!'

- அன்றைய நாளிதழ்களின் தலைப்புச் செய்தி காட்டுத் தீயாகப் பரவிற்று.

செய்தி அறிந்த காத்தமுத்து வெகுண்டெழுந்தான்.

"டேய்! நம்ம அண்ணன் மேல வீணா அபாண்டம் போடறானுக. இவனுக எப்படி ஆட்சி நடத்துவானுக பார்க்கலாம்!"

''அண்ணே! உத்தரவு கொடுங்க. ஊரையே ஒரு கலக்கு கலக்கிடலாம்!''

காத்தமுத்து தலைமையில் ஒரு கூட்டம் கூடிற்று. காத்தமுத்துவின் கட்டளைக்காகக் காத்துக் கிடந்தது.

கட்சியில் காத்தமுத்துவின் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது.

சாதாரண தொண்டனாகத் தன்னைக் கட்சியில் இணைத்துக் கொண்ட காத்தமுத்து, படிப்படியாக முன்னேறி இன்றைக்கு ஒன்றியச் செயலாளர் பதவி வகிக்கிறான் என்றால் சும்மாவா?

கட்சியின் பெயரை வைத்துக் கொண்டு எத்தனை தொழில்களைத் தன் கைவசப் படுத்திக் கொண்டிருக்கிறான்?

பிராந்திக் கடை, ரோட்டோர நைட் ஸ்டால், சினிமா தியேட்டர் ஒன்றில் பங்குதாரர்... என்று ஏகப்பட்ட தொழில்களுக்கு சொந்தக்காரன்.

இந்த அளவிற்கு வாழ்க்கையில் முன்னேற எத்தனை அடிதடிகளை, கலாட்டாக்களை, கலவரங்களைக் காத்தமுத்து தன் தலைமையில் நடத்தியிருப்பான்?

கட்சியின் மேலிடத்தில் காத்தமுத்துவிற்கு நல்ல செல்வாக்கு! அடுத்த தேர்தலில் எம்.எல்.ஏ.சீட் கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

அதற்காகத்தானே காத்தமுத்துவும் காத்துக் கிடக்கிறான்? ஒவ்வொரு ஆர்ப்பாட்டமும் நடத்திக் காட்டு

இறான்?

அடுத்த கட்ட ஆர்ப்பாட்டத்திற்கு ஆயத்தமானான்.

''இன்னிக்கு அண்ணன் அம்பலவாணன் மீது கை வச்சிருக்காங்க. இதை இப்படியே விட்டுட்டால் நாளைக்கு நம்ம தலைவரு மேல கை வைக்க மாட்டாங்கனு என்ன உறுதியிருக்கு? அதனாலே உடனடியா நாம ஒரு நடவடிக்கை எடுத்தாகணும்.''

''என்ன செய்யலாம் சொல்லுங்க அண்ணே?''

"என்ன பண்றதா? ஊரே ஸ்தம்பிச்சுப் போகச் செய்யணும். கவர்மெண்ட்டை ஒரு ஆட்டு ஆட்டிப் பார்க்கணும். ஆட்டோ, பஸ் எதுவுமே ஓடக் கூடாது. மீறி ஓட்டினால் கல் அடிதான். மூடாத கடைக்குத் தீ வச்சு, அடிக்கணும்!''

"வருங்கால எம்.எல்.ஏ. காத்தமுத்து...''

"வாழ்க!''

காத்தமுத்துவின் மனசுக்குள் திடீரென்று



ஒரு பொறி தட்டிற்று. அமைதிப்படுத்தினான்.

"அமைதி! எல்லாரும் ஒரு பத்து நிமிஷம் பொறுங்க. எந்த கலாட்டாவையும் ஆரம்பிக்க வேண்டாம். அதுக்குள்ள நான் மேலிடத்திற்கு ஒரு போன் பண்ணி மேற்கொண்டு என்ன செய்யலாம்னு யோசனை கேட்டுக்கிறேன். அப்புறம் கலாட்டாவை ஆரம்பிக்கலாம்!"

கூட்டத்தை விட்டு விலகி அருகில் இருந்த டெலிபோன் பூத்துக்குள் நுழைந்தான் காத்தமுத்து.

தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று ஒருமுறை அந்தக் கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்து பார்த்தான். யாரும் அவனைக் கவனிக்கவில்லை.

உறுதிப்படுத்திக்கொண்டான்.

மேலிடத்திற்கு போன் பண்ணுவதாகப் பொய் சொன்ன காத்தமுத்து, போனை எடுத்து தன் வீட்டிற்கு எண்களை அமுத்தினான்.

போன் கூவிற்று. காத்தமுத்துவின் மனைவி திலகவதி போனை எடுத்தாள்.

"நான்தான் திலகவதி பேசறேன். உங்களுக்கு என்ன வேண்டும்?"

எதிர்முனையில் காத்தமுத்து அடித்தொண்டையில் பேசினான்.

"இலகா, நான்தான் பேசறேன். நம்ம பையன் செந்தமிழ் பள்ளிக்கூடத்திலிருந்து வந்துட்டானா?"

"என்ன அதிசயமா இருக்கு? கட்சி வேலைகளுக்கு நடுவில் குடும்பத்து மீது அக்கறை?"

"திலகா, இது விளையாடற நேரமில்லை. கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு! செந்தமிழ் வந்துட்டானா?"

கணவனின் குரலில் இருந்த கடுமையை உணர்ந்து திலகவதி கலவரம் அடைந்தாள்.

"நீங்க என்ன கேட்கறீங்க? குழந்தைக்கு என்ன ஆச்சு?"

"மண்டு! குழந்தைக்கு ஒன்றும் ஆகலை. இப்போ சில நிமிஷங்களில் ஒரு கலவரம் வெடிக்கப் போகுது. அதுக்கு முன்பு நம்ம பையன் வீடு வந்து சேர்ந்துட்டானா?"

"என்னங்க... எதுக்காகக் கலவரத்தைத் தூண்டி விடறீங்க? நீங்க வீட்டை விட்டு வெளியில் போனாலே நெருப்பை மடியில் கட்டிட்டுத் தவிக்க வேண்டியதா இருக்கு."

"இப்போ ஒப்பாரியை நிறுத்தப் போறியா இல்லையா?"

திலகவதி மௌனமானாள்.

"அடுத்த எலக்ஷன்ல நான் எம்.எல்.ஏ ஆகணும். அதுக்காக நான் எதைச் செய்யவும் தயார். இதுல எல்லாம் நீ தலையிடாதே! பையன் வந்துட்டானா பாரு!"

"ஒரு நிமிஷம் பொறுங்க. கார் வருகிற நேரம் ஆச்சு. பார்த்துட்டு சொல்றேன்."

திலகவதி ரிஸீவரை மேஜை மீது வைத்துவிட்டு ஜன்னல் வழியே பார்த்தாள்.

பள்ளியிலிருந்து பையனை அழைத்து வரச் சென்ற கார் தெரு முனையில் வந்து திரும்பிற்று. பையன் வந்துவிட்டான். உறுதிப்படுத்திக் கொண்ட திலகவதி, ரிஸீவரை

எடுத்தான்.

"என்னங்க, நம்ம பையன் வந்துட்டான்."

எதிர்முனையில் ரிஸீவரை சாத்தினான் காத்தமுத்து.

நிம்மதியுடன் டெலிபோன் பூத்தை விட்டு வெளியில் வந்தான் காத்தமுத்து.

கூட்டத்தைப் பார்த்துக் குரல் கொடுத்தான்.

"மேலிடத்திற்கு போன் பண்ணி கேட்டுட்டேன். தலைவரே உத்தரவு கொடுத்துட்டாரு. நிறுத்துங்கடா வாகனத்தை! மூடுங்கடா கடைகளை!

அடுத்த அரைமணி நேரத்தில் அந்த நகரத்தில் அனைத்து வாகனங்களும் நிறுத்தப்பட்டன. நிறுத்துவதற்கு மறுக்கப்பட்ட வாகனங்கள் மீது தீ வைப்பு சம்பவம் நிகழ்ந்தது.

வெறித்தனமான ஆர்ப்பாட்டம்!

போலீஸ் குவிக்கப்பட்டது. கலவரம் செய்தவர்கள் மீது தடியடிப் பிரயோகம் நிகழ்ந்தது. பலரைக் கைது பண்ணி இழுத்துச் சென்றனர்.

கலவரத்தை அடக்க போலீஸ் பல மணி நேரம் போராட வேண்டியதாயிற்று.

கலவரத்தைத் தூண்டி விட்ட காத்த முத்துவை போலீஸ் தேடிற்று.

காத்தமுத்து எப்படியோ தப்பித்து வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

வீட்டின் முன் ஒரு பெரிய கூட்டமே கூடியிருந்தது.

காத்தமுத்துவின் மனசுக்குள் கலவரம் மூண்டது.

எதற்காக இப்படியொரு கூட்டம் என் வீட்டிற்கு முன்னால் கூடியிருக்கிறது?

பதற்றத்துடன் வீட்டிற்குள் நுழைந்தான்.

"திலகா, என்ன ஆச்சு?"

கணவனைக் கண்ட திலகவதி பெருங்குரலில் அழுதாள்.

"என்னங்க, நம்ம பையனுக்கு நேர்ந்த கதியைப் பார்த்தீங்களா? நீங்க விதைச்ச வினை இப்பவே அறுவடை ஆயிடுச்சே!"

"நீ என்ன சொல்றே?"

திலகவதி கேவிக் கேவி அழுதாள். அழுகையினூடே விஷயத்தைச் சொன்னாள்.

"நீங்க போன் பண்ணிய போது ஜன்னல் வழியா பார்த்தேன். நம்ம கார் வந்துட்டு இருந்துச்சு. நம்ம பையனும் வந்துட்டான்னு நினைச்சுட்டேன். இன்னிக்கினு பாருங்க, செந்தமிழ், காரில் வர மாட்டேனு அடம் பிடிச்சானாம். மற்ற பசங்களோடு ஆட்டோவில் வர வேணும்னு ஆசையா இருக்குன்னு அழுதானாம். சரி, ஒரு நாளைக்கு ஆட்டோவில் வந்துட்டுப் போகட்டுமேனு நம்ம டிரைவர் காரைக் கிளப்பிட்டு வந்துட்டான். நம்ம பையன் வந்த ஆட்டோவை எந்தப் பாவியோ தீ வச்சுட்டான். நம்மளை மாதிரி எத்தனை பேரு பிள்ளைகளைப் பறிகொடுத்துட்டுத் தவிக்கிறாங்களோ?"

காத்தமுத்து அதிர்ந்து போனான்.

"திலகா! இப்போ நம்ம பையன் எங்கே?"


"நம்ம பையனோட பாடியை போஸ்ட் மார்ட்டம் பண்ண ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டு போயிருக்காங்களாம். ஆஸ்பத்திருக்குப் போய் குழந்தையைப் பார்க்க முடியலே. வெளியில ஒரே கலவரம்"

அதிர்ந்து போய் நின்றான்

காத்தமுத்து.



✸ தேனாம்பேட்டை அப்பல்லோ ஆஸ்பத்திரியில் படுத்துக் (?) கொண்டு, போயஸ் தோட்டத்தை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியுமா? சசிகலாவால் முடியும். கூரியராக செயல்படும் சமையல்கார ராஜம்மாவிடம் தகவல்களைத் தெரிந்து கொண்டு, செயல்படுகிறார் சசி. பத்து வருட காலமாக வேலை செய்த விஜயன் டிஸ்மிஸ் ஆனதும், ஜெ. உதவியாளர் பாஸ்கரன் வேலையை விட்டுப் போனதும் சசியின் கை வண்ணம் தானாம்.



✸ அது ஒரு காலம். ராமசாமி உடையாருக்கும் கலைஞருக்கும் கசமுசா இருந்தது உண்டு. 1989ல் ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை அரசு எடுத்துக் கொண்டது. 1991ல் ஜெ. ஆட்சிக்கு வந்தபோது திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டது. இப்போது கலைஞர் வந்து மீண்டும் எடுத்துக் கொள்வார்களோ என்று பயந்த காலம் சென்று விட்டது. மாறாக நெருக்கம் உண்டாகி இருக்கிறது. ஆட்சிக்கு வந்த பிறகு அங்கு நடந்த இரண்டு மூன்று நிகழ்ச்சிகளில் கலைஞரும், ஆர்க்காட்டரும் கலந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது 'என் டோஸ்கோபி' உட்பட பல சோதனைகளை அங்கேதான் செய்து கொண்டார் ஸ்டாலின்.

- தில்லப்பா

தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்துக்களுக்கு

ரூபாய் ஐந்து லட்சம் மதிப்புள்ள உஜாலா பரிசுகள்



உங்களுடைய கருத்துக்களை எங்களுக்கு எழுதவும்

இப்போது உஜாலாவின் டாம்ப்பர் - புரூஃப் மூடியும், ஃபில்ஃபர் - புரூஃப் டிராப்பரும் ஜோதி ஆய்வுக்கூடத்தில் டிசைன் செய்யப்படுகின்றன. உங்களைப் பாதுகாக்க அவை எவ்வாறு வேலை செய்கின்றன ?

இன்று, தின் லேயர் க்ரோமெடோகிராஃபி (TLC) மற்றும் காஸ் க்ரோமெடோகிராஃபி மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி (GCMS) பரிசோதனைகளில் முன்னேற்ற நாடான ஜெர்மனியில் தடை செய்யப்பட்டுள்ள அமின்ஸ் இல்லாத ஒயிட்னர் உஜாலா-வுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. சருமத்தில் எரிச்சல் மற்றும் வாயில் பட்டால் விஷத் தீங்கு இல்லை என்று பரிசோதனையில் தெரிகிறது. மேலும் விஷத்தன்மையற்றது. அதோடு, உஜாலா பல இதர தனித்தன்மை வாய்ந்த குணங்களைக் கொண்டுள்ளது. அவை என்ன ?

உஜாலாவை உபயோகிப்பதற்கு சரியான முறை என்ன ?

விஞ்ஞான ரீதியற்ற ஒயிட்னர்களை நீண்ட நாட்களுக்கு உபயோகிப்பது ஆரோக்கியத்திற்கும், உடைகளுக்கும் நல்லதல்ல. ஆகவே அதுபோன்ற தயாரிப்புகளை உபயோகிக்கத் துவங்கியவர்கள் மீண்டும் உஜாலாவையே உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்கள்

Write to : **Jyothy Laboratories (UJALA)**, 2- A. Singarayar Mansion, Abhirami Avenue, Meenambal Salai, K. Kannadasan Nagar, Madras - 600 118.

விடியலை நோக்கி திரைப்படக் கல்லூரி!

சென்னை

தரமணியிலுள்ள திரைப்படக் கல்லூரி, தொடங்கப்பட்ட முப்பத்தியேழு வருடங்களாக, ஒருதரம் கூட இதுவரை மாணவர்களின் படங்களுக்கான (பிராஜக்ட் பிலிம்) தேசிய விருது பெற்றதில்லை. முதல் முறையாக இந்த வருடம் விருது வாங்கியிருக்கிறது. 'விடியலை நோக்கி' என்கிற குறும்படம். (Short film)

படத்தின் இயக்குநர் U. வெங்கடேஷ், "ரொம்ப சந்தோஷமாயிருக்கு!" என்று முகம் மலரச் சொன்னார்.

"இந்தப் படத்தின் மொத்த நேரமே பதினான்கு நிமிடங்கள்தாம். ஆனால் ஒரு விறுவிறுப்பான சிறுகதை படிக்கிற உணர்வைத் தர குறும்படம்தான் ஒரு நல்ல வழி. குறும்படம் என்றால் என்ன? அதன் அமைப்பு, வடிவம் போன்ற டெக்னிகல் விஷயங்களை எடிட்டர் லெனின் சொல்லிக் கொடுத்தார். அவரும் இயக்குநர் அறிவுமதியும்தான் எங்களுக்குப் பெரிய இன்ஸ்பிரேஷன்."



• ஸ்ரீநிவாசன்



• அமிர்தம்

'விடியலை நோக்கி' - படத்தின் கதை - ஒரு பார்வையற்ற முதியவருக்கு திடீரெனப் பார்வை வந்து, மூன்று நிமிடங்களில் அது மீண்டும் பறிபோனால் எப்படி இருக்கும் என்பது.

"பிறவிக் குருடனுக்குப் பார்வை தர முடியாது என்பதுதான் இதுவரை இருந்துவந்த விஞ்ஞானம். ஆனால் சமீபத்தில் அமெரிக்காவில் இதை முறியடிக்கும் விதமாக அரிய மருத்துவ - விஞ்ஞான முயற்சி ஒன்று நடைபெற்றது. இன்னும் அது முழுமை பெறவில்லையெனினும் ஓரளவு வெற்றி கண்டிருப்பதாகத் தகவல் வந்தது. அதுதான் இந்தக் கதைக்கு ஆதாரம்.

"மருத்துவரின் அயராத முயற்சியால் ஒரு முதியவருக்குப் பார்வை கிடைக்கிறது. வெறும் மூன்று நிமிஷம்தான். அதற்குள் அந்த உணர்வை அவர் வெளிப்படுத்துகிற விதம்தான் படம்! தன்னோடு வாழ்ந்து, ஆயுள் முழுவதும் தன்னால்



• 'விடியலை நோக்கி' - படத்தில் ஒரு காட்சி

பார்க்கப்படாமலேயே இறந்த அன்பு மனைவியின் புகைப்படம். தன் வீட்டுத் தோட்டம். அதில், தான் தினசரி முகர்ந்து உணர்ந்த மலர்கள், நெருப்பு, பிரெயில் புத்தகம் என்று பல விஷயங்களை அவர் அந்த நேரத்தில் பார்த்து வியப்பார். இறுதியில் தம் தோழர்களை, பிற பார்வையற்ற நண்பர்களுடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படத்தைப் பார்ப்பதற்குள் மீண்டும் பார்வை பறிபோய் விடும்.



• நம் குழுவினருடன் இயக்குநர் வெங்கடேஷ்

"இறுதியில், அவருடன் பழகிய மூன்று பார்வையற்ற குழந்தைகள் 'தாத்தா நாங்க எப்படி இருக்கோம்னு உங்ககிட்ட கேட்டுத் தெரிஞ்சிக்க முடியாம போச்சே' என்று வருத்தப்படுவார்கள். 'உங்கள் காலத்தில் இந்த மருத்துவ சாதனை முழுமை அடைந்து, உங்களுக்கே பார்வை கிடைத்துவிடும். ஏன் கவலைப்படுகிறீர்கள்?' என்று அந்தக் கிழவர் நம்பிக்கையூட்டும் விதமாகப் பேசுவதுடன் படம் நிறைவடையும்" என்றார் வெங்கடேஷ்.

"கடந்த பதினைந்து வருடங்களாக, இயக்குநர்கள் பாடப் பிரிவுக்கான மாணவர்கள், தம் பிராஜக்ட் படங்களை மூன்றாமாண்டில் முடித்துக் கொடுத்ததாகச் சரித்திரமேயில்லை! ஓரிரு வருடங்கள் தாமதமாக முடித்துத் தந்துதான் டிப்ளமோவை வாங்கிச் செல்வார்கள். காரணம் - போதிய வசதியின்மை.

"ஆனால் சமீபத்தில் உங்கள் கல்கி இதழில் வந்த திரைப்படக் கல்லூரி மணவர்களின் நிலை பற்றிய விமர்சனத்தை (லெனின் பேட்டி) கவனத்தில் கொண்டு, உடனடியாகக் குறைகளைக் களைந்து, பல வசதிகள் செய்து தரப்பட்டன. எடிட்டர் லெனினையும் நேரில் சந்தித்து அவரது ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றோம். விளைவு? இந்த வருடம் தாமதமின்றி பிராஜக்ட் படங்கள் எடுத்து முடிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று தேசிய விருதும் பெற்றிருப்பது பெருமகிழ்ச்சி தருகிறது" என்றார் கல்லூரியின் இயக்குநர் அமிர்தம்.

'விடியலை நோக்கி' குறும்படம் தவிர மேலும் ஐந்து படங்களும் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டனவாம். "பரிசு பெறாது போனாலும் அவை வித்தியாசமான அருமையான முயற்சிகள்தாம்!" என்றார் கல்லூரி முதல்வர் ஸ்ரீநிவாசன்.

— சாவித்ரி கண்ணன்

படங்கள் : சிநேகிதன்

"நீ சிரித்ததுக்காக தமிழ் வளர்ச்சி அமைச்சர் உன்னைக் கண்டித்தாரா ஏன்...?"

"நான் ஹி...ஹி...ன்னு வடமொழியில சிரித்தேனாம்!"

– சீர்காழி. வி. ரேவதி





சாமுவேல் என்கிற

புண்ணியமூர்த்தி தம் வாழ்நாள் முழுவதும் இஸ்ராயேல் மக்களுக்குத் தலைவராக இருந்தார். ஆண்டவரே இவரைத் தம் அடியாராகத் தேர்ந்தெடுத்தார். சாமுவேல், சவுல் என்பவரை இஸ்ராயேலர்களுக்கு அரசராக்கினார். சவுல் நாளாக நாளாக கர்த்தரின் வழிகளிலிருந்து விலகினார். ஆகவே ஆண்டவராகிய கர்த்தர் சவுலுக்குப் பதிலாக வேறொருவரை அரசராக்க வேண்டும் என்று சாமுவேலுக்கு உணர்த்தினார். ஆண்டவரின் கட்டளைப்படியே சாமுவேல் பெத்லேகமிற்குப் போனார். அங்கே சாமுவேல் எலியா என்பவரை எதிர்கொண்டார். ஆண்டவர் குறிப்பிட்ட மனிதர் இவராகத்தான் இருக்க வேண்டும் என்று

சாமுவேல் முதலில் நினைத்தார். அப்போது ஆண்டவர் சாமுவேலிடம் "மனிதன் பார்ப்பது போல் நான் பார்ப்பதில்லை; மனிதர்கள் முகத்தைப் பார்க்கின்றார்கள்; ஆண்டவரோ மனத்தைப் பார்க்கின்றார்" என்றார். இறுதியாக ஈசாய் என்பவரின் மகன் தாவீதுதான் கடவுள் விரும்புகிற மனிதன் என்பதை ஆண்டவர் சாமுவேலுக்கு அறிவித்தார்.

தாவீது ஈசாயின் எட்டாவது மகன். அழகே உருவெடுத்தவன். ஆடுமாடு மேய்க்கிற சிறுவன். சாமுவேல் தாவீதை எண்ணெய் நிறைந்த கொம்பை எடுத்து அவரது சகோ

வெளிச்சத்தின் விலாசம் – 8

வலம்புரி ஜான்

குன்றை வீழ்த்திய கூழாங்கல்!

தரார்கள் முன்னிலையில் திருப்பொழிவு செய்தார். (திருப்பொழிவு - எண்ணெய் முழுக்காட்டு)

அரசராக இருந்த சவுலைத் தீய ஆவி பிடித்தது. அவர் அலைக்கழிக்கப்படுவதைப் பார்த்து அவரைச் சுற்றியிருந்தவர்கள் மனம் நொந்தார்கள். தீய ஆவியை ஓட்டுவதற்கு யாழ் வாசிக்கத் தெரிந்த ஒருவர் வேண்டும் என்று சவுலின் பணியாளர்கள் நினைத்தார்கள். ஆகவே சவுல் தாவீதிற்கு ஆள் அனுப்பினார். தாவீது அரசவைக்கு வந்ததும் "இவன் யாழ் மீட்டுவதில் வல்லவன்; பேச்சுத் திறமை உடையவன்; போர் புரிவதிலும் வல்லவன்; எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவர் அவனோடு இருக்கிறார்" என்று பணியாளர்கள் அவரை அரசருக்கு அறிமுகப்படுத்தினார்கள். இவ்வாறாக தாவீது அரண்மனைப் பணியாளர்களில் ஒருவராகச் சேர்ந்தார். எப்போதெல்லாம் அவர் யாழ் மீட்டுகிறாரோ அப்போதெல்லாம் சவுலை விட்டு தீய ஆவி நீங்குவதாக இருந்தது.

இந்தக் காலகட்டத்தில் பெலிஸ்தியர் என்ற வகுப்பார் இஸ்ராயேலர்கள் மீது போர் தொடுத்தனர். இரு இனத்தாரின் படைகளும் இரண்டு மலை உச்சிகளில் அணிவகுத்தன. நடுவே ஒரு பள்ளத்தாக்கு இருந்தது. அப்போது காத்து நகரத்தைச் சேர்ந்த கோலியாத்து என்கிற வீரன் பெலிஸ்தியரின் பாசறையிலிருந்து புறப்பட்டு வந்தான். அவன் உயரம் ஆறரை முழம். அவன் வெண்கலத்திலான தலைக்கவசமும், ஐம்பத்தேழு கிலோ எடையுள்ள வெண்கலத்தினாலான மீன் செதிலைப் போன்ற ஒரு மார்புக் கவசமும் அணிந்திருந்தான். கால்களில் வெண்கலக் கவசமும், தோள்களுக்கிடையில் வெண்கல எறிவேலும் அவன் அணிந்திருந்தான். அவனது ஈட்டிக்கோல் தறிக்கட்டை போலப் பெரிதாயிருந்தது. அவனது ஈட்டியின் முனை ஏழு கிலோ இரும்பால் ஆனது. கேடயம் தாங்குவோன் அவனுக்கு முன்பாக நடக்கும்போது உச்சிவேளை நிழலைப் போல அவன் வளர்ந்து போவான்.

எட்டி நின்று பார்ப்பதற்கே அச்சத்தைத் தருகிற கோலியாத்து, இஸ்ராயேல் படைகளுக்கு எதிரே நின்று உரத்த குரலில் "நீங்கள் போருக்கா அணிவகுத்து வந்தீர்கள்? நீங்கள் சவுலின் அடிமைகள் அல்லவா? உங்களில் ஒருவனைத் தேர்ந்தெடுங்கள்; அவன் என்னிடம் வரட்டும்; அவன் என்னைப் போரிட்டுக் கொன்றால் பிலிஸ்தியரான நாங்கள் அனைவரும் உங்களுக்கு அடிமைகள் ஆவோம்; நான் அவனைக் கொன்று விட்டால், நீங்கள் அடிமைகளாகி எங்களுக்குப் பணிசெய்ய வேண்டும்" என்று உரக்கக் கூவினான். அவனைப் பார்ப்பதற்குக் கரிய குன்று



ஒன்றிற்குக் கைகால் முளைத்ததைப் போலிருந்தது. மேலும் பெலிஸ்தியனான கோலியாத்து "இஸ்ராயேலர்களின் படைகளுக்குச் சவால் விடுகிறேன்; என்னோடு போரிட உங்களில் ஒருவனை இப்போதே அனுப்புங்கள்" என்று கர்ஜித்தான். அரசனான சவுலும், இஸ்ராயேல் மக்கள் அனைவருமே கோலியாத்தின் வார்த்தைகளைக் கேட்டு அஞ்சி நடுங்கினார்கள்.

சவுல் அரசன் போர் முனைக்குச் சென்று விட்டதால் தாவீது ஊர் திரும்பி ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். தாவீதின் மூன்று மூத்த சகோதரர்கள் மாத்திரமே போரில் ஈடுபட்டிருந்தார்கள். கோலியாத்து காலையிலும், மாலையிலுமாக நாற்பது நாட்கள் இடைவிடாது பள்ளத்தாக்கில் நின்று "என்னை எதிர்த்து நிற்பதற்கு இஸ்ராயேலரில் ஒருவர் கூட இல்லையா?" என்று சவால் விட்டுக் கொண்டே இருந்தான். தாவீதின் தந்தையான ஈசாய் தனது மகனிடம் இருபது படி அளவுள்ள மாவையும், பத்து அப்பத் துண்டுகளையும் கொடுத்து போர் முனையிலிருக்கும் உன் சகோதரர்கள் நலமுடன் இருக்கிறார்களா என்று பார்த்து வா என்று அனுப்பினார்.

தாவீது விடியற்காலையில் எழுந்து ஆடு மாடுகளைக் காவலன் ஒருவனிடம் ஒப்படைத்துவிட்டு, உணவுப் பொருட்களை எடுத்துக் கொண்டு ஈசாய் தமக்குக் கட்டளையிட்டவாறு புறப்பட்டுப் போனார். தாவீது வந்து சேர்ந்தபோது இஸ்ராயேலர்களும், பெலிஸ்தியர்களும் அணிவகுத்து நின்று ஒருவருக்கு எதிராக மற்றவர்கள் குரலெழுப்பிக் கொண்டிருந்தார்கள். தாவீது தாம் கொண்டு வந்த பொருட்களைப் பாதுகாப்பாளன் ஒருவனிடம் ஒப்படைத்துவிட்டு போர் முனைக்கு ஓடினார். அங்கே தமது சகோதரர்களைக் கண்டு தாவீது நலம் விசாரித்தார்.

அப்போது கோலியாத்து பெலிஸ்தியரின் அணியிலிருந்து வெளியேறி இஸ்ராயேலர்களுக்குச் சவால் விட்டதோடு அல்லாமல், அவர்களைக் கேவலமாகவும் பேசினான். அவனது தோற்றத்தைக் கண்ட மாத்திரத்திலேயே இஸ்ராயேலர் அனைவரும் ஓடி ஒளிந்து கொள்ளுவதைத் தாவீது பார்த்தார். "இதோ! இம்மனிதனைப் பார்த்தீர்களா? இஸ்ராயேலர்களை இழிவுபடுத்துகிற இவனைக் கொன்று முடிக்கிறவனுக்கு அரசர் செல்வங்களை வாரி வழங்குவார்; தமது மகளையே மணம்முடித்துக் கொடுப்பார்; அத்துடன் இஸ்ராயேலருக்குள் அத்தகைய வீரனின் தந்தை வீட்டாருக்கு மாத்திரம் வரி விலக்கும் அளிக்கப்படும்" என்று இஸ்ராயேலர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டது தாவீதின் காதுகளிலேயே விழுந்தது.

உடனே தாவீது அங்கிருந்த இஸ்ராயேலர்களிடம் "வாழும் கடவுளின் படைகளான இஸ்ராயேலர்களைப் பழித்துப் பேச விருத்தசேதனம் (சுன்னத்து) இல்லாத இந்தப் பெலிஸ்தியன் யார்? இவனைக் கொல்லுகிறவனுக்கு என்னென்ன கிடைக்கும்?" என்று கேட்டார். இஸ்ராயேலர்கள் விளக்கமாக எல்லாவற்றையும் தாவீதிடம் தெரிவித்தார்கள்.

இஸ்ராயேலர்களோடு தாவீது பேசிக் கொண்டிருந்ததை அவரது மூத்த சகோதரரான எலியாபு கேட்டு விட்டார். அவருக்குக் கோபம் வந்தது. அவர் தாவீதைப் பார்த்து, "நீ ஏன் இங்கு வந்தாய்? நமது கால்நடைகளைப் பாலைவனத்தில் யாரிடம் ஒப்படைத்தாய்? உன் செருக்கையும், ஆணவத்தையும் நான் அறிவேன்; ஏனென்றால் போரை வேடிக்கை பார்ப்பதற்காக உன் கடமையை விட்டுவிட்டு இங்கே வந்து விட்டாய்" என்று பேசினார். அதற்கு தாவீது, "நான் அப்படி என்ன செய்து விட்டேன்; ஒரு கேள்விதானே கேட்டேன்" என்று அவருக்கு மறுமொழி சொல்லிவிட்டு அவரை விட்டு அகன்றார். வேறொருவனிடம் சென்று முன்பு அவர் கேட்ட கேள்வியையே தாவீது கேட்டார். எல்லோருமே கோலியாத்தைக் கொன்றால் என்னென்ன கிடைக்கும் என்றே பட்டியல் போட்டார்கள். இருந்தாலும் தனது இனத்து மக்களை அன்னியன் ஒருவன் பழித்துப் பேசுகிறான் என்பதும், அவனது தோற்றத்தைக் கண்டு இவர்கள் பயந்து சாகிறார்கள் என்பதுமே தாவீதின் மனத்தில் சங்கடத்தை உண்டு பண்ணியது. "கடவுளின் மக்களாகிய இஸ்ராயேலர்களைப் பழிப்பதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்தப் பெலிஸ்தியன் யார்?"



என்று கேட்டு ஓர் ஆண் மகன் வந்துள்ளான் என்கிற செய்தி அரசரான சவுலை எட்டியது. ''இவன் பொருட்டு யாரும் கலங்க வேண்டியதில்லை; நானே சென்று அந்தப் பெலிஸ்தியனோடு போரிடுவேன்'' என்று தாவீது அரசனிடம் வாக்குறுதி கொடுத்தார்.

அரசரோ அவரைப் பார்த்து, "நீயோ இளைஞன்; இந்தப் பெலிஸ்தியன் சிறு வயது முதலே போர்ப் பயிற்சி மிக்கவன்; நீ எப்படி இவனை எதிர்த்துப் போரிட இயலும்?" என்று கேட்டான். அதற்கு தாவீது "உமது அடியானாகிய நான் என் தந்தையின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும்போது சிங்கமோ அல்லது கரடியோ மந்தையில் புகுந்து ஆட்டைக் கவ்விக் கொண்டு ஓடினால் நான் அவற்றைப் பின்தொடர்ந்து ஓடி அவற்றின் வாய்களிலிருந்து ஆட்டை மீட்பேன்; என் மீது பாய்ந்தால் அவற்றை அடித்துக் கொல்லுவேன். உமது அடியானாகிய நான் சிங்கத்தையும், கரடியையும் கொன்றிருக்கிறேன். விருத்த சேதனம் இல்லாத இந்தப் பெலிஸ்தியனும் அவற்றில் ஒன்றைப் போலத்தான். என்னைச் சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த ஆண்டவர் இந்தப் பெலிஸ்தியனின் கைக்கும் கண்டிப்பாகத் தப்புவிப்பார்'' என்றார். அதற்குச் சவுல் "சென்று வா! ஆண்டவர் உன்னோடு இருப்பார்" என்றார்.

பின்பு சவுல் தமது உடைகளைத் தாவீதிற்கு அணிவித்தார். வாளை இடையிலே சொருகிக் கொண்டு நடப்பதே தாவீதிற்குச் சிரமமாக இருந்தது. நடந்து நடந்து பார்த்தார். பிறகு ஒரு முடிவிற்கு வந்தவராக எல்லா உடுப்புகளையும் கழற்றினார். தாவீது தமது கோலைக் கையிலே எடுத்துக் கொண்டார். நீரோடையிலிருந்து வழுவழுப்பான ஐந்து கூழாங்கற்களைத் தேர்ந்தெடுத்து இடையனுக்குரிய தமது பையில் போட்டுக் கொண்டார். தமது கவணைக் கையில் பிடித்துக் கொண்டு பெலிஸ்தியனை நோக்கிச் சென்றார். பெலிஸ்தியனோ, தாவீதைக் கூர்ந்து பார்த்து ஏளனம் செய்தான். ஏனென்றால் திமிங்கிலத்தைப் போல இருந்த கோலியாத்திற்கு முன்பாக, தாவீது ஒரு சின்ன செதில் மீனைப் போல நின்றார்.

அப்போது கோலியாத்து தாவீதைப் பார்த்து, "நீ கோலுடன் என்னை நெருங்கி வருகிறாயே? நான் என்ன நாய் என்று நினைத்தாயா?" என்று கேட்டான். மீண்டும் அவன் தாவீதை நோக்கி, "அருகே வா! வானத்துப் பறவைகளுக்கும், வனத்து விலங்குகளுக்கும் இன்றே உன் உடலை இரையாக்குவேன்" என்றான். அதற்கு தாவீது "நீ வாளோடும் ஈட்டியோடும் வந்திருக்கிறாய்; ஆனால் நானோ நீ



''பொண்ணு வீட்டுக்காரங்க, கடைசியிலே இப்படியொரு 'சீர்திருத்தக்' கல்யாணம் பண்ணுவாங்கன்னு நாங்க நினைக்கவே இல்லை!''

''என்னங்க ஆச்சு?''

''முதல்லே, செய்யறதா சொன்ன சீர்களை எல்லாம் கடைசியிலே திருத்தி, குறைச்சுச் செஞ்சுட்டாங்க!''

— வி. ரெங்கநாதன்

பழித்துப் பேசிய இஸ்ராயேலர்களின் ஆண்டவரின் பெயரால் வந்திருக்கிறேன். இன்றே ஆண்டவர் உன்னை என் கையில் ஒப்படைப்பார். நான் உன்னை வீழ்த்தி உன் உடலைத் துண்டிப்பேன். பெலிஸ்தியரின் பிணங்களைப் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் பங்கிடுவேன். இதனால் இஸ்ராயேலரின் கடவுளை எல்லோரும் அறிந்து கொள்ளுவார்கள்'' என்றார்.

கோலியாத்து தனது தெய்வங்களின் பெயர்களால் தாவீதைச் சபித்துவிட்டு அவரை நோக்கி நடந்தான். தாவீதோ சற்றும் அச்சப்படாமல் தமது பையில் கையை விட்டு ஒரே ஒரு கல்லை எடுத்து அதைக் கவணில் வைத்துச் சுழற்றி கோலியாத்தின் நெற்றியைக் குறி பார்த்து எறிந்தார். அந்தக் கல் அவனது நெற்றியைத் தாக்கி உள்ளே பதியவே, கோலியாத்து நொடிப்பொழுதில் இரத்தச் சேற்றில் அடியற்ற மரம்போல விழுந்தான். ஓடிவந்த தாவீது கோலியாத்தின் உடைவாளை உருவி, அவன் மீது ஏறி நின்று அவனது தலையைக் கொய்தார். வெற்றி முழக்கமிட்ட இஸ்ராயேலர்கள் காத்து, எக்ரோன் எல்லை வரை எதிர்ப்பட்ட பெலிஸ்தியர்களை வெட்டிச் சாய்த்தார்கள்.

சவுல் அரசர் தமது இரண்டாவது மகள் மீக்கால் என்பவளைத் தாவீதிற்கு மனைவியாக்கினார். தாவீதின் வீரம் இஸ்ராயேலர்களின் தலைமுறைகள் தோறும் புகழப்படுவதாக ஆயிற்று. மனிதனால் ஆகாதது ஒன்றுமில்லை என்பதற்குத் தாவீதின் வல்லமை

சாட்சியம் ஆனது.

(தொடரும்)



அனந்துவின் முகத்தில்

ஒன்றிரண்டாய்ப் பூத்திருந்த வியர்வை முத்துக்கள் இப்போது ஒரு நூறாய்ப் பெருகியிருந்தன. மணிக்கட்டைத் திருப்பி மணி பார்த்தான். 'அவர் ஒன்பது மணிக்கு வரச் சொல்லியிருக்கிறாரே, இருபது நிமிடம் முன்னதாகப் போனால் கோபித்துக் கொள்வாரோ' என்கிற எண்ணத்தில், அந்தக் கடை வாசலில் காத்திருந்தான்.

நகரத்தின் சாலை வழக்கமான நெரிசல்களுக்குத் தயாராகிக் கொண்டிருந்தபோது, அனந்துவின் மனத்துள் எண்ணக் கோர்வைகள் நெரிசலிட்டிருந்தன. தான் அந்த எழுத்தாளரைச் சந்திக்க வந்த நோக்கம். அவரிடமிருந்து தான் எதிர்நோக்கும் தேவை ஆகியவற்றை ஒருமுறை மனத்துள் வரிசைப்படுத்தி சொல்லிப் பார்த்துக் கொண்டான். எண்ணங்கள் அங்கங்கே நிரடினாலும் ஓரளவு வரிசைப்படுத்தி, கோர்வையாகக் கொட்டி விடலாம் என்கிற தெம்பு வந்தபோது, சிறிது சந்தோஷம் மனசுக்குள் முளை விட்டது.

நகரத்தின் கறுகறுப்பை ரசிக்க யத்தனித்தான். எப்போதும் மனத்தில் ஒரு குதூகலத்தை காசுகச் செய்யும் விதவிதமான கடிதார்களும் மிடிகளும் புடைவைகளும் அன்று ஏனோ அவனை ஏதும் செய்யவில்லை.

காலிங்பெல்லை அழு[illegible] டம், அங்கு நடக்கப் போ[illegible] அனந்து அறிந்திருக்கவில்லை.

சுற்றிலும் தசாங்கம் மணக்க... கொததாய் வாழைப் பழத்துக்குள் காலூன்றியிருந்த ஊதுபத்திகள் புகையுமிழ.... எழுத்தாளர் படு பவ்யமாய் பூஜையிலிருந்தார். அனந்துவுக்கு மெலிதாய் ஒரு தும்மல் வரவே, சூழலின் சுத்தத்துக்கு பயந்து அதை வலிந்து அடக்கிக் கொண்டு அமர்ந்திருந்தான்.

வந்திருந்த பார்வையாளரை வாவென்று அழைக்காமல் தம் பணியில் கவனமாயிருந்த எழுத்தாளரைப் பார்த்து அனந்துவுக்கு சிறிது கோபம் வந்தது. அது பூஜையாயிருக்கட்டும் அல்லது வேறு எதுவாயிருக்கட்டும், வந்தவரை வாய் நிறைய வாவென்று அழைப்பதுதானே மனிதநேயம்..! கூடவே, அர்ஜுனனுக்கு குருவி மட்டும் தெரிந்த தொழில் சிரத்தையோ என்கிற சந்தேகமும் தொத்திக் கொண்டு வந்தது.

பூஜை முடித்த எழுத்தாளர் கதர்ச்சட்டை, வேட்டி சகிதமாய் அனந்துவுக்கு எதிரே வந்து அமர்ந்தார்.

"ஐயா நான் ஒரு பதினைந்து நிமிடம் எடுத்துக் கொள்ளலாமா...?"

"...."

"ஐயா ஒரு பதினைந்து நிமிடம் தாங்கள் எனக்கு ஒதுக்க முடியுமா...?"

"..."

"ஐயா ஒரு பதினைந்து நிமிடம்..."

"..."

கேள்வியை மாற்றி மாற்றிப் போட்டும் எழுத்தாளரிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. அவர் அனந்துவின் கண்களையே ஆழ ஊடுருவிக் கொண்டிருந்தார்.

அனந்துவுக்கு அதன் அர்த்தம் புரியாவிட்டாலும் தன்னை, தன் உருவத்தை, தன் கேள்வியை ஒருவன் புழுவாய் நோக்குவது என்னவோ போல் இருந்தது...

"ஐயா என்னைப் பற்றி சிறு அறிமுகம் செய்து கொள்ளவா?"

"..."

"என் பெயர் அனந்து. எம்.ஏ. படித்திருக்கிறேன். பாடங்கள் படிப்பதைவிட மனித மனங்களைப் படிப்பதில்தான் நாட்டம் அதிகமாயிருக்கிறது. எங்கும் எல்லோரும் கஷ்டப்படுவதையும், கஷ்டப்படுத்துவதையுமே தொழிலாய்க் கொண்டிருக்கும்போது... அவர்களின் கஷ்டங்களுக்கான காரணம் புரிகிறது. அதனை



குருவைத் தேடி...

நந்தன்

சகித்துக்கொண்டு சுகிக்கத் தெரியாமல் மேலும் மேலும் சிக்கலாக்கித் தவிக்கும் அவர்களது அறியாமை புரிகிறது. இவற்றுக்கான தீர்வு மனதுள் எப்போதும் சுரந்தபடி உள்ளது. அதனை உள்ளே பூட்டி வைக்க முடியாமல் பிரசவிக்கத் துடிக்கிறேன்.' அதை.... சொல்வதை விட, எழுதினால், வலு கூடுதல் என்று தோன்றுகிறது. அதனால் நான் எழுதத் தீர்மானித்..."

அனந்து வார்த்தைகளை முடிக்கு முன், "அது சரி... என்னை எதுக்காக பாக்க வந்தே?" என்று எழுத்தாளர் முதன்முறையாய் முத்து உதிர்த்தார்.

அவரது கேள்வி இரண்டாம் முறையாய் அனந்துவைத் தாக்கிற்று. நெஞ்சை ரணப்படுத்திற்று. அதைவிட, அவரது கேள்வியில் தொக்கியிருந்த "வந்தே...?"என்கிற ஒருமை விகுதி அனந்துவை குப்புறத் தள்ளிற்று. முப்பது வயது இளைஞனை முகம் தெரியாத ஒருவர் - அவர் வயசானவராகவே இருக்கட்டும் - ஒருமை விகுதியில் விளித்து, ஏகத்தாளமாய்க் கேட்ட கேள்வியில் அனந்து, தலை குப்புற மண்ணில் விழுந்து மூக்கு கிழிபட்டு நாசித் துவாரங்களில் குருதி ஒழுக நின்றான்.

இந்தக் கால இடைவெளியைத் தவறாய்ப் புரிந்து கொண்ட எழுத்தாளர், "ஆங்... உன்னால பதில் சொல்ல முடியாது. ஏன்னாக்க இதுக்கு பதிலே கெடையாது. நீ என்னால - என் எழுத்தால ஆகர்ஷிக்கப்பட்டு இங்க ஓடி வந்துருக்க. இந்தத் தேடலுக்கு பதில் கெடையாது..."

"இல்லை ஐயா. இல்லை. உங்கள் கேள்விக்கு என்னிடம் பதில் இருக்கிறது. பதில் இல்லை என்பது தவறான புரிதல். நீங்கள் அனுமதியளித்தால் பதில் சொல்லத் தயாராயிருக்கிறேன்" என்று மெல்லிய குரலில் அனந்து சொன்னபோது,

எழுத்தாளர் தன் கண்களை சிரமப்பட்டு சுருக்கி 'என்ன...?' என்கிற த்வனியில் அனந்துவை நோட்டமிட்டார்.

அனந்து மீண்டும் மெலிதான குரலில் ஆரம்பித்தான். "இதுவரை எனது ஐந்து சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன. அவை முழுவதையும் தாங்கள் படித்து..."

எழுத்தாளர் தன் கைகளிரண்டையும் மேலே உயர்த்தி விரல்களை ஒன்றோடொன்று பிணைத்து சோம்பல் முறித்தார்.

"... அவை முழுவதையும் தாங்கள் படித்து...", அனந்து மெலிதான குரலில் தொடர,

"ரமா, நா ரெடிம்மா... தோசை ஆயிடுத்துன்னா எனக்குப் போடு..."



''அந்த ஆளுகிட்ட 'மே ஐ ஹெல்ப் யூ'ன்னு போனமாசம் கேட்டது தப்பாப் போச்சு!''

''ஏன், அதுல என்ன தப்பு?''

''இந்த மாசம் 'ஜ'ஒன் ஐ ஹெல்ப் யூ'ன்னு என்கிட்ட திருப்பிக் கேட்கறான்!''

– தாரை செ. ஆசைத்தம்பி

''.... அவை முழுவதையும் படித்து...''

''மௌனகாப் பொடியே போதும்மா... சட்னியெல்லாம் அரைச்சு கஷ்டப்படாதே!''

''...அவை முழுவதையும் படித்து. நா... நா இப்ப எந்த லெவல்ல இருக்கேன்னு நீங்க சொல்லணும். எதை நோக்கி நா பயணப் படணும்னு எனக்கு நீங்க தெரிவிக்கணும். பயணிக்கற வழிய நீங்க எனக்கு அறிமுகம் செஞ்சு வைக்கணும். என் எழுத்தப் படிச்சிங் கன்னா நா பரிசல் செலுத்திய பாதை சரி யான்னு நீங்க சொல்லலாம் இல்லியா...? இது வரை நா யாரு... என் எழுத்து குப்பையா இல்ல கோபுரத்த நோக்கி அடி வெக்கறா மாதிரி ஏதும் தென்படறதா...'' அடுத்த தோசை வரு வதற்குள் படபடவென்று அனந்து பிரஸ் தாபித்து முடிக்க...

அனந்துவின் செவுள் கிழிந்தது.

''என்னய்யா ரைட்டர் நீ? வாயத் தொறந்து பேசய்யா. முணு முணுமுணுன்னு உன்நாக்குக் குள்ளயே பேசிண்டு... நீ என்ன பொட்டையா இல்ல அலியா? முகத்துல ஒரு தேஜஸையே காணோமே உனக்கு. முணு முணுன்னு... என்ன நாகரிக... வேண்டிக் கெடக்கு? தொப் புள் கொடீலேர்ந்து 'கணீர்'னு குரல் வெளில வரணும்யா. வாயத் தொறந்து பேசவேன்னு வெச்சுக்கோ, நீ ஒரு பேடின்னு அர்த்தம். பவிஷுக்காரன்னு பேரு''

எழுத்தாளரின் 'நாகரிக' வார்த்தைகள் அனந்துவை பிரம்பு கொண்டு விளாசின. பட்டை பட்டையாய் உடம்பில் சிவப்புக் கோடுகள் பளிச்சிட வைத்தது.

அனந்துவுக்குப் புரியவில்லை. எப்...எப்படி இது என்று புரியவில்லை. இவர் தன்னைத் தாக்குவது ஏன் என்று புரிபடவில்லை. தன்னோடு ஒத்த வலிவுடையவனைத் தாக்கு வதுதானே யுத்த நியதி. இவர் ஏன் என்னைத் தாக்குகிறார்? என்னை எதிரியாய் பாவித்து அம்பு தொடுக்கிறார்..! நான் இவரிடம் கற்றுக் கொள்ள வந்தவனல்லவா. இவருக்குச் சமமாய் அமர்ந்து பேசவே கூசி நின்றவனல்லவா! ஏன் என் நெஞ்சு நோக்கி அம்பு வீசுகிறார்? அதுவும் அம்புறாத்துணி காலியாகும்வரை அடுத்தடுத்து அம்பு வீசுவது ஏன்? அனந்துவுக்குப் புரிய வில்லை.

இருந்தும் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும் என்று தோன்றியது அனந்துவுக்கு. தான் பேடியல்ல என்று பேசத் தோன்றியது. தன்னுள் கனன்று கொண்டிருக்கும் ஜ்வாலைக் குப் பொருள் சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

அனந்து தன் குரலை சிறிதும் உயர்த்திக் கொள்ளாமல் அதே ஸ்தாயியில் ''ஐயா, நான் பேசுவது உங்களிடம்தானே. என் எண்ணங் களைத் தாங்கள் கேட்க வேண்டும் என்பதற் காகத்தானே? நான் வேறு யாருக்காகவும் பேச வில்லையே. என் குரல் இரண்டடி எட்டத்தில் இருக்கும் தங்கள் செவியில் விழுந்தால் போதாதா...? அதற்கு நீங்கள் பதில் பகர்ந்தால் போதாதா...? இதற்கு ஏன் நான் நாபிக் குழி யிலிருந்து ஓங்கிக் குரலெழுப்ப வேண்டும்...!''

அனந்துவுக்கு காப்பி பரிமாறப்பட்டது. ஆவி பறக்க நின்ற காப்பியை அனந்து உதட்டருகில் கொண்டு சென்றபோது... அங்கு ஒரு பட்சி கரைந்தது.

''ஆங்... இப்ப இங்க என்ன கத்தித்து? என்ன சொல்லிக் கரைஞ்சுது... கவனிச்சியா...?'' என்று எழுத்தாளர் அனந்துவைக் கேட்டார்.

நெஞ்சுக்குள், தாக்கப்பட்ட காயம் இறி விட்ட ரணமாய் வலிக்க, புத்தி பணி செய்ய மறுத்து. ''குருவியோ... ஏதோ இருக்கும்...'' என்று ஒடுங்கிய குரலில் பதிலிறுத்தான் அனந்து.

எழுத்தாளர் வெடித்தெழுந்தார். காது நரம்புகள் சிவந்து நிற்க, நாசித் துவாரங்கள் விரிந்து அடங்க, ''பாத்தியாய்யா... உன்னோட அப்ஸர்வேஷன் பவர் எப்படியிருக்குன்னு? காக்காயப் போய் குருவிங்கறயே! அதான்யா... மொதல்லயே சொன்னேனோல்லியோ! மூஞ்சி பேஸடிச்சுக் கெடக்குன்னு. அதுக்குள்ள ஒரு தேடலையோ தேஜஸையோ காணோம்னு... இப்ப தெரிஞ்சுதா...? நா சொன்னது ரைட்டுனு புரிஞ்சுதா...?

''எப்படிய்யா இருக்கும் தேஜஸ்? எங் கேர்ந்து வரும் தேடல்? நீதான் அதிகப்ரசங் கியாட்டமா பேசறியே. பேசற பேச்சை நெஞ் சுக்குழிலேர்ந்து கனமா தைர்யமா இலேசமில் லாம பேசய்யான்னாக்க... உனக்கும் எனக்கும் கேட்டாப் போதாதான்னு தர்க்கம் பண்றே...

இங்க பார். நீ கத்துக்க வந்துருக்க. அதை ஞாபகம் வெச்சுக்கோ. கேட்டுக்க வர்றவன் முதுகு வளைஞ்சு நின்னு கேக்கணும். நெஞ்சை வெரைச்சுக் காட்டி எனக்கு கேள்வி போட்டன்னா, மிதிச்சுப்புடுவேன்! நா மிதிச்சா தாங்குவியா நீ? பணிஞ்சு நின்னு கேளு. அப்பத்தான் மண்டைக்குள்ள எதுனா ஏறும். நெஞ்சுக்குள்ள 'சிக்'குனு பதியும். வெரைச்சு நின்னு மாரைத் தூக்கினியோ... கேட்டுண்டதெல்லாம் வயத்தால பூடும். புரிஞ்சுக்கோ.

"இப்ப நா கிடு கிடுன்னு சொல்லிண்டே வரேன். மனசுல வாங்கிக்கோ. ஆத்துல போய் அசை போடு எல்லாத்தையும். நா திட்டினதையும் சேர்த்துத்தான். அப்ப உனக்குப் புரியும். நா உனக்கு நன்மை செஞ்சுருக்கேன்னு. சும்மா... ஆஹா அடுத்த ஜெயகாந்தன் உதயமானது மாதிரி இருக்குன்னு நான் உன் எழுத்தப் பாராட்டிடலாம். நீயும் ஷோக்கா வாயெல்லாம் பல்லா ஊட்டுக்குப் பூடுவ. ஆனா போனதுக்கப்புறம் அழிஞ்சு பூடுவ! இப்ப நான் உன்னை அசைச்ச அசைவு, உனக்கு எப்பவும் மண்டைக்குள்ள நிக்கணும்... நிக்கும்!"

எழுத்தாளர், ஒன்று இரண்டு மூன்று என்று வரிசையாய் விட்னி ஷெல்டனில் ஆரம்பித்து சொல்லிக் கொண்டே வர... அனந்துவுக்கு எதுவும் நினைவில் பதியவில்லை. அடித்த புயலில் மனைவி மக்கள் முதல் அத்தனையும் இழந்து நிர்க்கதியாய் நிற்பவன் போல் மலங்க மலங்க விழித்தான். எழுத்தாளரின் குரல் எதிரே உச்சி வரை எழும்பி நின்ற சுவரில் பட்டு 'நீம் நீம்' என்று எதிரொலித்துக் கொண்டிருந்தது. அனந்து, காயடிக்கப்பட்ட காளையாய் எதிரொலி வந்த திக்கையே மிரட்சியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். விழிகள் எழுத்தாளரின் முகத்தை நேர் கொண்டு நோக்கினாலும், மனம் அங்கே குவிய மறுத்தது. அயர்ந்து போய் நின்றான் அனந்து.

குருவும் சிஷ்யனும் தோழமை கொண்டு கற்றுக் கொள்வது இங்கு சாத்யமில்லையா? இது, இங்கு பிறப்பு கொள்ளும் பிள்ளைகளுக்கேயுரிய சாபமா...? கண் கட்டி நடை பழகும் எனக்கு கோல் பிடித்து ஆதரவாய்ப் பயிற்றுவிக்கும் ஆள் இங்கு கிடைப்பதரிதா...?


பலவிதமான முடிச்சுகள் ஒன்றோடொன்று சேர்ந்து கொண்டு, சிக்கல் மேலும் சிக்கலாகித் தோன்றி நின்ற வேளையில், வேறொரு எண்ணமும் அனந்துவின் நினைவில் நிழலாய்ப் படர்ந்தது.

அந்த எழுத்தாளரின் எழுத்துக்கள் கூர்வாள் கொண்டு இவன் நெஞ்சு தாக்கியது போல் வேறோர் எழுத்து தாக்கவில்லை. அவரது மனிதநேயம் சொட்டும் எழுத்துக்களை விழிகளில் நீர் புரளப் படித்த நாட்கள் மனத்துள் பசுமையாய் இழையோடின. அஃறிணைப் பொருட்களெல்லாம்கூட, அவர் எழுத்தில், பாத்திரங்களாயல்லாமல் பாடங்களாய் நெஞ்சுக்குள் பவனி வருவது தடுக்கப்பட முடியாத ஒன்று. அந்த எழுத்துக்குள் பூரணமாய் பொதிந்திருந்த உண்மையின் தாக்கம் கணுக்கால்வரை பலமாய்ப் பரவி நிற்கிறது.

இந்த எண்ணச் சுழற்சிகள் அலை அலையாய் மனத்துள் வியாபிக்க, அனந்து மாடிப்படி இறங்கி நடந்தான். 'இவன் அல்ல, இவன் எழுத்து மட்டுமே என் குரு' என்கிற எண்ணம் அவனுக்கு ஜனிக்கலானது.

யாரைப்போலப் பிறக்க ஆசை?

ஓவியர் மணியம் செல்வன்:



டி.வி.யில் ஒரு டாகுமெண்டரி படம் பார்த்தேன்: ஆதரவற்றோர் இல்லத்தை தூய்மைப்படுத்திக் கொண்டிருக்கிறார் அன்னை தெரசா. அதிலே கூட அத்தனை சுச்சிதம்; ஈடுபாடு! மரணப் படுக்கையில் இருக்கும் பெண்மணியிடம் அவர் காட்டும் பரிவு. அன்று இரவு முழுக்க என் மனம் அவரது நினைவிலேயே சுழன்று வந்தது! மறுபடி பிறந்தால் அவர் போலவே பிறக்க விரும்புகிறேன். அதே நேரம் விட்டகுறை, தொட்ட குறையாக ஓவியம், நாட்டியம், சிற்பம் என ஏதாவது கலையில் ஈடுபட ஆசை.



– மௌலி

மருத்துவ(ர்) மகிமை:

டாக்டர் ஜானகி (சரும நோய் நிபுணர்)



பதினைந்து வருடங்களுக்கு முன் ஒரு பெண்மணியிடமிருந்து அவசரத் தொலைபேசித் தகவல் வந்தது. லண்டனிலிருந்து விமானத்தில் சென்னை வந்த அவர் என்னை உடனடியாக ஏர்போர்ட்டுக்கு வரும்படி வேண்டிக் கொண்டார்.

அந்தப் பெண்மணியை எனக்கு ஏற்கெனவே தெரியும். முப்பத்தைந்து வயதான அவர் சர்வதேச நிறுவனம் ஒன்றில் மேலதிகாரியாகப் பணியாற்றுபவர். தமது குழந்தைகளின் சிறு சரும வியாதிகளுக்காக என்னிடம் அவர் வந்ததுண்டு.

தொலைபேசியில் அந்தப் பெண்மணி கூறியதிலிருந்து விமானப் பயணத்தின்போது அவரது உடலில் ஏகப்பட்ட பாதிப்புகள் உண்





டாகியிருந்தது தெரிய வந்தது. விமான நிலையத்துக்கு நான் வருவது சாத்தியமில்லை என்று கூறி அவரை க்ளினிக்கிற்கு வரச் சொன்னேன்.

தன் முகத்தை முழுமையாக மூடிக் கொண்டுதான் அந்தப் பெண்மணி வந்து சேர்ந்தார். அவரது கண்கள்கூட கிட்டத்தட்ட மூடிய நிலையில் இருந்தன. நல்ல காய்ச்சல். பார்த்ததுமே தீவிர நோயாளியின் 'களை' தெரிந்தது. உடலின் சில இடங்களில் சிவப்புப் பட்டைகள். முகத்தில் பல இடங்களிலும், கிட்டத்தட்ட தலை முழுவதும் கொப்பளங்கள். அவற்றிலிருந்து நீர் கசிந்து கொண்டிருந்தது. தம்மை மிக ஆபத்தான நோய் ஒன்று திடீரென்று தாக்கியிருப்பதாக எண்ணி அவர் பயந்து போயிருந்தார். உடலிலும், தலையிலும் தீவிர அரிப்பு மற்றும் எரிச்சல் உணர்வு.

ஐந்து நாட்களுக்கு முன் முகத்தில் ஆங்காங்கே சிவப்புத் திட்டுகள் தெரிந்ததாம். 'ஏதோ அலர்ஜியான உணவுப் பொருளை சாப்பிட்டு விட்டோம்' என்று முடிவு செய்து 'அவில்' மாத்திரையைப் போட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால் பயண நாளன்று நிலைமை மிக மோசமாகிவிட்டிருக்கிறது. விமானத்திலும் 'அவில்' உட்கொண்டிருக்கிறார். பலனில்லை.

இதையெல்லாம் கூறியவரிடம், ஒரு ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட் இது போன்ற கேஸ்களில் வழக்கமாகக் கேட்கும் சில கேள்விகளைக் கேட்டேன்.



• டாக்டர் ஜானகி

"உங்களுக்கு ஏற்கெனவே ஏதாவது தோல் வியாதி உண்டா? வேறு ஏதாவது உடல் நோய்க்காகப் புதிய மருந்து எதையாவது சாப்பிட்டீர்களா? ஏதாவது புதிய மேக்கப் சாதனத்தை சமீபத்தில் முகத்தில் பயன்படுத்தினீர்களா? சமீபத்தில் தலைச் சாயம் (ஹேர்



தலைக்கு வந்தது 'டை'யோடு போயிற்று!

டை) உபயோகித்தீர்களா?"


இத்தனை கேள்விகளுக்கும் இல்லையென்று அழுத்தமாகப் பதிலளித்தார் அந்தப் பெண்மணி. இதனால் என்னால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. நோயின் காரணத்தை சந்தேகமில்லாமல் தெரிந்து கொண்டால் தானே தகுந்த சிகிச்சை அளிக்க முடியும்?

பிறகு மீண்டும் அதே கேள்வியை மறுபடியும் நிதானமாகக் கேட்டேன். மிகவும் தயக்கத்துடன் லண்டனில் தாம் ஹேர் டையை முதல் முறையாகப் பயன்படுத்தியதாகச் சொன்னார்.

காரணம் பிடிபட்டு விடவே சிகிச்சை சுலபமானது. அவர் தலைக்கு ஷாம்பு வாஷ் கொடுக்க நிச்சயித்தேன். ஆனால் இதற்கு அந்தப் பெண்மணி சுலபத்தில் ஒப்புக் கொள்ளவில்லை. தம் தலையில் ஆங்காங்கே வெள்ளை முடிகள் தெரிவது தமது இமேஜை பாதிக்கலாம் என்பது அவர் எண்ணம்! வேறு வழியில்லை என்பதை விளக்கிக் கூறி ஒருவழியாகச் சம்மதம் வாங்கினேன். தவிர மிகவும் ஸ்ட்ராங்கான ('அவிலை'ப் போல பல மடங்கு சக்தி கொண்ட) ஸ்ட்ராய்டுகளை அவருக்கு அளிக்க வேண்டி வந்தது - காரணம் அவர் உடல் முழுவதுமே பலவித பாதிப்புகள்.

தொடர்ந்த ஒரு மாதம் முழுவதும் அவர் தீவிர மருத்துவ சிகிச்சை பெற வேண்டியிருந்தது என்றாலும் மூன்றே நாட்களில் முன்னேற்றம் தெரியத் தொடங்கியது. கற்பனை செய்து வைத்திருந்த பல்வேறு வியாதிகள் தமக்கு இல்லை என்பதை அறிந்து கொண்டதிலேயே அவருக்குப் பெரும் நிம்மதி. அதற்குப் பிறகு, "இனி தலைச்சாயம் பூசுவதை விட்டுவிடுவது நல்லது" என்றேன். அவரும் இதற்குச் சம்மதித்தார்.

இதை வைத்துக்கொண்டு தலைக்குச் சாயம் பூசிக் கொண்டாலே இது போன்ற தொல்லைகள் எல்லாம் வரும் என்று கற்பனை செய்து கலவரப்பட வேண்டாம். பத்தாயிரத்துக்கு ஒருவர் என்கிற வீதத்தில்தான் ஹேர்டை இப்படிப்பட்ட பாதிப்புகளைக் கொடுக்க



வாய்ப்பு உண்டு.

தலைசாயத்தை உபயோகிப்பதனால் ஏற்படும் இத்தகைய பாதிப்பு, ஒன்றிலிருந்து மூன்று வாரங்களுக்குப் பிறகு கூடத் தெரிய ஆரம்பிக்கலாம்! சில வாரங்கள் பொறுத்து ஒவ்வாமை ஏற்படுவதை 'டிலேட் ஹைபர் சென்ஸிடிவிடி' என்று குறிப்பிடுவோம்.

தலைச் சாயம் உங்கள் உடலில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாதவரை கவலையில்லை. ஆனால் காதுப் பகுதியில் அரிப்பு ஏற்பட்டாலோ முகம் மற்றும் உடல் முழுவதும் சிறு புள்ளிகள் தோன்றினாலோ உடனே தலைச் சாயம் தடவிக் கொள்வதை நிறுத்தி விடுங்கள். இப்படிப்பட்ட உடலமைப்பு கொண்டவர்களுக்குப் பொதுவாக எந்த பிராண்ட் ஹேர் டையைப் பயன்படுத்தினாலும் ஒத்து வராது. முதுமை அடைகிறோம் என்பதை மனதளவிலும் ஏற்றுக் கொண்டு தலைமயிரை இயற்கையாக விட்டுவிடுவதே புத்திசாலித்தனம்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு அந்த பேஷண்டைச் சந்தித்தபோது, "தலையில் ஆங்காங்கே வெள்ளிமுடி தெரிவதுகூட அலுவலகத்தில் ஒரு மதிப்பைப் பெற்றுத் தர உதவுகிறது" **என்றார் புன்னகையுடன்!**

சந்திப்பு: அருண்சரண்யா

GURUDEV

சுராணா! சுராணா!

இரும்பு போன்ற உறுதி,
தங்கம் போன்ற
நாணயம் கொண்ட
குழுமத்தின்
ஒரு அங்கம்.

சுராணா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட்

அளிக்கும் முதலீடு திட்டங்கள்

ஆண்டுக்கு வட்டி விகிதம் 15%

CARE
மதிப்பீட்டாளர்களால்
"போதுமான பாதுகாப்பு"
சான்றிதழ் பெற்றது.
(B B B +)

சுராணா நிறுவனங்கள் 1971 முதல் இயங்கி வருபவை, 25 ஆண்டு அனுபவம் பெற்றவை.

சுராணா நிறுவனங்கள் இரும்பு உற்பத்தி, இரும்பு வியாபாரம் முதலிய தொழில்களில் ஈடுபட்டுள்ளன. இக்குழுமம் தென்னகத்தில் இரும்பு வியாபாரத்தில் முதலிடம் வகிக்கிறது.

குழுமத்தின் மொத்த விற்பனை அளவு ரூ.125 கோடி.

சுராணா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட் (SFCIL), ஹயர் பர்ச்சேஸ், லீசிங், பில் டிஸ்கௌண்டிங், ஃபாரின் எக்ஸ்சேஞ், பப்ளிக் டிபாசிட் போன்ற பல வகைப்பட்ட நிதி நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளது.

SCHEME 1 - FIXED DEPOSITS

Period (Months)	Rate of Interest per annum
12 24 36 48 60	15.00% (Monthly) 15.19% (Quarterly)* 15.48% (Half-yearly)*

1. Minimum Amount of Deposit is Rs.3,000/-
2. Minimum Amount of Deposit for Monthly Interest is Rs.10,000/-
* Interest at 15% Compounded at Monthly rests.

SCHEME 2 - GURUDEV CERTIFICATE
(Cumulative Deposit)

Period (Months)	Minimum Amount (Rs.)	Maturity Value (Rs.)	Maturity Value for Rs. 1,000/-	Annual Yield% (Simple Interest)
12	3,000	3,482	1,161	16.06
24	3,000	4,042	1,347	17.36
36	3,000	4,692	1,564	18.80
48	3,000	5,446	1,815	20.38
60	3,000	6,321	2,107	22.14

1. Minimum Amount of Deposit is Rs.3,000/-
2. Addition in Multiples of Rs.1,000/-
3. Interest at 15% Compounded at Monthly rests.

SCHEME 3 - SURYODAY CERTIFICATE
(Cumulative Deposit)

Period (Months)	Principal (Rs.)	Maturity Value (Rs.)	Annual Yield% (Simple Interest)
12	862	1,000	16.01
24	742	1,000	17.38
36	639	1,000	18.83
48	551	1,000	20.37
60	474	1,000	22.19

Interest at 15% Compounded at Monthly rests.

சுராணா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட்

குரூப் ஆப் சுராணா
நெ. 16, ஒயிட்ஸ் சாலை, இரண்டாவது மாடி,
சென்னை - 600 014.
போன் : 8543145 / 8522684 / 8525596 / 8525396 / 8525694
ஃபாக்ஸ் : (044) - 8520687.

கிளைகள் : திருச்சி போன்: 461021, கொச்சின் போன்: 77454, சிதம்பரம் போன்: 85423, 85536, பெங்களூர் போன்: 228143, எர்ணாகுளம் போன்: 374617, கோயம்புத்தூர், ஆகிய இடங்களில் உள்ளன.

29.9.96 தேதியிட்ட மக்கள் குரல், Trinity Mirror நாளிதழ்களில் வெளியான சட்டபூர்வமான விளம்பரத்தின் தொடர்ச்சி

ADWAVE/SFC/5420

குறையொன்றுமில்லை

8

சாமான்யன் என்பதால் பகவான் யாரையும் ஒதுக்குவதில்லை. உயர்ந்தவன் என்பதாலே, பக்தியில்லாத ஒருவனை அவன் ஏற்றுக் கொள்வானா...? எல்லோரிடத்திலும் விசேஷமான அன்பு கொண்டவன் எம்பெருமான். பிரத்யக்ஷமாக அதை மட்டபல்லி க்ஷேத்ரத்தில் நமக்குக் காட்டியிருக்கிறான்.

அந்தக் காடுகளில் மஹரிஷிகள் தபஸ் செய்தபோது ரிக், யஜுர், ஸாம வேதங்கள் அவர்கள் காதுகளில் கேட்டன. இப்போது நம் காதிலே அவையெல்லாம் விழவில்லையே என்றால் அதற்குக் காரணம் அஞ்ஞானம். பரத்வாஜ மஹரிஷியைப் போன்ற அந்த உயர்ந்த நிலையை நாம் அடைந்தோமானால் நமக்கும் அது கேட்கும். நமக்குக் கேட்காததனாலேயே அது அங்கே ஒலிக்கவில்லை என்று சொல்லி விட முடியாது.

ரிக், யஜுர், ஸாம, அதர்வண ஸ்வரூபியாய் பரமாத்மா இருக்கிறான். பரமாத்மா ஸ்வரூபம் இந்தப் பிரணவம். அந்தப் பிரணவமும் எப்படி இருக்கிறது என்று கேட்டால் ரிக், யஜுர், ஸாம, அதர்வண ரூபமாகவே விளங்குகிறது.

பிரணவத்தைப் பூர்வ காலத்தில் மஹரிஷிகளெல்லாம் ஏகப்பட்ட விஷய விவகாரம் பண்ணியிருக்கிறார்கள்.

ரிக் வேதம் என்றால் என்னது...? அதனுடைய பெருமைகள் என்ன? என்று ஏகமாக ஆராய்ந்திருக்கிறார்கள். மண்டலம் மண்டலமாக ஆராய்ந்து, அதை புத்தியாகிற மத்தைப் போட்டுக் கடைந்து, அந்த ரிக் வேதத்திலிருந்து தேர்ந்தெடுத்த அக்ஷரங்களைத் தனிப்படுத்தினார்கள். அப்படி வகைப்படுத்தின அக்ஷரங்கள் எத்தனை தெரியுமா...? எட்டு அக்ஷரங்கள் வந்து நின்றன. ரிக் வேதத்திலிருந்து கிடைத்த சாரமான விஷயம் - எட்டு அக்ஷரங்கள். அதை அப்படியே நேர் வரிசையிலே எழுதிக் கொண்டார்கள்.

அடுத்தாற்போல் யஜுர் வேதம் - மிகவும் கடினமானது யஜுர் வேதம். அதை உச்சாரணம் பண்ணும்போதே நமக்குத் தெரியும் - அது எவ்வளவு கடினம் என்று. 'கன கம்பம்' என்றே பெயர் அதற்கு. இழுத்து இழுத்துச் சொல்ல வேண்டும்.

குருமுகத்திலேதான் யஜுர் வேதத்தைக் கற்க முடியும். சங்கீதமாகட்டும் வேதமாகட்டும், ஒருத்தரிடத்திலே முறையாகக் கற்றுக் கொண்டோமானால்தான் நமக்கு வரும். அப்படிக் கற்ற யஜுர் வேதத்தை, ரிஷிகள் விசேஷமான முறையிலே - ஸ்வரத்தோடு கூடிய அந்த யஜுர் வேதத்தைப் போட்டு நன்றாக அலசி ஆராய்ந்து பார்த்தபொழுது, என்ன ஆச்சர்யம்...! அதிலிருந்தும் எட்டு அக்ஷரங்கள் வந்தன! ரிக் வேதத்திலும் எட்டு அக்ஷரங்கள்; யஜுர் வேதத்திலும் எட்டு!

வீணை வாசிக்கும்போது தாளத் தந்தியைத் தட்டினால் 'ஹீம்' என்றொரு சப்தம் வரும். இதே போன்ற சப்தம் ஸாம வேதத்திலே வருகிறது. தானத்தைப் போல, சரியான மாத்ரா காலத்துக்கு அந்த 'ஹீம்' ஒலியை உச்சரிக்க வேண்டும்.

ஸாம வேதத்தைக் காட்டிலே ஒரு வகையாக உச்சரிக்க வேண்டும்; அதையே கிராமத்திலே வேறுவிதமாக கானம் பண்ண வேண்டும்.

சப்த ஸ்வரங்கள் சேர்ந்து இருக்கும்படியான வேதத்திலிருந்துதான் சங்கீதம் தோன்றியது. அதிலும் காந்தாரம் (க என்கிற ஸ்வரம்)

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



என்பது ஸாம வேதத்திலிருந்துதான் தோன்றியது.

சங்கீதத்துக்கு மூலமான ஸாம வேத ஸ்வரூபியாய் இருக்கிறான் பரமாத்மா. 'வேதங்களிலே நான் ஸாமவேதமாக இருக்கிறேன்' என்கிறான்.

அப்படிப்பட்ட ஸாம வேதத்தைப் போட்டுக் கடைந்தார்கள் ரிஷிகள். என்ன ஆச்சர்யம் பாருங்கள்! அதிலிருந்து எட்டு அக்ஷரங்கள் தோன்றின!

வேதங்கள் நான்கு உண்டு அல்லவா...? மூன்று வேதங்களைத்தான் இதுவரை சொல்லியிருக்கிறேன். நான்காவது அதர்வணம் - அதர்வண வேதத்தை ஆராயவில்லையா? என்று கேள்வி வரும்.

இந்த மூன்றைச் சொன்னாலே அதர்வணமும் அதில் அடங்கிவிடும். இந்த மூன்று வேதங்களையும் நாம் மனப்பாடம் பண்ணி வைத்துக் கொண்டு அதர்வண வேதத்தினுள்ளே புகுந்து பார்த்தோமேயானால், அதர்வண வேதம் என்பது 'பிராக்டிகல்'. ஆகையினாலே படித்தது சத்யம்தானா என்று அதன் மூலம் பரீட்சை பண்ணிப் பார்த்துவிடலாம். ஆகவே முதல் மூன்றைச் சொன்னால், நாலாவதும் அதிலே அடக்கம்தான் என்பது மகான்களுடைய கருத்து.

மூன்று வேதங்களும் ஆராயப்பட்டு, எட்டு அக்ஷரங்களிலே வந்து நின்றன. அது ஒரு மந்திரம். என்ன மந்திரம் என்று கேட்டால்

24 அக்ஷரங்களைக் கொண்ட காயத்ரி மந்திரம்;

மூன்று பாதங்களைக் கொண்ட காயத்ரி மந்திரம்.

ஒவ்வொரு பாதத்திலேயும் எட்டு எட்டு அக்ஷரங்களைக் கொண்டது காயத்ரி என்று வேதமே சொல்கிறது.

ரிக் வேத சாரமான முதல் வாக்கியம்; யஜுர்வேத சாரமான இரண்டாவது வாக்கியம்; ஸாம வேத ஸாரமான மூன்றாவது வாக்கியம் - இந்த மூன்றையும் சேர்த்து, ஒரே தடவை நாம் உச்சரித்தோமேயானால் அது ஒரு மந்திரமாகிறது. அதுதான் காயத்ரி மந்திரம்.

மூன்று வேதங்களும் இப்படி விசேஷமாகப் பரிணமித்து விட்டன. இதை அப்படியே வெறுமே விட்டு விடவில்லை மஹரிஷிகள் எல்லாரும்...

மறுபடியும் சிரமப்பட்டு, மேலும் அதை ஆராய்ந்தபொழுது, அந்த முதல் வாக்கியத்திலிருந்து- அதாவது ரிக் வேதத்திலிருந்து பு : என்றும்; யஜுர் வேதத்திலிருந்து புவ : என்றும்; ஸாம வேதத்திலிருந்து சுவ : என்றும் தோன்றி போர்புவஸ்ஸுவ: என்று ஒரு மந்திரம் உண்டாயிற்று.

இப்படி வந்த மூன்று வாக்கியங்களுக்கு வியாக்ருதி மந்திரம் என்று பெயர்.

''அந்த டைரக்டர் ஏன் அவரைப் பயங்கரமாகத் திட்டி சண்டை போடுகிறார்?''

''சினிமாவுக்கு ஒரு நல்ல கதை இருக்கு. சொல்லட்டுமான்னு கேட்டாராம்! அதான்!''

- எல். கோபாலகிருஷ்ணன்

இதையும் வெறுமே விடவில்லை முனிவர்கள். மேலும் சங்கோசப்படுத்திய பொழுது, சுருக்கி அனுபவித்தபொழுது, முதலிலிருந்து 'அ' என்றும் இடையிலிருந்து 'உ' என்றும் கடையிலிருந்து 'ம' என்றும் மூன்று அக்ஷரங்கள் தோன்றின. இந்த மூன்று அக்ஷரங்களையும் சேர்த்து உச்சரித்தார்கள் - பிரணவம்- ஓம்காரம் த்வனித்தது!

ஓம்காரத்தினுடைய விரிவு, வியாக்ருதி. வியாக்ருதியினுடைய விரிவு காயத்ரி; காயத்ரியினுடைய விரிவு எல்லா வேதமந்திரங்களும்!

எல்லா வேதமந்திரங்களும் காயத்ரிக்குள்ளே அடக்கம்; காயத்ரி வியாக்ருதிக்குள்ளே அடக்கம்; வியாக்ருதி பிரணவத்துக்குள்ளே அடக்கம்....

பிரணவம் எதற்குள்ளே அடக்கம்...? என்று கேட்டால், அதற்கு மேலே கிடையாது! அதுதான் உயிர்முடிச்சு; வேதம் அனைத்துக்கும் வித்து அது! வேத சிரஸ் என்று பெயர் அதற்கு. அணுஸ்வரூபமாய் இருந்துகொண்டு சமஸ்தத்தையும் தன்னுள்ளே தாங்கிக் கொண்டிருக்கிறது அந்த ஓம்காரம். அது எவ்வளவு கனமான பதம்!

த்ருவம் ஏகாக்ஷரம் ப்ரும்மா என்கிறது வேதம்.

த்ருவம் - சாச்வதம்

ஏகாக்ஷரம் - ஒரே அக்ஷரம்.

ப்ரும்மா - அதுதான் பரப்ரும்மம்!

- இப்படி வேதம் எடுத்துச் சொல்வதனாலே எல்லாவற்றுக்கும் உயிர் முடிச்சாகப் பிரணவம் அமைந்திருக்கிறது.

இந்தப் பிரணவத்துக்கு சம்ஹிதாகாரம் அசம்ஹிதாகாரம் என இரண்டு உண்டு.

சம்ஹிதை என்றால் சேர்த்துச் சொல்வது.

அசம்ஹிதை என்றால் பிரித்துச் சொல்வது.

பிரணவத்தை, ஓம்காரத்தை மூன்று மாத்திரத்தில் சேர்த்து உச்சரித்தோமேயானால் அது சம்ஹிதை.

அ, உ., ம என்று தனித்தனியே பிரித்துச் சொன்னால் அசம்ஹிதை.

அதற்குள்ளே என்ன இருக்கிறது என்று தெரிந்து கொண்டோம். இந்தப் பிரணவம் எப்படி வந்தது என்பதை இங்கே எடுத்துச் சொல்கிறது சாஸ்திரம் :

ஓம்காரம் போல 'அத' என்றொரு சப்தமும் உண்டு. இவை இரண்டும்தான் ஆதியிலே அந்த பிரும்மத்தினுடைய கண்டத்தைப் - கழுத்தை - பிளந்துகொண்டு வெளிப்பட்டன.



ஓம்காரம், அதம். இவற்றுள் முதலில் தோன்றியது ஓம்காரம். அதம் என்றால் 'அதனாலே' என்று பொருள். இந்த இரண்டுமே மங்களகரமான சப்தங்கள்.

மணவாள மாமுனிகள் என்ற ஆசார்யர் சொல்கிறார் :

வேதத்தை ஆரம்பிக்கும்போது ஓம் என்று சொல்லி ஆரம்பிக்க வேண்டும். முடிக்கும் போதும் அதே போல் ஓம் என்று சொல்லி முடிக்க வேண்டும் – ஒரு 'பல்லாண்டு, பல் லாண்டு' சொல்கிறது போல...

வேதத்துக்கு ஓம்காரம் எப்படியோ, அப்படி பிரபந்தத்துக்குப் பல்லாண்டு என் கிறார் மணவாள மாமுனிகள்.

அதே போல அத சப்தமும் மங்களகர மானது. அத சப்தம் மங்களகரமானது என் பதை யார் வியாக்யானம் செய்து காட்டுகிறார் என்று கேட்டால், மத்வாச்சார்யார் வியாக் யானம் செய்து காட்டுகிறார். அத சப்தமானது பரம மங்களத்தைத் தரக்கூடியது என்கிறார்.

பிரும்மத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் நமக்கு வருகிறது. இத்தனை நாள் கர்மாவைப் பண்ணிக் கொண் டிருந்தோம். அதை விட்டுவிட்டு, அதனால் பிர யோஜனமில்லை என்று பிரும்மத்திடம் வருகிறோம்.

ஒருத்தர் யக்ஞம் பண்ணுகிறார். நூறு அஸ் வமேத யக்ஞம் பண்ணினால் இந்திர பதவி கிடைக்கிறது என்கிறது சாஸ்திரம். அவர் நூறு அஸ்வமேத யக்ஞம் பண்ணுகிறார். இந்திர பதவியும் கிடைத்துவிடுகிறது. ஆனந்தமான அனுபவம் அவருக்கு.

ஆனால், அவருக்கும் ஒரு வேதனை... இந்திர பதவியில் இருப்பவருக்கும் ஒரு விசாரம்! இந்த இந்திர பதவியில் உட்கார்ந் திருக்கும்படியான காலம் அளவு இருக்கிறதே அது அஸ்வமேத யாகத்தில் சம்பாதித்த புண் ணியத்தின் அளவுதான். எவ்வளவு புண்ணியம் உண்டோ அவ்வளவு காலத்துக்குத்தான் அங்கே ஒருத்தரை உட்கார வைத்து அழகு பார்க்கும்! அந்தப் புண்ணியம் போய்விட்டால் அவரைப் பிடித்துக் கீழே தள்ளி விடுவார்கள்! மறுபடியும் அவர் பூலோகத்திலே வந்து பிறக்க வேண்டும்! மறுபடியும் அதே மாதிரி யக்ஞம் பண்ணித்தான் இந்திர பதவியை அடைய வேண்டும்! இந்திர பதவி மட்டும் இல்லை... குபேர பதவி, பிரும்ம பதவி – இப்படிப் பலதை அடையலாம். ஆனால் மறுபடி மறுபடி வந்து பிறக்க வேண்டும்!

இப்படியே பிறந்தவருக்கு வெறுப்பு வந்து விட்டது. எத்தனை நேரம்தான் கிணற்றில் நீரைச் சேந்தி சேந்தி எடுப்பது. மேலே வருகிற குடம் திரும்பவும் தண்ணிக்குள்ளே போய்ப் போய் விழ வேண்டியிருக்கிறதே! அது மாதிரிதான் இந்த ஆத்மா சொர்க்கத்துக்குப் போவதும் – இந்திர பதவி அடைவதும் – திரும்பவும் இதே பூமியில் வந்து பிறப்பதும்.

'ஒரு கிரஹத்தில் நித்தியமே குழம்பு சாத மும், வெண்டைக்காய் கறியமுதும் செய்வார் களேயானால் அலுக்காதோ...?' – அஹோபில மடம் நாற்பத்துநாலாவது பீடாதிபதி முக்கூர் ஸ்ரீமத் அழகிய சிங்கர் இப்படி வேடிக்கை யாய்க் கேட்பார்.

"நான்கு நாட்களுக்கு வெண்டைக்காய்; அது அலுத்துப் போனால் அடுத்த நான்கு நாட்களுக்கு வேறு காய்... அதை நான்கு நாட் கள் சாப்பிட்டால் அதிலே அதிருப்தி. இப் படியே 'புதிதாக ஏதாவது கிடைக்குமா...?' என்று மனம் தேடுகிறது."

ஒரே பண்டத்தைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு, அலுப்பு உண்டாகிற மாதிரி; ஐயோ எத்தனை நாள் சாப்பிடாமல் இருந்திருந்தால் இப்படி 'நோகம்' வந்திருக்காதே என்று தோன்றுகிற மாதிரி... பிரும்மத்தைத் தேட வேண்டும் என்கிற ஞானம் வருகிறது.

ஏன் ஞானம் முதலிலேயே வருவதில்லை... இத்தனை பட்ட பிறகு ஏன் வரவேண்டும்...? அது முன்னமேயே வந்துவிட்டால் நாம் எல் லோருமே பெரிய ஞானிகளாகி விடுவோமே...! அதனால்தான்!

சரி, கர்மாவிலே வைராக்கியம் ஏற்பட்டு, இனி யக்ஞமெல்லாம் பண்ணக்கூடாது; அது அற்பமான பலனையே கொடுக்கும்; அதை விட்டுவிட்டு பரபிரும்மத்தையே நேராக தியானம் பண்ணுவோம்... என்று பிரும்ம ஞானத்தைச் சம்பாதிக்கப் புறப்படுகிறோம்.

பிரும்மத்தைக் குறித்து ஆராய வேண்டும். அவன் யார்...? எப்படிப்பட்டவன்? அவன் தன்மை என்ன...? இதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று புத்தி வருகிறது.

பிரும்ம சூத்திரத்தில் பார்த்தால் என்ன இருக்கிறது...? 'அத' என்ற சப்தம் இருக்கிறது.

'அத' என்றால் பிறகு – இது சமஸ்க்ருதம்.

பிறகு...? எதற்குப் பிறகு?

கர்ம விசாரத்துக்குப் பிறகு என்று அர்த்தம். கர்ம விசாரத்துக்குப் பிறகு பிரும்ம விசாரம்.

ஆனந்த தீர்த்தர் சொல்கிறார் :

'கர்ம விசாரம் என்பது சாமானியம். பிரும்ம விசாரம் என்பது மங்கள தாயகம்.'

அதனால்தான் அத சப்த பிரயோகம். 'அத' என்பதை எதற்குப் போட்டிருக்கிறார் வியாஸ மஹரிஷி என்றால், கர்ம விசாரத்தைக்

காட்டிலும் பிரும்ம விசாரம் மங்களத்தைக் கொடுக்கும் என்பதாலே.

ராமாயணத்திலே இதற்கு ஒரு எடுத்துக்காட்டு இருக்கிறது.

அதையும் ஆனந்த தீர்த்தரே நமக்குக் காட்டுகிறார்.

ராமாயணத்திலே விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று எல்லோரும் தடையாக நிற்கிறார்கள். பகவான் மட்டும் அப்படியே உட்கார்ந்துவிட்டான். ராம பிரானுக்கு மூச்சே நின்று போய்விட்டதாம்.

எல்லோரும் பேசி முடித்த பிற்பாடு ஆஞ்சநேயர் அங்கே பேசுகிறார்.

அப்போது வருகிற சுலோகத்தைக் கவனிக்க வேண்டும் :

அத சம்ஸ்கார சம்பன்ன:

அனுமான் சசியோத்தவ :

இதையேதான் கம்பராமாயணத்தில் 'மாருதி வினைய வார்த்தை செவிமடுத்து அமுதின் மாந்தி' என்று கம்பர் சொல்கிறார்.

மாருதி சொன்ன வார்த்தை இருக்கிறதே- அதனால்தான் ராமனுக்குப் பிராணனே வந்ததாம்! மூச்சு ஆடியதாம்.

ஏன்...? இத்தனை நேரம் நின்று போயிருந்த மூச்சு இப்போது மட்டும் ஏன் ஆட வேண்டும்?

வாயுவினுடைய புத்ரனல்லவா ஆஞ்சநேயன். அதனால் ராமனுக்கே மூச்சுக்காற்று ஆடி உயிர்பெற்றதாம்!

மற்றவர்கள் பேச்செல்லாம் ராமனுக்குப் பிராணனைப் போக்கும்படியான பேச்சு. ஆஞ்சநேயன் பேச்சு மட்டும் அவனை வாழ்வித்தது.

வேதம் சொல்கிறது - அமங்கலமான வார்த்தையை ஒரு நாளும் பேசாதே.

'கேட்டேளா...!' என்று ஆரம்பித்துச் சிலர் பேச ஆரம்பித்தாலே ஆபத்து! அப்படிப்பட்டவர்கள் வந்தால், இப்போது அவகாசமில்லை பிறகு வாருங்கள் என்று சொல்லிவிட வேண்டும்!

மங்களமான விஷயத்தைப் பேச முடியாவிட்டால் மௌனமாகவே இருந்துவிட வேண்டும்.

ஆஞ்சநேயன் மங்களகரமாகப் பேசி ராமனை உயிர்ப்பித்தான்.

அத ஸம்ஸ்கார ஸம்பன்ன :

அத என்றால் பிறகு என்று சொன்னேன். மற்றவர்கள் பேசிய பிறகு அவன் பேசினான் என்பது ஓர் அர்த்தம். மங்களகரமாகப் பேசினான் - இது இன்னொரு அர்த்தம்.

ஆகவே அத என்கிற சப்தமும் அதனுடன் தோன்றிய ஓம்காரமும் இரண்டு நேத்திரங்கள் போன்றவை. இரண்டும் **மங்களகரமானவை.**

(தொடரும்)

Er. பெருமாள் மணிமேகலை பாலிடெக்னிக்

(Approved by : AICTE Vide No. 730-52-154(E) / ET/96 & DOTE, Tamil Nadu.

18-வது கிலோ மீட்டர், ஒசூர் - கிருஷ்ணகிரி நெடுஞ்சாலை, **கோனேரிப்பள்ளி**, ஒசூர் - 635 117.

+2 மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

கீழே குறிப்பிட்டுள்ள மூன்றாண்டு டிப்ளமோ வகுப்புகளில் **இரண்டாம் ஆண்டில் நேரடியாக சேருவதற்கு**
+2 (First Group / Vocational) தேறிய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

- **கெமிக்கல் டெக்னாலஜி**
- **கம்ப்யூட்டர் டெக்னாலஜி**
- **மெக்கானிகல் இன்ஜினியரிங்**



விண்ணப்பத்தின் விலை ரூ. 100/-

SSLC தேறியவர்கள் முதலாம் ஆண்டில் சேரலாம்

ஆண் / பெண் இருபாலாருக்கும் தனித்தனி விடுதி வசதி உண்டு.


மேலும் விபரங்களுக்கு கல்லூரி மற்றும் நிர்வாக அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக அலுவலகம் : ☎ : 04344 - 23070
16/2, வசந்த நகர், பைபாஸ் ரோடு, ஒசூர்-635 109. தருமபுரி மாவட்டம்.

- **கல்விக்கு ஏற்ற சுற்றுசூழல்**
- **நவீன ஆய்வு கூடங்கள்**
- **அனுபவமிக்க பேராசிரியர்கள்**
- **கலை மற்றும் விளையாட்டிற்கான வசதிகள்**

JEEVAA, HOSUR.

23.8.97-ம் தேதி புறப்பட விருக்கும் 15 நாட்கள் கொண்ட **காசி யாத்திரை** நபருக்கு ரயில் — பஸ் டிபன், காப்பி, 2 வேளை போஜனம், தங்கும் ஹால் வாடகை உள்பட நபருக்கு ரூ. 4975/-



23.8.97-ம் தேதி புறப்படவிருக்கும் 22 நாட்கள் கொண்ட பத்ரி-கேதார்-காசி-கயா-அலகாபாத்-அரித்வார்-டில்லி-மதுரா-ஆக்ரா. நபருக்கு ரயில்-பஸ் டிபன் காபி 2 வேளை போஜனம், தங்கும் ஹால் வசதியுடன் நபருக்கு ரூ. 5950

சென்ற 29.4.97-ம் தேதி அன்று புறப்பட்ட எமது காசி யாத்திரையில் கலந்து கொண்ட காஞ்சி அஷ்டலக்ஷ்மி ஸ்வீட்ஸ் அதிபர் ஸ்ரீ D.M. அரிகிருஷ்ணன் அவர்களால் காலமெல்லாம் யாத்திரைப் பணியினை ஓர் தெய்வீக சேவை எனப் போற்றி நடத்திவரும் திருச்சி நாமகிரி டிராவெல் சர்வீஸாருக்கு உள்ளன்புடன் அளிக்கப்பட்ட அஷ்டலக்ஷ்மி விருது. மேற்படி விருதினை வழங்கிய ஸ்ரீ D.M. அரிகிருஷ்ணன் கோஷ்டியாருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

22-26 நாட்கள் கொண்ட **3 TIER SLEEPER** கேரேஜ் மூலம் சென்னை சென்ட்ரலில் இருந்து 21.9.97-ம் தேதி ஜம்முதாவி எக்ஸ்பிரஸ் மூலம் புறப்பட்டு ஜெய்பூர் ஆக்ரா-மதுரா-டில்லி அரித்வார்-ரிஷிகேஷ்-கேதார்நாத்-பத்ரிநாத்-அலகாபாத்-அயோத்யா-காசி (நேபாள்) கயா கல்கத்தா-பூரி-விஜயவாடா வழியாக சென்னைக்கு திரும்பி வந்து சேர்கிறது. கட்டணம் ரூ 7575+1500/- ரூ. 2000 விதம் அட்வான்ஸ் செலுத்தி தேவையான டிக்கட்டுகளை முன்கூட்டியே ரிசர்வ் செய்து கொள்ள நேரில் வருவது நலம்.

பத்ரி-கேதார் யாத்திரைக்கு பிரதி வருடம் மே மாதம் முதல் அக்டோபர் வரை போய் வரலாம். (BEST CLIMATE)

விவரத்திற்கு ரூ. 2 ஸ்டாம்ப் அனுப்பி, முழு விவரங்கள் பெறலாம்.

ஸ்ரீநாமகிரி டிராவெல் சர்வீஸ்,

34-A/2 அக்ரஹாரம், மேலசிந்தாமணி, திருச்சி - 2. Ph : 704312
உரிமையாளர் K. E. நம்பிள்ளை. ஆர்கனைசர் என். சேகர், N.கங்கா



ஜெயலலிதா வழக்கில் ஒரு

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வெளியிடும்வரை, தம் மீது சி.பி.ஐ. கை வைக்கக்கூடாது என்று லாலு பிரசாத் யாதவ் முரண்டு பிடிக்கிறார் அல்லவா?

இருவரும் திடீரென்று சந்தித்தார்கள் - அட, நம் கற்பனையில்தான்!

ஜெ: நீங்க என் பெயரைச் சொல்லி, உங்க மேல இருக்கற வழக்கைத் தள்ளிப் போடறீங்களாமே? சபாஷ். ஏதோ என்னால முடிஞ்ச உதவி... வேற ஏதானும் ஹெல்ப் வேணும்னா சுப்பிரமணியம் சுவாமியைக் கேட்டுக்கங்க. நல்ல நல்ல பாயின்ட் எல்லாம் எடுத்துக் குடுப்பார்.

லாலு: இந்த மாதிரி விஷயத்துல, அந்த நிஜ மான சுவாமியே என்கிட்டத்தான் விபூதி மந்திரிச்சு வாங்கிக்கணும். இப்பகூடப் பாருங்க, ஆனானப் பட்ட சந்திரசேகரே நான் குற்றவாளி இல்லேன் னுட்டார். சொல்லுங்க, நான் நல்லா சமாளிக் கிறேனா, இல்லையா?

ஜெ: சும்மா சொல்லக்கூடாது. பிரமாதமாவே சமாளிக்கறீங்க. அதுலயும், 'சமோசாவுக்கு ஆலு மாதிரி பீகாருக்கு லாலு'ன்னு ஒரு போடு போட் டீங்களே, 'ஐயோ, ஐ அட்மையர் யூ' இது மாதிரி எல்லாம் பேச, எங்க கட்சிலகூட காளிமுத்துன்னு ஒருத்தர் இருக்கார். 'காஞ்ச கருவாடு மீனாகாது, உதிர்ந்த சாம்பல் சிகரெட்டாகாது'ன்னு எல்லாம் பிச்சு உதறுவார். ஜனங்களும் வாயப் பொளந்துக் கிட்டுக் கேப்பாங்க. பேப்பர்காரங்களும் பத்திரி கைல கட்டம் கட்டிப் போடுவாங்க!

லாலு: கழுத்தை நெரிச்சா எல்லாருக்கும் தண்ணிதான் வரும். எனக்குக் கவிதையே வரும்! அதான் லாலு!

ஜெ: சி.பி.ஐ. வழக்குத் தொடர அனுமதி கொடுக்காதீங்கன்னு சொல்ல, கவர்னரைப் போய்ப் பார்த்தீங்களாமே? நீங்க எதுக்கு அவரைப் போய்ப் பார்க்கணும்? அவர் இல்லே உங்களை வந்து கண் டுக்கிடணும்? என்னைப் பாருங்க. கவர்னர் என்கிட்டே தகாத முறையிலே நடந்துக் கிட்டார்னு ஒரே அடி அடிச் சேன். அவ்வளவுதான், கப்சிப். எல்லாரும் அசந்துட்டாங்க. உங்க ஸ்டேட்ல கவர்னரம்மா யாரா னும் இருந்திருந்தா நீங்களும் இப்படி தடாலடியாச் சொல் லித் தப்பிச்சிருக்கலாமே? அப் படி இல்லாம போயிடிச் சேன்னுதான் எனக்கு வருத் தமா இருக்கு. அதுக்கெல்லாம் கொஞ்சம் அதிர்ஷ்டம் வேணும் போல!

லாலு: அதைவிட, தேர் தலுக்கு முன்னாடி ராஜீவ் காந்தி கொலைல மூப்பனார் சம்பந்தப்பட்டிருக்கார்னு பயங்கரமா ஒரு பூச்சாண்டி விட்டீங்களே...

ஜெ: காதல்லயும், தேர்தல் லயும் என்ன வேணா புளுக லாங்க... யாரும் எதிர்பார்க் காத சமயத்துல டமால்னு... இதுமாதிரி ஒண்ணு அவுத்து விட்டாத்தான் அப்பப்ப சமாளிக்க முடியும்.

லாலு: ஆனா, உங்ககூட தனுவும் சிவராஜனும் நிக்கற மாதிரி போட்டோ போட் டதுக்கு, விட்டேனா பார்னு



மனோதர்ம சந்திப்பு!

மொலு மொலுன்னு பிடிச்சுக்கிட்டு, ஜனாதிபதி வரை போய்ட்டீங்களே?

ஜெ: இப்பத்திக்கு அது ஒண்ணு தான் நம்ம கைல துரும்பு மாதிரி கிடைச்சிருக்கு. அதையும் வுட்டுட்டா எப்படி? அடுத்தது வசமா மாட்டுறவரை கெட்டியாப் புடிச்சுக்க வேணாம்?... அத்தெ உடுங்க. மனைவிகிட்டே இருந்து கடன் வாங்கினாப்பல இன்கம்டாக்ஸ் ரிட்டர்ன்ல காமிச்சிருக்கீங்களாமே? ஆனாலும் சுத்த மோசம்ங்க இந்த இன்கம்டாக்ஸ் ஆசாமிங்க. ரிட்டர்ன் குடுத்தா ஆயிரம் நொள்ளை சொல்றாங்க. குடுக்கலேன்னா ஏன் குடுக்கலேன்னு குடையறாங்க!... சரி எப்படிங்க மனைவிகிட்ட கடன் வாங்கினாப்பல கணக்கு காமிச்சீங்க?

லாலு: அதுல என்ன தப்பு? என்ன தப்புன்றேன்? கணவன் சம்பாதிச்சு மனைவி கைல குடுத்துட்டா, அது மனைவியோட பணம்தானே? அதுலே கடன் வாங்கினாப்பல நான் காமிச்சதுல என்ன தப்பு?

சரி; உங்க இன்கம்டாக்ஸ்கூட கட்சிப் பணத்தை எடுத்து, கிட்டத்தட்ட நாலு கோடி ரூபாய் கட்டிட்டீங்க. இப்ப, கொஞ்சம்போல ஒரு பத்து லட்ச ரூபாயைக் கட்சிக்குத் திருப்பிக் கொடுத்துட்டீங்க! ஏங்க, இந்த பத்து லட்சத்தை எங்கேங்க ஒளிச்சு வச்சிருந்தீங்க? உங்க வீட்டையே கவுத்துப் போட்டுத் தேடினப்பக்கூட சிக்காத இந்தப் பத்து லட்சம், எப்பங்க திடீர்னு வந்தது? இன்னும் இப்படி சில்லறை சில்லறையா எவ்வளவு வச்சிருக்கீங்க, எங்க வச்சிருங்கீங்க?

ஜெ: ஹும்...ஹும்...பணம்னா வரும்; போகும். அதை எல்லாம் பெரிசா எடுத்துக்கக் கூடாதுங்கறதுதான் லைஃப்ல என்னோட பிரின்சிபிள்.

லாலு: ரொம்ப தத்துவமாப் பேசறீங்க!

ஜெ: பெரியார் வழி, அண்ணா வழி, அம்பேத்கார் வழி, புரட்சித் தலைவர் வழி, தீரன் சின்னமலை டிரான்ஸ்போர்ட் வழி... சாரி... இவங்க வழில எல்லாம் மூச்சு முட்ட நடந்து வந்தவள் நான். அதனால அப்பப்ப இப்படித்தான் தத்துவம் பேசுவேன்... அது கிடக்கட்டும். சி.பி.ஐல மாட்டிக்கிட்டு இப்பிடியா முழிப்பீங்க?

லாலு: சி.பி.ஐ. சொல்லிட்டாப் போதுமா? மக்கள் ஒப்புக்க வேணாம்? ஜனதா தள எம்.எல்.ஏ.க்கள் ஒப்புக்க வேணாம்? என்னை வோட்டுப் போட்டு உக்கார வச்சது ஜோகிந்தர் சிங்கா, மக்களா? அட அந்த மாடுங்களாவது வந்து சொல்லட்டும், நான் மாட்டுத் தீவனம் சாப்பிட்டேன்னு, சாரி, மாட்டுத் தீவனப் பணம் சாப்பிட்டேன்னு! ஒரு மாடு வந்து சொல்லுமா? நான் ஜனதாதளகாரன். ஜனதா சொல்லணும்; இந்த லாலு கேக்கணும்!

ஜெ: ஐயோ, ஐயோ, இது அப்படியே அருணாச்சலம் பட டயலாக் மாதிரி இருக்கே? ரஜினி உங்க தோஸ்த்தா... நான் கிளம்பறேன்.

லாலு: இல்லே, இல்லே உக்காருங்க... ஆமா, எதுக்கு இப்பிடி. அதுல அம்பது கோடி, இதுல நூறு கோடின்னு பிச்சப் பிச்சச் சேர்த்திங்க? என்னைப் பாருங்க; தொள்ளாயிரத்தம்பது கோடி: ஒரே அடி!

ஜெ: உங்களோடது வாயில்லாப் பிராணிங்க சமாசாரம். லாலு தீவனம் போட்டாலும், போடலேன்னாலும் வாயே திறக்காது... சரி என்னதான் பண்ணப் போறீங்க? என்ன ஆனாலும் ரிசைன் பண்ணிடாதீங்க.

லாலு: யாரு? நானா? ரிசைனா? ஃபெவிகால் போட்டுல்ல இந்த நாற்காலில உக்காந்திருக்கேன்? கவர்னர் சாங்ஷன் கொடுக்கட்டும். பார்த்துடறேன் ஒரு கை!

ஜெ: அப்படிச் சொல்லுங்க! எங்கே, எல்லாரும் சேர்ந்து போடற கோஷத்துல ஆடிப்போய் பதவியைத் தூக்கி எறிஞ்சிடுவீங்களோன்னு பயந்திட்டேன். உட்டுடாதீங்க. எனக்குத்தான் கொடுப்பினை இல்லே. அடுத்த எலக்ஷன் வரை காத்திருக்கணும். கெட்டியாப் புடிச்சுக்குங்க. நாற்காலியை. தர்மப்படி நடக்கணும்னு சொல்றது எல்லாம் சுத்த ஹம்பக்.

லாலு: அதானே? அரசியல் சட்டத்துல எங்க சொல்லியிருக்கு மாரல் கிரவுண்டுல ரிசைன் பண்ணணும்னு? அதுவே பரியல் கிரவுண்ட் ஆயிடும் அப்புறம்! தர்மப்படி நிச்சயம் நடந்துப்பேன். ஆமா; என் மனோ தர்மப்படி!

ஜெ: அட! இது புதுசா இருக்கே... ரொம்ப தாங்க்ஸ்! தமிழ்நாடு திரும்பி, நானும் இந்த மனோதர்ம டயலாக்கை மறக்காம **உபயோகிச்சுக்கறேன்....**

— சாருகேசி



'உடைந்த கண்ணாடியில்

முகம் பார்க்காதே!'
திட்டுகிறாள் அம்மா.
நான் எங்கே அம்மா....
உடைந்த முகத்தை
அல்லவா கண்ணாடியில்...'

– அந்த வாரப் பத்திரிகையில் வந்திருந்தது ஆறு வரிக் கவிதைதான்.

ஆனால், ஆழமாய் காயப்படுத்தியது புவனாவை.

கண்ணாடியை விட அதிகமாய் உடைந்திருந்த முகத்தைக் கற்பனை செய்து பார்த்தாள்.

அழுகையாய் வந்தது.

எல்லோருடைய முகமும் வாழ்க்கையில் ஏதாவது ஒரு தருணத்தில் உடைகிறது.

சில முகங்கள், நம்பிக்கை சிதைபடும்போது உடைகிறது.

சிலருக்கு, நேசிக்கிறவர்கள் வதைபடும் போது உடைகிறது.

பலருக்கு, காதல் இழக்கும்போது உடைகிறது.

பூக்கள் இறக்கும்போது கூட உடைகிறது சிலருக்கு.

வாடிய பயிரைக் கண்டு வள்ளலார் முகம் உடையவில்லையா?

கவிதை எழுதியவன் முகம் உடைந்தது எதனால்?

காரணம், கவிதையில் இல்லை.

காரணம் தெரியாமை, அர்த்தத்தை இன்னும் ஆழப்படுத்தியது. கற்பனையை மேலும் காயப்படுத்தியது.

கவிதை எழுதியவன் பெயர் 'ஜீவன்' என்றிருந்தது. விலாசம் இருந்தது. அவனைப் போய்ப் பார்த்தாலென்ன?

இப்பொழுதெல்லாம் இப்படித்தான்.

ஞாயிற்றுக்கிழமையானால், அனாதை ஆசிரமம் போவாள். முதியோர் இல்லத்துக்குப்

பிரஸன்னா



போவாள். குருடர் பள்ளிக்கூடம் போவாள். இன்று ஒரு கவிஞனை சந்திக்க மனம் வேண்டி நின்றது.

புருஷன் இறந்த பிறகு, வேறெந்த விஷயத்திலும் அவளுக்கு நாட்டம் அதிகமில்லை.

சத்யன் இறந்து இரண்டு வருஷமாகிறது. இப்பொழுது அவளது ஒரே தோழி, தனிமை. ஒரு தனியார் நிறுவனத்தில் கைநிறைய சம்பளம். அது வயிற்றுப் பிரச்னையை ஓட்டிக் கொள்ளவும், வாழ்க்கையோடு ஒட்டிக் கொள்ளவும் போதும்.

புருஷன் நினைவு வந்ததும், புவனா பீரோ திறந்து அந்தப் புடைவையை எடுத்துப் பார்த்தாள்.

சிவப்பு பார்டரில் கூடிய சந்தன கலர் பட்டுப் புடைவை. அன்றொரு நாள், கோவிலுக்குப் போகக் கட்டியிருந்தாள். ஆபீஸ் போகும் முன், அவசரமாய் காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்த சத்யன், அவளது அழகைப் பார்த்துத் திகைத்தான்.

சட்டென்று எகிறி, அவளைப் பிடித்து இழுத்தான்.

அவள் சரிந்து அவன் மடியில் விழுந்தபோது, காப்பி தம்ளர் சிதறியது.

புடைவையெல்லாம் காப்பி.

"ஐயையோ..." அலறிய அவளது இதழ்களை, தனது இதழ்களால் மூட முயன்றான்.

திமிறினாள். நெஞ்சில் அடித்தாள்.

கத்தினாள். "ஏன்மா... ராத்திரில கண்முழிச்சு காத்திட்டிருந்தா சமையல் செஞ்சுட்டு, பத்து பாத்திரம் தேய்ச்சுட்டு பிசுபிசுன்னு, ஒரு நைட்டியை தலைலருந்து கால் வரைக்கும், போர்த்திக்கிட்டு வந்து படுக்கையில விழுற. காலைல ஆபீஸ் போற நேரத்துல ஜில்லுனு குளிச்சுட்டு பன்னீர் ரோஜா மாதிரி, பட்டுப் புடைவை கட்டி குண்டுமல்லி வச்சுகிட்டு பக்கத்துல வந்து உரசறே. அறிவிருக்கா

உடைந்த முகம்

உனக்கு?''

அவனது அவஸ்தையை ரசித்தாள்.

''ஆபீசுக்கு டயமாச்சு. கிளம்புங்க.''

''ப்ளீஸ்... புவனா... ஒரே ஒரு முத்தம்.''

பொய்க் கோபம் காட்டி மறுத்தாள்.

அவன், அவளை இறுக்க முயன்றான்.

அவள், அவனைப் பிரிக்க முயன்றாள்.

சத்யன், சூடானான். ''முத்தம் தரப் போறியா, இல்லையா?''

''நா கோபமாயிருக்கேன். பட்டுப் புடைவையெல்லாம் காப்பி. சாயந்திரமா வாங்க. பார்க்கலாம்.''

''சரி.. நா ஒண்ணே ஒண்ணு தர்றேன்.''

''வேண்டாம்.''

''இத பார் புவனா... புருஷனை அதிகமா நேசிக்கிறவங்க, முத்தத்தை வேண்டாம்னு சொல்ல மாட்டாங்க.''

''மனைவியை அதிகமா நேசிக்கிறவங்க, ராத்திரி வரைக்கும் காத்திருந்தா குறைஞ்சு போயிற மாட்டாங்க.''

குறைந்துதான் போயிற்று.

நிலக்கரி 'சுரங்கத்தில் வேலை பார்த்தவனின் உடம்பை, திடீர் நிலச்சரிவு ஏற்பட்டு, மண் மூடியது.

மனைவியிடமிருந்து முத்தம் வாங்காமலேயே, அவனது கண் மூடியது.

புவனா, சென்னைக்கு வேலை தேடி வந்து விட்டாள்.

அந்தப் பட்டுப் புடைவை இப்போது அவளுக்கு பொக்கிஷம். பட்டுப் புடைவையில் காப்பிக் கறை நீங்காமல் அப்படியே இருக்கிறது.

தினமும் புவனா, புடைவையில் படிந்திருக்கும் கணவனின் நினைவை, தொட்டு, தடவிப் பார்க்கிறாள்.

அப்போதெல்லாம் சத்யன் உயிர்த்து வந்து அவளைப் பார்த்துச் சிரிக்கிறான். ''ஒரு முத்தத்தைக் கடன் வைத்த முதல் பெண் நீயாகத்தான் இருக்கும்.''

சத்யன் குற்றம்சாட்டுகிறான்.

இரவுகளில் அழுதபடி, காற்றுக்கு ஆயிரம் முத்தங்கள் இடுகிறாள் புவனா.

அதில் ஒன்றாவது, கணவனிடம் போய்ச் சேராதா?

வெளியே கிளம்பியபோது, வேலைக்காரி வந்தாள்.

''கண்ணம்மா..., நா ஒரு பிரெண்ட் வீட்டுக்குப் போயிட்டு வர்றேன். வேலையெல்லாம் முடிச்சுட்டு, டி.வி. பார்த்துட்டிரு.''

''இல்லம்மா. வேலை முடிச்சுட்டு ஹாஸ்டலுக்குப் போகணும், பொண்ணைப் பார்க்கணும். மூணு வாரம் ஆச்சு.''

கண்ணம்மா வேதனையுடன் சிரித்தாள்.

இதோ... இன்னொரு உடைந்த முகம்.

ஓடிவிட்ட புருஷன். மனநலம் குன்றிய மகள்.

படியிறங்கி கீழே வந்தபோது, வீட்டுக்கார அம்மாள் வாசலில் நின்றிருந்த ஒரு சேல்ஸ் வுமனைத் திட்டிக் கொண்டிருந்தாள்.

''போம்மா... அட போம்மான்னா. ஞாயித்துக்கிழமை ஒருநாள், வீட்ல நிம்மதியா இருக்க வுட மாட்டீங்களே... சீயக்கா பவுடர், வாஷிங் பவுடர் அது இதுன்னு...''

டமாலென்று கதவு அறைந்து சாத்திற்று.

அந்த விற்பனைப் பெண்ணின் கண்களில் மளுக்கென்று கண்ணீர்.

எல்லோருடைய முகமும் வாழ்க்கையில் ஏதாவது ஒரு தருணத்தில் உடைகிறது.

அடர்தாடியில் இருந்தவனை முதலில் அடையாளம் தெரியவில்லை.

தெரிந்தபோது, அதிர்ச்சி ஏற்பட்டது புவனாவுக்கு.

''ரகு... நீங்களா! அப்ப... அந்த ஜீவன்?''

''டபுள் ஆக்ட்.'' ரகு சிரித்தான். ''நாந்தான் ரகு. நாந்தான் ஜீவன்.''

''கவிதை நல்லா இருந்தது.''

''தாங்க்ஸ்.''

''ஆனா, தாடி நல்லா இல்லை.''

''உனக்குக் கூட ஸ்டிக்கர் பொட்டு நல்லாயில்லை.''

அதிர்ந்தாள். ''ரகு, பழசையெல்லாம் நீங்க மறந்துடறது நல்லது.''

''எதை மறக்கச் சொல்றே புவனா?''

ஆபீஸில் அவள் எல்லாருக்கும் கல்யாண இன்விடேஷன் கொடுத்தபோது அவன் அவளுக்குக் காதல் கடிதம் கொடுத்தான். அதிர்ந்து போனாள் அவள்.

''இப்ப நினைச்சா ஆச்சரியமா இருக்கு. ஆனா, அன்னைக்கு கன்னாபின்னான்னு கோபம் வந்துருச்சு. என்னால தாங்கிக்க

''கஷ்டப்பட்டு எழுதின கதைப்பா இதெல்லாம்... கிலோவுக்கு அரை ரூபாயாவது போட்டுக் குடு!''

– சீர்காழி வி. ரேவதி



முடியலை. மானேஜர்ட்ட கம்ப்ளைண்ட் பண்ணிட்டேன். உங்க நடத்தை காரணமா உங்களை வேற பிராஞ்சுக்கு டிரான்ஸ்பர் பண்ணிட்டாங்க."

"அதை எல்லாம் நான் மறந்துட்டேன் புவனா."

"மறக்கலேன்னு உங்க கவிதை சொல்லுது ரகு."

"யதார்த்தத்தை சிறையில் அடைக்கலாம் புவனா. ஆனா கற்பனையின் சிறகை உடைக்கறது கஷ்டம்."

"எத்தனையோ பேர் உலகத்துல காதலை மறந்துட்டு வாழலையா?"

"ஒத்துக்க முடியாது. உலகத்துல, ஒருத்தருக்கு இருக்கற மாதிரி கைரேகை இன்னொருத்தருக்கு இல்லையாம். ஆப்டர் ஆல், உடம்பு சம்பந்தப்பட்ட கைரேகையிலேயே அவ்வளவு வித்தியாசம் இருக்கறப்போ, மனசு சம்பந்தப்பட்ட காதல்ல எவ்வளவு வித்தியாசம் இருக்கும்."

"உங்களைக் கடவுள்தான் காப்பாத்தணும்!"

"ஏன்? உம்புருஷனை காப்பாத்தினாரா?"

"ரகு!"

"கேள்விப்பட்டேன். வருத்தப்பட்டேன்."

"நீங்க ஒரு நல்ல துணையை தேடிக்கங்க ரகு."

"அது ஏன் நீயா இருக்கக் கூடாது?"

புவனா திடுக்கிட்டாள்.

ரகு சிரித்தான். "வேடிக்கையான உலகம் இது புவனா. இறந்துபோன உன் புருஷனோட நினைவை நீ இன்னும் உயிரோட வச்சிட்டிருக்கே. ஆனா, உயிரோட இருக்கற என் காதலியின் நினைவை சாகடிக்கச் சொல்றே."

"ரகு!"

"இருக்கறதை வேண்டாம்கிறதும், இல்லாததற்காக ஆசைப்படறதும்தான் மனுஷனோட முழு நேரத் தொழிலாப் போச்சு. இல்லையா?"

"ரகு... ஐ'ம் ஸாரி. இந்த பேச்சிலர் ரூமை பாக்ஸிங் மேடையா மாத்த நான் வரலை. நீங்க யார்னு தெரியாமலேயே உங்க கவிதை என்னைப் பாதிச்சது. அந்தக் கவிதையோட ஆணிவேர் சந்தோஷமானதா இருந்தா பாராட்டவும், வேதனையா இருந்தா பகிர்ந்துக்கவும் வந்தேன். உங்க முகம் உடைய நானே காரணமா இருந்திருப்பேன்னு எதிர்பார்க்கலை. நா வர்றேன்."

புவனா எழுந்தாள்.

"புவனா..."

"ம்."

"இன்னொரு முறை வராதே."

"ஏன்?"

"மனசு தடுமாறுது."

கனத்த இதயத்துடன் புவனா படியேறி



"நடிகர் சங்கக் கூட்டத்திலே அந்த ரெண்டு நடிகரும் கட்டிப்புடிச்சி உருண்டு சண்டைப் போட்டுகிட்டிருந்ததை யாராலும் நிறுத்த முடியலே—"

"அப்புறம்?"

"ஒரு டைரக்டர் 'கட்'னு கத்தினவுடனே விலகிட்டாங்க!"

— எஸ். இராஜேந்திரன்

னாள்.

டீவி சத்தம் அவளை வரவேற்றது. ஆயாசமாய் சோபாவில் விழுந்தாள். மனத்தில் குழப்பம்.

கண்ணம்மா உள்ளேயிருந்து எட்டிப் பார்த்தாள்.

"நீ இன்னும் போகலியா கண்ணம்மா?"

"இதோ கிளம்பிட்டேன்."

"யாராவது வந்தாங்களா?"

"இல்ல. சோப்பு பவுடர் விக்கற பொம்பளை ஒன்னு வந்துச்சு. ரெண்டு சாம்பிள் பாக்கெட் குடுத்துச்சு. அதுலதான் இன்னிக்கு துணி துவைச்சேன்."

"அழுக்கெல்லாம் போவுதா?"

"அழுக்கென்ன? காப்பிக் கறை கூடப் போவுதும்மா."

"என்ன உளர்றே கண்ணம்மா?"

"ஆமாம்மா. சோபாவுல ஒரு பட்டுப் புடைவை கிடந்தது. ஒரே காப்பி கறையா இருந்தது. துவைச்சுப் போட்டேன். இப்ப பளிச்சுனு ஆயிருச்சு."

புவனா அதிர்ச்சியுடன் அவளை ஏறிட்டாள்.

"கண்ணம்மா... அதை ஏன் துவைச்சே?"

"நல்லா இருக்கே. துவைக்காமலே இருந்தா வெளில கட்டிட்டுப் போக முடியுமா? பொண்ணும், பட்டுப் புடைவையும் கட்டிப் பார்த்தா தாம்மா அழகு. இப்ப பாரு.. இதை கல்யாணத்துக்குக் கூடக் கட்டிக்க முடியும்."

கண்ணம்மா, புடைவையை அவளிடம் கொடுத்துவிட்டு, வெளியேறினாள்.

உடம்பு நடுங்க, குரல் உடைந்து அழ ஆரம்பித்தாள்.

சில முகங்கள், வாழ்க்கை இறக்கும்போது

கூட உடைவதுண்டு.

ஆசை நெருப்பு 21

இந்திரா சௌந்தர்ராஜன்

"என்ன நான் சொல்றதுல உங்களுக்கு நம்பிக்கை இல்லியா? நிஜமாத்தான் சொல்றேன். அவர் என்னை விரும்பறாரு..." - கனகா திரும்பவும் சொல்லி மோகன் ராம் மனத்துக்குள் சாட்டை சொடுக் குகிறாள்.

மோகன்ராம் தன் கலங்கிய முகத்தை தாழ்த்திக் கொண்டு மேலும் கலங்குகிறான்.


"என்னால நம்ப முடியலை... ஜீரணிக்கவும் முடியலை" என்கிறான் உடைந்த குரலில்.

"நான் ஜீரணிச்சுட்டேன். நீங்களும் ஜீரணிக்கணும். மாட்டேன்னு பிடிவாதம் பிடிச்சாலும் அதுதானா ஜீரணம் ஆயிடும் அத்தான்."

மனத்தில் சோர்வுக் கப்பலின் நங்கூரம் ஆழமாக விழுகிறது.

வீதிமுக்கில் சதா நான்கு பேர் பிடிபிடித்தபடி பேசியதையே பேசிக் கொண்டிருப்பார்கள்.





நான்கு நாட்களுக்கு ஒரு முறை குளித்தால் அதுவே பெரிது. அவர்களைப் பார்க்கப் பார்க்க பற்றிக் கொண்டு வரும். இந்த வினாடியில் மோகன்ராம் மனத்தில் அவர்கள் புத்திசாலிகளாக மாறுகிறார்கள்.

'வாழ்க்கையை வளைத்து இழுக்கும் வேலையைச் செய்வது வீண். அது தன் பாட்டையில்தான் நம்மை இழுத்துச் செல்லும் என்கிற ஞானம் மிக்கவர்களோ அவர்கள்?' உள்ளே வந்து நெசவுத் திண்ணை மேல்

●

தூண்டில் புழுவாக தாமு மாறிவிட்டான்; மீனாக நபீஸா மாட்டிக் கொண்டு விடுவாளா?

●

அமர்ந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டு பலவாறு சிந்திக்க ஆரம்பிக்கிறான்.

"என்ன அத்தான்.... எதுக்கு இத்தனை கவலை? நான்தான் நொடியில அதை ஜீரணிச்சு வேற பாதையையும் காட்டிட்டேனே..." நெருங்கி வந்து கெகிக்கிறான் கனகா.

"நீ ஜீரணிச்சுட்டே... ஆனா என்னால முடியலை. எப்படி உன்னால இத்தனை சீக்கிரமா மனச மாத்திக்க முடிஞ்சது? அதைவிடப் பெரிய விஷயம் அவன் உன்னை

நேசிக்கிறான்னு சொன்னதுதான். என்னைக் கல்யாணம் பண்ணிக்கத்தான் நீ இந்த வீட்டுக்கே வந்திருக்கேன்னு தெரிஞ்சிருந்தும் அவன் எப்படி உன்னை நேசிக்கலாம்...?"

"ஓ... உங்க கவலைக்குக் காரணம் இது தானா? ஆமா நான் ஒண்ணு உங்களைக் கேக்கவா?"

"நல்லா கேளு..."

"பானுவை நீங்க விரும்பறீங்களே... அவ உங்களை விரும்பறாளா இல்லையான்னு தெரியுமா?"

"இது என்ன கேள்வி கனகா...?"

"நீங்க உங்க விருப்பத்தை அவகிட்ட சொல்லியிருக்கீங்களா... இல்லை அவதான் தன் விருப்பத்தை உங்ககிட்ட சொல்லியிருக்காளா?"

"ரெண்டும் இல்லை..."

"சொல்லாம கொள்ளாம நீங்க ஸ்னேகிக்கலாம். ஆனா நான் குறிப்பிட்ட நபர் மட்டும் அப்படி நடந்துக்கக் கூடாதோ?"

"அது எப்படி உனக்குத் தெரியும்?"

"கனகா மாதிரி ஒரு பொண்ணு மோகனுக்கு கிடைக்க அவன் கொடுத்து வெச்சுருக்கணும். அவன் மட்டும் இல்லேன்னா நான் கனகாவைத் தூக்கிக்கிட்டுப் போய்க் கல்யாணம் செய்துப்பேன்னு அவர் உளறினதை - சாரி அத்தான் - நான் அப்ப அப்படித்தான் நினைச்சேன்- கேட்டேன்."

"அப்படி கேட்டுட்டத மட்டுமே நம்பியா நீ இப்ப கல்யாணம் செய்துக்கற அளவு சிந்திக்கிறே?"

"கூடாதா?"

"எனக்குச் சொல்லத் தெரியலை கனகா... ஆனா அது சரியான முடிவா நிச்சயம் எனக்குத் தோணலை."

"அதுதான் சரியான முடிவு அத்தான். அதை நீங்க போகப் போக புரிஞ்சுக்குவீங்க. இதை விட்டா உங்களுக்கு உதவ வேற வழியும் தெரியலை. பைதபை கையக் கொடுங்க..."

"எதுக்கு?"

"பானுவை ஸ்னேகிச்சதுக்கு... அவளுக்கும் வாழ்க்கை கொடுக்க முன் வந்ததுக்கு... காதலிக்கறதுக்கு முன்ன தகுதிகளை தேடிக்கணும்னு நினைக்க செயல்பட்டுகிட்டு இருக்கறதுக்கு... தலையெழுத்தை நொந்துக்காம நெசவு நெய்யறவனும் பெரிய படிப்பாளி ஆக முடியும்கற உதாரணமா இருக்கறதுக்கு. சின்ன விஷயத்துல கூட சிறுமைகளைக் கண்டு சீறும் குணத்துக்கு..."

"போறும் கனகா போறும்... என்கிட்ட குறைகளே இல்லேங்கற மாதிரி பேசறியே..."

"ஒரே ஒரு குறைதான் எனக்குத் தெரிஞ்சு இருக்கு..."

"என்ன கனகா?"

"ரொம்ப உணர்வுபூர்வமா இருக்கற நீங்க நல்ல அறிவுபூர்வத்துக்கு மாறணும்."

"நன்றி..." என்கிறான் நெகிழ்ச்சியோடு. பதிலுக்குப் பனித்த கண்களுடன் அதை அங்கீகரிக்கிறாள் அவள்.

அடுக்களையில் மகாலட்சுமி வேறு நினைப்பில் இருக்கிறாள். இருவரும்மனது விடும்போது காதல் ஊற்றெடுக்கும் போது தடையாகத் தான் இருந்து விடக்கூடாது என்கிற விவேக லஜ்ஜையோடு...

"கொஞ்சம் தண்ணி..." என்று வீட்டு வாசலில் நின்றபடி கேட்க வேண்டியது. தண்ணீர் கொண்டுவர அந்த வீட்டுக்காரப் பெண்மணி உள்ளே நுழையும்போது அப்படியே நிலைகால் படி தாண்டி எட்டிப் பார்த்தால் வலப்பக்கமோ இடப்பக்கமோ நிலைகால் சுவரை ஒட்டியே நெசவுத் திண்ணை தெரியும். தறியும் நீண்டு கிடக்கும். முகத்துக்கு இருபக்கமும் இருதா வளைகிற கணக்காக, தறிக்கு இருபக்கமும் நல்ல ஜரிகைக் கண்டு வேட்டியின் பார்டரில் ஓடிமுடிந்து சுருட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். கைவசத்து கத்தரியால் நறுக்!

தண்ணீரோடு உள்ளே போனவள் வருவதற்குள் ஜரிகை சுருட்டப்பட்டுவிடும். அப்படி சுருட்டப்படும் சரக்குகளை வாங்குவதற்கென்றே ஒரு ஜென்மமாய்தான் இந்த கிருஷ்ணாராவும் அவதாரம் எடுத்திருக்கிறாரே...?

கிருஷ்ணாராவ் கணக்குப் பிள்ளை மேஜையைத் தன் சாவியால் திறந்து உள்ளே சுருட்டி வைக்கப்பட்டிருக்கும் தராசை எடுத்து மில்லி கிராம் சுத்தமாக எடை போட்டு மார்க்கட் ரேட்டுக்கு பாதிக்கும் கீழே விலை வைக்க திருடனும் தலையை சொரிந்தபடி வாங்கிக் கொண்டு போவது வாடிக்கையான விஷயம் தான். இன்னும் அது தொடருகிறது.

இந்த முறை ஜரிகையைக் கொண்டு வந்திருப்பவன் ஒரு பத்து வீட்டிலாவது தேட்டை போட்டிருப்பான் போலும். மூன்று கிலோ தாண்டி விட்டிருக்கிறது சரக்கு.

ஒரு கிராம் ஜரிகை பத்து ரூபாய்க்குப் போகிறது. மூன்று கிலோவுக்கு மூவாயிரம் ரூபாய் வருகிறது. அந்த விடலைப் பையன் எதிரில் ஆயிரம் ரூபாயை அதுவும் அழுக்கு நோட்டாக தூக்கிப் போடுகிறார் கிருஷ்ணா ராவ்.

அவனும் விட்டால் போதும் என்று வாங்கிக் கொண்டு வாசல் தாண்டுகிறான். ஆனால் அவனது துரதிர்ஷ்டம் அவனை இப்பொழுது ஒருவன் வீதியில் விரட்டத் தொடங்கியிருந்தான்!

தன் வீட்டில் ஜரிகை திருடு போனது தெரிந்த மறுநிமிடம் ஒரு யூகமாய் கிருஷ்ணா ராவ் வீட்டுப்பக்கம் வந்ததன் பலன்.

ஓடுபவனை இப்பொழுது வீதியே பார்த்து விட்டுத் துரத்த ஆரம்பித்தது. இறுதியில் வீதிமுக்கில் மோகன்ராம் வசம் அவன் வசமாய் சிக்கிக் கொள்ளும்படி ஆயிற்று!

“த்தூ!” வீதியே காரி உமிழ்ந்ததில் கிருஷ்ணாராவ் முகம் தொங்கிப் போகிறது. சினிமா டிக்கெட்டுக்காக சில வருங்கால மன்னர்கள் தங்கள் பாடப் புத்தகங்களை எல்லாம் கூட கிருஷ்ணாராவிடம் விற்றிருக்கின்றனர். ரேஷன் கார்டிலிருந்து பட்டுப் பாவு வரை மனிதர் வாங்கிப் போட்டிராத சரக்கே இல்லை.

அடிமாட்டு விலைக்கு சாணியைக் கூட வாங்கிப் போடும் ஒரு மைதாஸ் பாத்திரமாகவே கிருஷ்ணாராவ் தெரிகிறார்.

துணிந்து ஒருவனைப் பிடித்து கட்டி வைத்து உதைத்து சரக்கை திரும்ப வாங்கப் போக, எல்லாமே வெளிவந்து விட்டது. போலீசுக்குப் போவேன் என்று மிரட்டியதில் மனிதர் ஆடிப் போய் சர்வத்தையும் எடுத்து வெளியே போட்டு விட்டார்.

அப்படிப் போட்டதில் ஜரிகையும் கெண்டையும் மோகன்ராமை அவ்வளவாக பாதிக்கவில்லை. பாடப் புத்தகங்கள் மட்டும் மொத்தமாக அவன் மனத்தைப் பிராண்டிக் கொண்டிருந்தன.

விற்ற அத்தனை பேர்களும் ஒரு காலைக் காட்சிக்காக அதை விற்ற கொடுமையை நினைத்துப் புழுங்கிக் கொண்டே இருக்கிறான்! இப்படிப்பட்ட இளைஞர்களை எதிர் நோக்கியும் நம்பியும்தானே இருபத்தியோராம் நூற்றாண்டு, கம்ப்யூட்டரும் கையுமாகக் காத்துக் கொண்டிருக்கிறது?

தொடங்கவேண்டிய பாரதி நற்பணி மன்றத்துக்கு இதையெல்லாம் மாற்ற வேண்டிய நிறைய கடமைகள் இருப்பதாக நினைத்துக் கொள்கிறான்.

நடுத்தெருவில் போக்குவரத்தை தடுத்துக் கொண்டு தென்னங்கீற்றுப் பந்தல். உள்ளே ஊஞ்சல் கட்டி ரேணுகா தேவியை உட்கார்த்தி வைத்து ஆட்டி விட ஒரு கூட்டமே மஞ்சள் வேட்டித் துண்டோடு மும்முரமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறது.

ஊடே கிருஷ்ணாராவ் வீட்டுக்குள் தாடையைத் தடவிக் கொண்டு நுழைகிறான் தாமு.

“என்ன ராவ்... ரொம்ப தாளிச்சிட்டாங்களோ?”

கிருஷ்ணாராவ் அவனைப் பார்த்து மிரண்டு போகிறார். இரண்டு பேருக்குமே திருட்டு புத்திதான் என்றாலும் ரவுடித்தனம் இல்லாத திருட்டுப் புத்தி ராவுக்கு. அதனால்தான் இதுநாள் வரையில் இணக்கம் இல்லை. இப்பொழுது அதற்கு ஒரு வழிகாண வந்திருக்கிறான் தாமு.

“என்னய்யா முழிக்கிறே... போலீசுக்கு போவேன்னு மிரட்டுன உடனே இருக்கற சரக்க பூரா எடுத்துப் போட்டு வாங்கிக் கட்டிக்கிட்டு நிக்கிறியேய்யா... அறிவில்ல உனக்கு? என்னை கூப்டுக்கக் கூடாது. இந்தக் காலத்துல எவன் யோக்யன். விக்கறவனை விட்டுட்டு வாங்குன உன்கிட்ட மோதுனா என்ன அர்த்தம்?”

“..................................”

“நல்லா முழி. இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை. நான் சொல்றதை கொஞ்சம் நல்லா கேட்டுக்கோ. அப்புறம் பாரு என்ன நடக்குதுன்னு...”

அவன் சொல்லச் சொல்ல அதைக் கேட்டுக் கொள்ளும் கிருஷ்ணாராவுக்கு தரைப் பகுதியே நழுவுவது போல ஒரு பிரமை!


யோசித்து யோசித்துப் பார்த்துவிட்டு அம்மன் திருவிழாவின் மூன்றாம் நாள் ராத்திரி நேரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு ராவுத்தர் தெருவுக்குள் நுழைந்து விட்டிருக்கிறார்

“இந்த டாக்டர் ரொம்பவும் முன் எச்சரிக்கைப் பேர்வழி!”

“என்னய்யா சொல்றே?”

“வியாதி குணமாகாத பட்சத்தில் கண்டிப்பாக பீஸ் திருப்பித் தரப்படமாட்டாது’ன்னு போர்டு வச்சிருக்காரே?”

– அம்பை தேவா





"உங்க கட்சிக்கு புதுசா அட்டாக் தலைவர் நியமிச்சிருக்காங்களாமே!"

"யோவ் கஸ்மாலம்... அது அட்டாக் இல்லையா... அட்ஹாக்!"

– புலியூரை கணேசன்

கிருஷ்ணாராவ். திரைச்சீலை தொங்கும் ஜன்னல்கள் – கூம்பு கூம்பான வாசல் மாடல்கள். அலகு உரசியபடி வேடிக்கை பார்க்கும் சிமிண்டு நிறப் புறாக்கள் என்கிற மொகல் லட்சணங்கள் எதையும் இருட்டில் பார்க்க முடியவில்லை. ஆனாலும் இஸ்மாயில் வீட்டைத் துல்லியமாய் அடையாளம் கண்டு நுழைய முடிகிறது. நல்லவேளை இஸ்மாயில் இருந்தான். கிருஷ்ணாராவை அதிசயமாய் பார்த்து கண்சிமிட்டுகிறான்.

"இங்க இஸ்மாயில்ங்கறது..?"

"நான்தான்..."

"நான் பானு இருக்கற தெருவுலதான் இருக்கேன். ஒரு முக்கிய விஷயமா உங்களைப் பாக்கலாம்னு வந்தேன்."

"மொதல்ல உக்காருங்க..." – இஸ்மாயில் பாயை எடுத்து விரிக்கிறான்.

"இருக்கட்டும் இருக்கட்டும்.... நான் இங்க வந்துருக்கறது அந்த மோகன்ராமுக்குத் தெரிஞ்சா ரொம்ப ரசாபாசமாயிடும். விஷயத்தைச் சொல்லிடறேன்..."

கிருஷ்ணாராவின் செயற்கையான பதற்றம் மரப்படியில் இருந்து இறங்கி வரும் நபீஸாவையும் தொற்றுகிறது.

"இஸ்மாயில் யார் இவரு?"

"நம்ம பானுவோட தெருவுல இருக்கற வராம்... ஐயா நீங்க விஷயத்தைச் சொல்லலையே..."

"நான் சொல்றது கூட முக்கியமில்ல. ஆனா நான் சொன்னது வெளிய தெரியக்கூடாது..."

"விஷயத்தைச் சொல்லுங்க முதல்ல..."

"உங்க பானுவை அந்த தேசிகாச்சாரி தன் ஆஸ்ரமத்துக்குக் கூட்டிக்கிட்டுப் போய் விபசாரத்துல ஈடுபடுத்த இருக்கான். ஏற்கெனவே அங்க சுசிலான்னு ஒருத்தி போய் பிரமாதமா தொழில் நடத்திக்கிட்டு இருக்கா. இதெல்லாம் உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ... சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்... என்ன இருந்தாலும் பானு உங்க சமூகப் பொண்ணு. அவ என்னதான் எங்க ஆளுங்க வீட்டுல வளர்ந்தாலும் உங்க ரத்தம்தானே...?"

கிருஷ்ணாராவ் பேசப் பேச நபீஸாவுக்கு பதற ஆரம்பிக்கிறது. ஆனால் இஸ்மாயில் துளிக் கூடப் பதற்றப்பட்ட மாதிரியே தெரியவில்லை.

"நீங்க சொல்றத முதல்ல நான் நம்பத் தயாராயில்லை. அந்தப் பெரியவர் வீதியில நின்னு பேசின பேச்சு இப்பவும் என் காதுல இருக்கு. உங்க கதையை யார்கிட்டேயாவது போய்ச் சொல்லுங்க..."

"அப்படியா... பானுவைக் காப்பாத்தணும்கற நல்ல எண்ணத்துல வந்தேன் பாரு. எனக்கு இதுவும் வேணும் – இன்னமும் வேணும். அவளைக் கெடுக்க தாமுவும், அந்த தேசிகாச்சாரியும் ஒரு போட்டியே நடத்திக்கிட்டிருக்காங்க. இதுல அவ தேசிகாச்சாரிய நல்லவன்னு நம்பி மாட்டிக்கிட்டிருக்கா.

"மலைப் பக்கம் போன நான் அவபோட்ட சத்தத்தையும் கூச்சலையும் கேட்டுட்டுத்தான் ராத்திரின்னு பாக்காம இங்க வந்தேன். நீ என்னடான்னா இப்படிச் சொல்றே..."

கிருஷ்ணாராவ் வேகமாக வாசல் தாண்டுகிறார்.

"**இ**ஸ்மாயில் போய் ஒரு பார்வை பார்த்துட்டுதான் வாயேன். ஏண்டா இப்படி பிடிவாதம் பிடிக்கறே?"

"சும்மா இரு பாட்டி... அந்தப் பெரியவர் அப்படிப்பட்டவர் கிடையாது. இந்த ஆள் யாரோ... இவன் பேச்சை எல்லாம் கேட்டுகிட்டு! இதுல ஏதோ சதி இருக்கு?"

"என்னடா சதி கிதின்னு பேசறே... அப்படியே இருந்தாதான் என்ன? அவ நல்லா இருக்காளா இல்லியான்னு பாக்கப் போனதா இருக்கட்டுமே."

"அது விரும்பித்தான் அங்க போயிருக்கு. அதுக்கு இங்க வர இஷ்டமும் கிடையாது. நாம மட்டும் ஆசை பாசம்னு துடிக்கறதுல அர்த்தம் இல்லை. அது அவளுக்கும் இருக்கணும். சும்மா போற வர்றவன் பேச்சைக் கேட்டுக்கிட்டெல்லாம் இந்த ராத்திரியில் என்னால அந்த மலைக்காட்டுப் பக்கம் போக முடியாது. எல்லாம் விடியட்டும் பாத்துக்கலாம்..."

பேசிவிட்டு விறுவிறுவென்று வெளியேறுகிறான். ஒரு சால்வையைப் போர்த்திக் கொண்டு பானுவைக் கண்டு வர கிளம்புகிறாள் நபீஸா!

அங்கே கத்தியும் கையுமாய் காத்திருக்கும் தாமுவின் சூழ்ச்சி தெரியாமல்...

(தொடரும்)

குமுறல்

கூடாது, கூடாது, கூடங்குளம்!

•• அண்மையில் அரங்கேறிய 'செர்னோபில்' விபத்து காலமெல்லாம் மனிதனுக்கு எச்சரிக்கை தந்து கொண்டிருப்பது. "அணு உலையா? ரஷ்யாவிலிருந்தா?" என்ற அச்ச உணர்வு எழுவது நியாயமே. 'கூடங்குளத்தில் அணு உலை நிறுவுவது பற்றி முன்பே சோவியத் அரசிடம் ஒப்புதல் அளித்தாயிற்று, எப்படி பின்வாங்குவது? இதனால் அந் நாட்டிலிருந்து பெறப்படும் பிற உதவிகள் பாதிக்கப்படுமே' என்பது மத்திய அரசின் அரசியல் நோக்கே தவிர, அறிவார்ந்த நோக்கல்ல. 'நடுவண் அமைச்சில் நமக்கும் பங்கு உண்டே,' என்று கருதி 'அணு உலைக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டாம்' என்று கலைஞர் செந்தமிழ் மொழியில் அறிக்கை விடுகிறார். மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது, உண்மைதான். ஆனால் ஆபத்தை விலைக்கு வாங்கித்தான் அதைச் சமாளிக்க வேண்டுமா? கொள்ளிக்கட்டையை எடுத்துத்தான் முதுகைச் சொரிய வேண்டுமா? சிந்திக்க வேண்டும்.

கே.எம்.ஜக்கரியா
எலந்தங்குடி.

•• தாம்பரம் பேருந்து நிலையத்திலிருந்து எதிர்ப்புறம் ரயில்வே ஸ்டேஷன் நோக்கிக் கடப்பது பெரும் பிரச்னையாக உள்ளது. மிக அதிகமான வாகனப் போக்குவரத்து, ஜனநெரிசல் உள்ள இடம். பொதுமக்கள் வசதிக்காக ஒரு மேம்பாலம் அல்லது சுரங்கப்பாதை இந்த இடத்தில் மிக அவசியம்.

வி.எஸ். ஸ்ரீதரன்.
சென்னை - 91,

•• தமிழகத்தின் மிகச் சிறிய ஊர்களில் கூட எங்குமில்லாத அளவுக்கு லாட்டரி கடைகளின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. மயிலாடுதுறையில் லாட்டரி கடை இல்லாத தெரு இல்லை. மனிதனை ஒரு மாய மோக வலையில் சிக்க வைத்து, அவனிடம் உள்ள பணத்தைப் பறித்து, ஓட்டாண்டியாக்குகிறதோடு உழைப்பின் உயர்வையும் பரிகாசத்துக்கு உள்ளாக்குகிறது லாட்டரி. இதனைத் தடை செய்ய மத்திய, மாநில அரசுகள் நிச்சயம் முன் வர வேண்டும்.

மயிலாடுதுறை.
ஜெ. ரஜினிராம்கி

•• சென்னை தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளுக்கு இடையே, "தெரிந்து கொள்வோம், அறிந்து கொள்வோம்" என்று பொது அறிவுக் குறிப்புகள் ஒளிபரப்புகிறார்கள். நல்ல காரியம்தான். ஆனால் ஆண்டுக்கணக்காக 'அரபிக் கடலின் ராணி', 'ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்' என்று ஒரே வாசகங்களையே திரும்பத் திரும்பப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். செம அறுவை! 'தூர்தர்ஷனின் பொது அறிவு இவ்வளவுதானா? இந்த எல்லையைக் கடந்து முன்னேறாதா?' என்று கேட்கத் தோன்றுகிறது.

வேலூர் - 6,
எல்.கோபாலகிருஷ்ணன்,

•• அஞ்சலகங்களில் 1996-97ம் நிதியாண்டில் ரெகரிங் டெபாசிட் கணக்கு தொடங்கப்பட்டவர்களுக்குப் பரிசுக் கூப்பன்கள் வழங்கப்பட மாட்டாது என்று ஜி.ஓ. உள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் பத்திரிகைகள், டி.வி. மூலம் செய்யப்பட்ட அரசு விளம்பரங்களில் பரிசுக் கூப்பன் உண்டு என்று தெரிவிக்கப்பட்டது. ஆசைகாட்டி மோசம் செய்வதுபோல் இதற்கு முரண்பாடாக அரசாணை வெளியிட வேண்டிய அவசியமென்ன? இதனால் பொதுமக்கள் ஏமாற்றமும் அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

என்.ஆர்.
திருப்பூர்,

•• திருவண்ணாமலையில் விசேஷ தினங்களிலும் சாதாரண நாட்களிலும் கூட மலையை வலம் வருவோர் ஏராளம். ஆனால் பாதை மிக மோசமாக இருப்பதோடு போதிய விளக்கு வெளிச்சமும் இல்லை. காலில் செருப்பில்லாமல் கிரிப் பிரதட்சணம் செய்யும் மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றனர். அமைச்சர் பிச்சாண்டி தமது தொகுதியில் உள்ள இந்த சாலை மேம்பாட்டுக்கு உதவக் கூடாதா?

குடந்தை.
பிரசன்னகுமார்.

குமுறல்

குமுறல்

குமுறல்

• திருவண்ணாமலை



கொண்டவன் குடுமி

பாலன் கடையில் பட்டாபிஷேகம் ஆகி முடிந்து, கழுத்தில் சுற்றப் பட்டிருந்த வெள்ளைத் துணி உருவப்பட்டதும் தன்னைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்ட கிருஷ்ணன் திடுக்கிட்டான்.

வகிடுக்கு இடப்புறம் முழுக்க கோழி கிளறினாற்போலக் கொத்தப்பட்டு முடிகள் குச்சிக் குச்சியாய் தூக்கிக்கொண்டு நின்றன.

"என்னப்பா இது?"

அழுதுவிடக் கூடாது என்று கூடியமட்டும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவனால், குரல் தேய்ந்ததை மட்டும் தடுக்க முடிய வில்லை.

நாளை மறுநாள் கல்யாணம். வாழ்க்கையில் ஒரே ஒருமுறை கோட்-சூட் போட்டு, டை கட்டி, ஒரு கையில் பூச்செண்டோடும் மறு கையில் மாலினியின் விரல்களோடும் ஃபிளாஷ் களுக்குச் சிரித்துக் கொண்டு, ஒருநாள் ஹீரோ வாக நிற்கப் போகிறான். அவனை விட உயர மாகத் தூக்கிக் கொண்டு நிற்கப் போகிறது தலைமுடி.

"அது சரியாப்பூடும் சார்! குளிச்சிட்டு எண் ணெய் தடவி வாரினதும் செட்டா படிஞ் சிடும்!"

கஸ்டப் பையனிடம் தன் கல்யாணத்தைச் சொல்லியிருக்க வேண்டுமோ என்று நினைத்தான். எதையும் ரொம்பப் பாரித்தால் டெபாஸிட் தேறாது என்கிற பயத்தில் ஏதும் அறிவிக்காமல் வழக்கம் போல வந்து, வழக்கம் போல தினத்தந்தி படித்து, வழக்கம் போல உட்கார்ந்து, கண்மூடி, கல்யாணக் கனவுகளில் லயித்தது தவறாகி விட்டது.

"இது எப்படிய்யா செட்டாகும்? குச்சிக் குச்சியா நிக்குது பார்!"

பையன் யோசித்தான்.

"சரி, உட்கார் சார்!" என்று மறுபடி கத்தரிக் கோலைக் கையில் எடுத்துக் கொண்டான்.

கிருஷ்ணனுக்குப் படபடப்பு ஏறியது. எதிரே கச்சக் கச்சக் என்று ஆயுதத்தை சப்தம் பண்ணிக்கொண்டு நிற்கிற பையன், தன்னை ரட்சிக்க வந்த தேவதூதனா, கோர விதியின் நாலரை அடி சொரூபமா என்று தெரிய வில்லை.

இப்போதாவது சொல்லி விடலாமா என்று யோசித்தான். எட்டு வருஷப் பழக்கம். "எனக்கு எல்லாம் பத்திரிகை வெக்க மாட் டியா சார்?" என்று விஷயத்தை திசை மாற்றி விடக்கூடும். தவிரவும் சங்கிலித் தொடராக மாலினியைப் பற்றிச் சிலபல கேள்விகள் கேட்பானாயிருக்கும். காத்திருக்கும் பிற கஸ்டமர்கள் முன்னிலையில் தன் சொந்த வாழ்க்கை பற்றிப் பேச வேண்டிவரும்.

"பார்த்து, ஜாக்கிரதையா ஏதாவது செய்ய முடியுதா பார். அதிகம் குறைச்சிடாதே. தூக் கிட்டிருக்கற முடி படிஞ்சாப் போதும்!"

"சரிதான் சார்."

சர் சர் என்று தலையில் அவன் சீப்பால் ரோடு போட்டு, கத்தரியால் களையெடுக்கிற ஒவ்வொரு ஸ்ட்ரோக்குக்கும் மனம் திக் திக் என்று அடித்துக் கொண்டது.

பெண் வீட்டார், வீடியோவுக்கு ஏற்பாடு பண்ணியிருப்பதாகச் சொல்லியிருந்தார்கள். மிடில் கிளாஸ் மனிதர்களின் அற்ப சந்தோஷங்கள். போட்டுப் பார்க்க சொந்தமாக டெக் எல்லாம் இல்லை. வாடகைக்குத்தான் வாங்கியாக வேண்டும்.

இருப்பினும் ஏனோ வீடியோ வேண்டாம் என்று மறுக்கத் தோன்றவில்லை, அப்போது. மறுத்திருக்கலாம் என்று இப்போது தோன்றி யது.

கோட்-சூட்டும் குச்சி முடியுமாக வீடியோ வில் தான் ஒரு கார்ட்டூன் போல இருப்போம் என்று அவன் நினைத்தான். இனிய நினை வாக அதைத் தன்னால் ஆயுள் முழுக்கப் போற்றிப் பாதுகாக்க முடியாது, நிச்சயமாய். பார்க்கும்போதெல்லாம் எரிச்சல் பீறிட்டுக்



பா. ராகவன்

கொண்டு வரும். நாலரை அடி உயரப் பையன் பழிவாங்கி விட்டான்.

ஆத்திரம் பொங்கி வந்தாலும் இச்சமயம் அது உபயோகப்படாது. அன்பே அருமருந்து. 'இந்தக் கணம் என் தலையும் வாழ்வும் இவன் கையில். சிப்பிக்குள் முத்து போல இவனுக்குள் பொதிந்து கிடக்கும் சிகையலங்காரக் கலை வித்தகமெல்லாம் பீறிட்டு எழுந்து வந்து, என் தலையைச் செம்மைப்படுத்தித் தரச் செய்யக் கடவீர் இறைவனே!' என்று மானசீகமாக உருகி வேண்டிக் கொண்டான்.

"இப்ப பார் சார்!" என்றான் பையன்.

மீண்டும் ஒருதரம் பிரார்த்தனை செய்துவிட்டு, ஒரு பழுத்த துறவி, மோன நிலையிலிருந்து விழிக்கிற பாவத்தில் கண்திறந்து கண்ணாடியைப் பார்த்தான் கிருஷ்ணன்.

ஒன்றும் வித்தியாசம் தெரியவில்லை. தூக்கிய ரோமங்கள் படுப்பேனா என்றன.

"படியலையேப்பா!" என்றான் அழாக்குறையாக.

"அட என்னா சார்! உன் தலை வாகு அப்படி! ரெண்டு நாள்ல படிஞ்சிடும் பாரு!"

குளித்து, எண்ணெய் தடவிச் சீவினால் சரியாகிவிடும் என்று முன்பு தந்த நம்பிக்கையை அவனே திரும்பப் பெற்றுக்கொண்டு 'இரண்டு நாளில்' என்று புதுக்கதை சொன்னதும் மளுக்கென்று கண்ணில் நீர் கட்டிக் கொண்டது அவனுக்கு.

"ஒரு முக்கியமான ஃபங்ஷன் இருக்குப்பா இன்னைக்கு..."

வேறு யார் காதிலும் விழாமல் கவனமாக அவன் காதோடு கெஞ்சினான்.

பையன் கொஞ்ச நேரம் யோசித்தான். அடுத்தடுத்த கஸ்டமர்கள் பல்லைக் கடிப்பது வேறு அவனுக்குச் சங்கடமாக இருந்திருக்கும்.

"ஒண்ணு பண்ணு சார்! நீ போய் தலைக்குக் குளிச்சிட்டு வா. ஹீட்டர்

போட்டு செட் பண்ணிடறேன்!"

"செட் ஆயிடுமா?"

"பின்னே?" என்றான் ஸ்டைலாக.

அவன் குரலில் தொனித்த நம்பிக்கையாலும் ஹீட்டர் என்கிற இதுவரை உபயோகித்திராத நூதனக் கருவி செய்யக்கூடிய ஜாலங்கள் பற்றிய கற்பனைகளாலும் வழக்கத்துக்குக் கூடுதலாகக் கொஞ்சம் பணம் கொடுத்துவிட்டு அவசரமாக வெளியேறி, வீட்டுக்கு ஓடினான்.

"என்னடா இது கோலம்?" என்றாள் அம்மா.

"ஏற்கெனவே மன்மதக் குஞ்சு..." தம்பி, தலையில் அடித்துக் கொண்டு விலக, அவனுக்கு முற்றிலும் அழுகை வந்தது.

அவசரமாக பாத்ரூமுக்குள் நுழைந்து வேக வேகமாகக் குளித்தான். ஈரத்தலையை இரு கைகளாலும் பற்றி அழுத்தி, அழுத்திப் பார்த்தான். படிந்து விடும் என்றுதான் தோன்றியது.

எல்லாம் கொஞ்ச நேரம்தான். குளித்து முடித்துத் தலையைத் துவட்டி, வாரிப் பார்த்த போது 'சொய்யாங்' என்று மீண்டும் அவை எழுந்து கொண்டன.

'ராஸ்கல், உன் ஹீட்டர் மட்டும் உதவலைன்னா, என் கல்யாணத்தன்னைக்கு உனக்குப் பால்!' என்று கருவிக் கொண்டு அவசரமாக சட்டை மாட்டிக் கொண்டு கிளம்பினான்.

"எங்கேடா கிளம்பிட்டே?"

சொல்ல முடியாது!

"அஞ்சு நிமிஷத்தில் வரேன்" என்று மட்டும் சொல்லிவிட்டு ஓடினான்.

சலூன். நாலரை அடிப் பையன். அதே கத்தரிக்கோல். கண்ணாடி. அங்கே காலண்டர், இங்கே தினத்தந்தி. பொட்டி ஸ்பீக்கரில் சகிக்காத சினிமாப் பாடல். தரையெல்லாம் தலைமுடி...

"வா சார்! குளிச்சிட்டியா?"

அவன் பேசாமல் சேரில் போய் உட்கார்ந்தான்.

பையன், கத்தியல் மாதிரி இருந்த ஹீட்டரை எடுத்து வயரை பிளக்கில் பொருத்தி 'டர்ர்' என்று சப்தம் பண்ணினான்.

தலையருகே கொண்டு போய் சூடுக் காற்று பரவச் செய்து, சீப்பால் வரக் வரக் என்று வாரினான்.

வலித்தது.

'படிந்து விடு. படிந்து விடு' என்று மானசீகமாக முடியுடன் பேசுகிற நிலைக்கு ஆளாகி விட்டோமே என்று அவனுக்கே தன் மீது பரிதாபமேற்பட்டது.

பத்து நிமிஷப் போராட்டத்துக்குப் பின் பையன், "இப்பப் பார் சார்!" என்றான்.

பார்த்தான். படிந்து விட்டது போல்தான் இருந்தது.

"தேங்ஸ்பா! மறுபடி தூக்கிக்காதே!"

"அதெல்லாம் ஆவாது. போய் வா சார்!"

கண்ணில் நீர் மல்க அவன் வெளியே வந்தான்.

எதற்கும் இருக்கட்டும் என்று இடதுகையைத் தலைமேல் வைத்து அழுத்திப் பிடித்தபடியே வீடு வந்து சேர்ந்தான்.

கல்யாண தினத்தன்று, "பரக்காவெட்டியாட்டம் மணைல உட்காராதே!. தலைக்கு எண்ணெய் தடவிண்டு வா!" என்று அம்மா

எளிமை... எட்டுமுழ வேட்டி... ஏழுமலையான்...



சனத் ஜெயசூர்யா.

இலங்கையின் இந்த நட்சத்திரக் கிரிக்கெட்காரரின் தோள்கள் எலும்பால்தான் ஆனதா? அல்லது இரும்பாலா என்று ரசிகர்களுக்குச் சந்தேகம். புயல் வேகம், ரயில் வேகம் என்ற உவமைகளுக்கெல்லாம்

சொன்னான்.

வந்தது வினை. எண்ணெய் தடவி வாரிய போது மீண்டும் பூதம் எழுந்து கொண்டது.

'சனியனே!' என்று கத்தினான் கிருஷ்ணன்.

"என்னடா ஆச்சு?"

"இப்ப நான் எண்ணெய் தடவலைன்னு எவன் அழுதான்?"

"ஏன்? என்ன ஆச்சு?"

"பாரு!" என்று ஒரு முடியைப் பிடித்து மேலும் தூக்கிக் காட்டினான்.

"இங்க கத்து! சலூனுக்குப் போனவன், என்ன வெட்டறான்னு கூடப் பார்க்காமல் மோட்டுவளையை வெறிச்சுப் பார்த்துண்டு உட்கார்ந்திருப்பே! காஞ்ச மாடு வெக்க கண்டாப்பல பூந்து மேஞ்சிருக்கு..! என்கிட்ட கத்தி என்ன புண்ணியம்?" என்று அம்மா கேட்டாள்.

நல்ல நாளும் அதுவுமாக அம்மாவைக் கண்கலங்க விடுவது அத்தனை சிலாக்கியமான தல்ல என்று தம்பி சொன்னான்.

ஆகவே, கிருஷ்ணன் அமைதி கொண்டான்.

காசி யாத்திரை, ஊஞ்சல், கன்னிகா தானம், நலங்கு என்று சகல சம்பிரதாயங்களின் போதும் அவன் தலைமுடி கிண்டலுக்குக் கூப்பிடப்பட்டது. வாழ்வில் இதுபோலவொரு நிலை தன் எதிரிக்குக் கூட வரக் கூடாது என்று மானசிகமாக வேண்டிக் கொண்டான்.

தன் அருகிலேயே எப்போதும் தலை குனிந்து இருந்த புது மனைவியை அடிக்கடித் திரும்பிப் பார்த்துக் கொண்டான். அவள் கண்களில் கிண்டல் ஏதும் தெரிகிறதா என்ன?

ரிஸப்ஷன் போது அழகான ஆண்டாள் கொண்டையும் பஃப் கை ரவிக்கையும் பளபளவென்று ஜொலிக்கும் பட்டுப் புடைவையுமாக மாலினி அவனுக்கு ஒரு தேவதையாகத் தெரிந்தாள். விதியின் சதியால் தன் முகம்தான் இப்படியாகி விட்டது. வீடியோக்காரனிடம் குளோஸப் வேண்டாம் என்று சொல்லலாமா என்று நினைத்தான். ஒருவேளை அது தனக்குத்தானே இழைத்துக் கொள்ளும் தீங்காக முடியக்கூடும்.

செய்யாதே என்பதைச் செய்து பார்ப்பது தானே மனித இயல்பு?

எல்லாம் முடிந்து, இரவு பதினோரு மணிக்கு அகாலமாகப் பாட்டுப் பாடி அவனை முதலிரவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

கதவு சாத்தப்பட்டதும் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றி மூத்த கேள்வியை அவன், அவளிடம் கேட்டான் :

"என்னைப் பிடிச்சிருக்கா?"

கொஞ்சம் வெட்கம். கொஞ்சம் புன்னகை. பிறகு மெதுவாக சங்கீதம் போல் ஒரு "உம்!"

"வாயைத் திறந்து சொல்லு!"

"பிடிச்சிருக்கு."

"என்னெல்லாம் பிடிச்சிருக்கு?"

"எல்லாம்!"

"அப்படின்னா?"

"உங்க கண்ணு, மூக்கு, கன்னம், மீசை, சோடாபுட்டிக் கண்ணாடி, அப்புறம்... உங்க ஹேர் ஸ்டைல்... பில்கேட்ஸ் மாதிரி..."

அவன் அனிச்சையாகத் தலையைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

அடங்காத ராட்சஸ வேக ரன் குவிப்பாளர். யார் இந்த ஜெயசூர்யா? அதிகம் படித்தவரில்லை. படு ஏழைமையான குடும்பம். ஆனால் கிரிக்கெட்டில் மட்டும் அசாத்திய ஆர்வம். ஒரு செஞ்சுரி கூட வேண்டாம்; வெறுமனே அணியில் இடம்பெற்றாலே தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் கட்டிக் கொண்டு விடுகிற கிரிக்கெட்டர்களுக்கு நடுவே, இவர் எளிமையின் இலக்கணம். பணிவு என்றால் அப்படி ஒரு பணிவு! எட்டு முழ வேட்டியுடன் வெறும் தரையில் படுத்துத் தூங்குகிறவர். கட்டில் கூடக் கிடையாது! கிரிக்கெட் ஆடாத சமயங்களில் வண்ணமயமாய் பெர்முடா, நிஜாரில் சக ஆட்டக்காரர்கள் வலம் வந்தாலும் இவர் வேட்டியை விடாதவர்!

இன்னும் திருமணமாகாத, 'மகாராஜா' நிறுவனத்தில் பணிபுரியும், கொழும்புவில் சொந்த வீடு கட்டிக் கொண்டிருக்கும் ஜெயசூர்யாவுக்கு அபார தெய்வ பக்தி. தினமும் பிரார்த்தனை செய்யும் வழக்கமுள்ள இவர், புத்த மதத்தைச் சேர்ந்தவர். ஆயினும் திருப்பதி வெங்கடாசலபதி மேல் மாளாத காதல். இந்தியாவுக்கு வரும்போதெல்லாம் அங்கு சென்று வழிபட்டு வரத் தவற மாட்டார்.

இந்த முறை கூட, சக ஆட்டக்காரர்களை நேரே தில்லிக்கு அனுப்பிவிட்டு, தனியாகத் தாம் மட்டும் திருப்பதி போய் வந்திருக்கிறார்.

ஜெயசூர்யாவுக்குத் தமிழ் தெரியும்.

— சித்தார்த்

நாடகத்துக்கு ரிஹர்ஸல்!

1967-ல் மேடையேறிய கல்யாணத்தில் கலாட்டா தமிழ் நாடகம், கடந்த முப்பது ஆண்டுகளில் இரண்டாயிரம் முறை நடந்துள்ளது. (300 பேர் மாற்றி மாற்றி நடித்துள்ளனர்!) ஒவ்வொரு முறையும், நாடகத்தை ஆரம்பிக்கிற கடைசி நிமிஷம் வரை எத்தனை பிரச்னை! எத்தனை டென்ஷன்! எத்தனை கலாட்டா! விவரிக்கிறார் நாடக ஆசிரியர் ராது :

இந்த நாடகத்துக்கு முதலில் வைத்த பெயர் கல்யாணத்துக்குக் கல்யாணம். (ஹீரோவின் பெயர் கல்யாணம்) நாடகத்தின் பூஜை தினத்தன்று, கையில் ஸ்கிரிப்டுடன் போய்க் கொண்டிருந்தபோது, வழிநெடுக ஒட்டப்பட்டிருந்த 'கலாட்டா கல்யாணம்' படத்தின் போஸ்டர் என் கவனத்தை ஈர்த்தது.


பூஜையில் ஸ்கிரிப்டை வைக்கும் போது, ஒரு ஐடியா. ஸ்கிரிப்டில் ஒரிஜினல் தலைப்புக்குக் கீழே "கல்யாணத்தில் கலாட்டா" என்று உபரியாய் ஒரு தலைப்பை எழுதினேன். பழைய தலைப்பா? புதுத் தலைப்பா என்று பிரச்னை எழுந்தது. புதிய தலைப்புதான் என்று இறுதியில் தீர்மானமானது.

முன் அனுபவம் இல்லாமை காரணமாக பிற சபாக்காரர்கள், பத்திரிகையாளர்கள் என்று யாரையுமே நாங்கள் நாடக அரங்கேற்றத்துக்குக் கூப்பிடவில்லை. ஆகவே, எங்கள் நாடகம் பற்றி வெளியில் யாருக்குமே தெரியாது போய்விட்டது!

இரண்டாவது தடவையாக நாடகத்தை மேடை ஏற்ற ஏற்பாடு செய்தோம். நாடக தினத்துக்கு முந்தைய நாள், நாடகத்தின் இசையமைப்பாளர், உறவினரது மரணம் காரணமாய் வரமுடியாது போக, தவில், நாதஸ்வர ரெக்கார்டுகளை, ரெக்கார்டு பிளேயரில் போட்டு, சமாளிக்க ஏற்பாடானது.


நாடகத்தன்று, முதல் சீன் முடிந்து, விளக்கு அணைந்தது. அடுத்த சீனுக்கான செட்களை நகர்த்தியபோது, சீனில் இடம்பெறும்படி, மாட்டப்பட்டிருந்த ராமர் பட்டாபிஷேகப் படம் கீழே விழ, அதைப் பிடிக்கப் போன ஸ்டேஜ் நிர்வாகி கொஞ்சம் தடுமாறிப் போனார். அதற்குள் செட்டின் தூண் பகுதி கீழே சரிந்தது.

மறுகணமே அனைவரும் பாய்ந்து, தூண் விழாமல் பிடித்து நிறுத்தினார்கள். மறுபடி செட்டை சரிசெய்து, முதல் காட்சி முடிந்த நாலாவது நிமிஷம் ஆரம்பித்திருக்க வேண்டிய இரண்டாவது காட்சியை, பதினேழு நிமிடங்கள் கழித்து ஆரம்பித்தோம். அதற்குள் பாதி அரங்கம் காலி!



• ராது

கல்யாணத்தில் கலாட்டா நாடகத்தில், எந்த ஒரு சீனிலும், மணப்பெண் மேடையில் வரவே மாட்டார். அப்படித்தான் கதை எழுதப்பட்டிருந்தது. அது புதுமையான விஷயமாய்க் கருதப்பட்டது என்றாலும், உண்மையான காரணம், அப்போது எங்களுக்கு, இன்னொரு நடிகைக்கு சன்மானம் கொடுத்து, நடிக்க வைக்கிற அளவுக்குப் பொருளாதார வசதி இல்லை என்பதுதான்!



ஒருமுறை சீர்காழியில் ஒரு ஜமீந்தார் வீட்டில் நாடகம் ஏற்பாடாகியிருந்தது. ஆனால், எங்கள் குழுவில் நடித்த பெண்மணி வேறு குழுக்களிலும் நடித்துக் கொண்டிருந்ததால், அவர் அதே தேதியில், நெய்வேலியில் வேறு ஒரு நாடகத்தில் நடிக்க வேண்டியிருந்தது. எங்களுக்கு வேறு நடிகையை ஏற்பாடு செய்ய இயலாத சூழ்நிலை.

எப்படி பிரச்னையை சமாளிப்பது? நெய்வேலி நாடகத்தை ஏழு மணிக்கு ஆரம்பித்து, ஒன்பதுக்கு முடித்துவிடுவது. நாங்கள் கார் எடுத்துக் கொண்டு, நெய்வேலி போய், அவரை அழைத்துக் கொண்டுவந்து, பத்து மணிக்கு சீர்காழியில் நாடகத்தை ஆரம்பிப்பது என்று திட்டம்.

ஆனால், அன்று கடும் மழை காரணமாக நெய்வேலியில் நாடகம் ஆரம்பிக்கவே தாமதமாகி விட்டது. அதை முடித்துக் கொண்டு, காரில் புறப்பட்டால், மழையில், வேகமாய் வரமுடியவில்லை.

சீர்காழியிலோ, நாடகத்தைப் பார்க்க ஆயிரம் பேர் காத்திருக்கிறார்கள். ஜமீந்தார் உதவியாளர் ஒருவர், உடனே நாடகத்தை ஆரம்பிக்க நிர்பந்தித்துக் கொண்டிருக்கிறார்.

வேறு வழியில்லாமல், காத்தாடி ராமமூர்த்தி, நாடகத்தை ஆரம்பித்து, கல்யாண சப்ஜெக்ட் என்பதால், ஏதேதோ நாடக ஸ்கிரிப்டில் இல்லாததையெல்லாம் சொல்லி ஜனங்களை சிரிக்கவைத்துக் கொண்டிருக்கிறார்.

ஒருவழியாய் பதினோரு மணிக்கு நடிகை வந்து சேர, நாடகம் தொடர்ந்து நடந்தது!

டணால் தங்கவேலு - அவரது மனைவி ஈ.வி. சரோஜா இருவரும் கல்யாணத்தில் கலாட்டா நாடகத்தில் நடித்தபோது ஒரு வினோதமான பிரச்னை வந்தது. நாடகத்தில், சரோஜாவும், தங்கவேலுவும் அக்கா - தம்பி. கணவனும், மனைவியும் அக்கா - தம்பியாய் நடித்தால் மக்கள் ஏற்றுக் கொள்ளுவார்களா என்ற கேள்வி எழுந்தது. ஆனால், தங்கவேலு, "இது ஏற்கெனவே பிரபலமான நாடகம். ஆகவே, இனி எங்களுக்காக மாற்றம் எதுவும் செய்ய வேண்டாம். நானும், என் மனைவியும், அக்கா - தம்பியாகவே நடிக்கிறோம்" என்றார்.

தங்கவேலு - சரோஜா நடிப்பில், க. கலாட்டா, முன்னெப்போதையும் விட இன்னும் பிரபலமாகியது!

கோலாரில் நாடகம் போட, செட் பிராபர்டீஸ் உட்பட அத்தனையும் எடுத்துக் கொண்டு, எல்லோரும் ஒரு பஸ்ஸில் கோலார் சென்றோம். வழியில் பஸ் பிரேக் டவுன். அதை சரிசெய்து கொண்டு கோலார் போய்ச் சேர்ந்தபோது, மணி மாலை ஆறே கால் (ஆறு மணிக்கு நாடகம் ஆரம்பித்திருக்க வேண்டும்).

நேரே மேடைக்குப் போய், மைக்கில் எங்களுக்கு ஏற்பட்ட பிரச்னையைச் சொல்லிவிட்டு 'அரை மணி நேரம் கொடுங்கள். உங்கள் முன்னாலேயே நாடகத்துக்கான செட்டை நிர்மாணித்து, நாடகத்தை ஆரம்பித்து விடுகிறோம்' என்று அறிவித்தோம்.

நாடகம் மட்டுமின்றி, அதற்கான செட் நிர்மாணிப்பதையும் கண்டு, ரசித்தவர்கள் அன்றைய கோலார் தமிழ் ரசிகர்களாகவே

இருக்க முடியும்!

மியூஸிக் அகாடமியில் ஒரு தடவை ஏற்பாடாகியிருந்த பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுள் ஒன்று எதிர்பாராமல் கேன்ஸல் ஆகிவிட, மத்தியானம் இரண்டு மணிக்குத் தகவல் சொல்லி, ஏழு மணிக்கு நாடகம் போட வேண்டினார்கள். ஒப்புக் கொண்டோம். ஆனால் மற்ற நிகழ்ச்சிகள் கொஞ்சம் கொஞ்சம் காலதாமதம் ஆக, கடைசியில் எங்கள் நாடகம் ஆரம்பமானபோது இரவு மணி ஒன்பது. நாலு காட்சிகள்தான் முடிந்திருக்கும். சபா செயலாளர், ஒன்பதரைக்கு நாடகத்தை முடித்து விடுங்கள். இல்லையெனில் ரசிகர்கள் வீடு திரும்ப பஸ் கிடைக்காது என்று சொல்லி விட்டார்.

ஒரே நிமிடம் யோசித்து ஒரு முடிவு எடுத்தோம். அடுத்த காட்சியில், மணப்பெண்ணின் நெக்லஸ் காணாமல் போகும். அத்துடன் நாடகத்தை நிறுத்தி விட்டு, "இதுவரை நீங்கள் பார்த்தது நாடகத்தின் டிரெயிலர். முழு நாடகத்தையும், அடுத்த ஞாயிற்றுக்கிழமை, இதே அரங்கில் கண்டு மகிழலாம்' என்று அறிவித்தோம். ரசிகர்கள் எந்த நாடகத்துக்கும் இதுபோல டிரெயிலர் பார்த்திருக்க மாட்டார்கள்!

அம்பத்தூரில் நாடகம். வழக்கமான லேடி ஆர்ட்டிஸ்ட் வரமுடியாத சூழ்நிலையில், ஒரு நண்பர் மூலமாக, அதே ஏரியாவில் வசித்த ஒரு பெண்ணை நடிக்க ஏற்பாடு செய்தோம். ஸ்கிரிப்டையும் கொடுத்தனுப்பி விட்டோம். நாலாவது சீனில், அந்தப் பெண் முதல்முறையாய் வருவார். அவர் வந்ததுதான் தாமதம். விசில் சப்தம்! மேடையை நோக்கி காகித அம்புகள் பறந்தன!

எங்களுக்கு இது புது அனுபவம். ஒன்றும் புரியவில்லை. விசாரித்ததில் அதிர்ச்சி தரும் உண்மை வெளிவந்தது. அவர் அந்தப் பகுதி பொருட்காட்சிகளில் ரெக்கார்டு டான்ஸ் ஆடுபவர். உடனே, அவர் பேச வேண்டிய பல்வேறு காட்சிகளுக்குமான பல வசனங்களை கட் பண்ணி, அவரது முக்கியத்துவத்தைக் குறைத்து, நாடகத்தை நடத்தி முடித்தது முற்றிலும் புதிய

அனுபவம்!

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**

ஆட்டி வைத்த ஜோதிடம்!



• ராவ் ஜோதிடர் சர்மாவுடன்

நம் அரசியல் கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆஸ்தான ஜோதிடர் உண்டு. எந்த ஒரு விஷயத்திலும், அவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் தலைவர்கள் முடிவெடுப்பதில்லை.

தவிர, கட்சி மாறுபாடு இன்றி, பல தரபினரும் கன்ஸல்ட் செய்கிற ஜோதிடர்களும் உண்டு. அவர்கள் திங்கள்- பா.ஜ.க., செவ்வாய்- காங்கிரஸ், புதன் சமாஜ்வாடி கட்சி என்று நாள் ஒதுக்கீட்டைக் கடைபிடிக்கிறார்கள்.



• பண்டிட் பார்சை: திருமதி காந்தியின் ஜோதிடர்

சந்திராசாமியும், நரசிம்மராவும் எத்தனை நெருக்கம் என்பதை உலகமே அறியும். ராவின் நம்பிக்கைக்குரிய ஒரு ஜோதிடர் என்று டெல்லி வட்டாரத்தில் குறிப்பிடப்படும் இன்னொருவர் என்.கே. சர்மா. மந்திரிசபைக் கூட்டம், காங். காரியக் கமிட்டிக் கூட்டம் இவை கூட, சர்மாவைக் கலந்து பேசாமல், ராவ் நடத்தியதில்லை.

"நான் அரசியல் வியூகம் வகுக்கிற நிபுணர். அதன்பின்தான் ஜோதிடர். என் ஆலோசனைப்படி ராவ் நடந்து கொண்டதால் தான், அவரால் முழுமையாய் ஐந்தாண்டு காலம் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. இப்போது ராவ் என்னைக் கன்ஸல்ட் செய்வதில்லை. அவர் நிலைமை என்ன என்பது தெரிகிறதல்லவா?" என்று கேட்கிறார் சர்மா!

இரண்டு டாக்டர்களைப் போலவே, இரண்டு ஜோதிடர்களுடைய கருத்துக்களும் எப்போதும் ஒத்துப் போவதில்லை. பண்டிட் பார்சை என்பவர் இந்திரா காந்திக்கு நெருக்கமான ஜோதிடர்.

"ராவ், தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, இன்றைய நிலைமையை அடைந்ததற்கு, சர்மாவின் தவறான ஆலோசனைதான் காரணம். ஆனால், அந்த நெருக்கத்தால், இன்று சர்மா பலகோடிக்கு அதிபதி" என்று ஒரு புது 'குண்டைத்' தூக்கிப் போடுகிறார் பண்டிட் பார்சை.

தேவகௌடா, அவரது துணைவி சன்னம்மா, மகன்கள், மகள்கள், மருமகன்கள், மாப்பிள்ளைகள் என்று மொத்த குடும்பமுமே ஜோதிடத்தில் அதித நம்பிக்கை கொண்டது.

பதவி இழந்தபின்னரும், 'இன்னும் ஒரு மாதம் நீங்கள் இதே இல்லத்தில் வசிக்கலாம் (நெ.7, ரேஸ் கோர்ஸ் ரோடு) அவசரமாய் காலி செய்ய வேண்டிய அவசியமில்லை' என்று சொல்லிவிட்டால், கர்நாடக பவனில் தங்கியிருந்த தேவகௌடா, திடுதிப்பென்று ஒரு நாள் காலை நாலரை மணிக்கு, ரேஸ் கோர்ஸ் ரோடு இல்லத்தின் இன்னொரு பகுதியில், பால் காய்ச்சிக் குடித்துவிட்டு, மறுபடி கர்நாடக பவனுக்குப் போனதும் தனது ஆஸ்தான ஜோதிடரின் ஆலோசனையின் பேரில்தானாம். அதே போல, குறிப்பிட்ட காலத்துக்கும் முன்பாகவே, கர்நாடக பவனிலிருந்து கௌடா ரேஸ் கோர்ஸ் இல்லத்துக்கு 'கிரகப் பிரவேசம்' செய்துவிட, ஒரே இல்லத்தின் இரு வெவ்வேறு பகுதிகளில் பதவியிலிருக்கும் பிரதமர் ஒருவரும், பதவி இழந்த பிரதமர் ஒருவரும் வசித்த விசித்திரமும் நடந்தது!

கௌடா பதவியிலிருந்தபோது, தமிழ்நாட்டில், நாமக்கல்லைச் சேர்ந்த மேட்டுப்பட்டி சங்கர ஐயர் என்ற ஜோதிடர் உட்பட பலரையும் பல்வேறு காரணங்களுக்காக கன் ஸல்ட் செய்திருக்கிறார்.

"இந்திய அரசாங்கத்தின் பல முடிவுகள், ஜோதிடர்களைக் கலந்து எடுக்கப்படுகிறது என்பது மிகக் கேவலம்" என்று சாடுகிறார் சி.பி.எம். தலைவர் ஹர்கிஷன் சிங் சுர்ஜித்.

"வாஸ்து சாஸ்திர அடிப்படையில் பிரதமர் இல்லத்தில் நடந்த மாற்றங்களும், ஜோதிடர்களின் ஆலோசனையும் தேவ கௌடாவை ஏன் காப்பாற்றவில்லை?" என்று கேட்கிறார் சி.பி.எம். எம்.பியான அசோக் மித்ரா.

'நச்' கேள்விதான்!

- மானஸா,

நன்றி: சன்டே டைம்ஸ்



நூறு சொற்களை நாடு கடத்துங்கள்!

●● பெப்ஸி உங்கள் சாய்ஸில் இந்த வாரம் ஒரு புதிய, இனிய மாற்றம். சிறப்பு விருந்தினராக வந்திருந்த ராகுல் டிராவிட் தன் மோகனப் புன்னகையால் என்னமாய்க் கட்டிப் போடுகிறார்? தவிர ஆர்வக் கோளாறு நேயர்களின் அபத்தமான கேள்விகளுக்கெல்லாமும் (பிடித்த நடிகர், நடிகை, கிரிக்கெட்டர், வயசு, வீட்டுக்கு வரீங்களா...) பொறுமை சொட்ட பதில் சொன்ன விதம், நயம். திராவிடுக்குப் பிடித்த பாட்டு 'தென்பாண்டிச் சீமையிலே'வாம். தமிழ் பேச வராவிட்டாலும் புரிந்து கொள்கிறார், வேகமாக.

●● சுதந்தர தினக் கோப்பை கிரிக்கெட்டை ஒளிபரப்பும் உரிமையைப் பெருமை பொங்க வாங்கிய தூர்தர்ஷன், அதிக பட்சம் எத்தனை சொதப்பமுடியுமோ, அத்தனை சாதித்து விட்டது. திருவிழாவில் மஞ்சள் துணி மூடி போட்டோ பிடித்துத் தருகிறவர்களையெல்லாம் கேமராமேனாகப் போட்டு விட்டிருக்கிறார்களோ என்னவோ. படப்பிடிப்பில் ஒரு உயிர்த்துடிப்பு வேண்டாமா? வெங்கடேஷ் பிரசாத்தும் குருவில்லாவும் ஓபனிங் இறங்கினால் எப்படி இருக்குமோ, அப்படி இருந்தது கேமரா.

●● இஸ்லாம் சுட்டிக்காட்டும் பெண்ணுரிமை என்பதுபற்றி வெள்ளிக்கிழமை காலை ஏடிஎன்னில் ஒருவர் பேசினார். கொஞ்ச நேரம் தான். மதம் தாண்டிய மனித நேயக் குரலில் குர்-ஆன் சுட்டிக் காட்டுகிற பல விஷயங்கள் அற்புதமாக இருக்கின்றன. 'பர்தா ஏன்?' என்பதற்கு இஸ்லாம் தரும் காரணங்களைச் சற்றுக் கூர்ந்து கவனித்தால் (''புருஷனேயானாலும் வேளைகெட்ட வேளையில் மனைவியை ரசித்துக் கொண்டு, கடமையிலிருந்து தவறக் கூடாது!'') எம் மதத்தைச் சேர்ந்த கல்லூரிப் பெண்களும்கூட பர்தாவை ஏற்று, அதை ஒரு ஃபேஷனாகவும் ஆக்கிவிடக் கூடும்.


●● விஜய் டி.வியில் அடிக்கடி வருகிறார் சிவசங்கர்பாபா என்பவர். 'நானே நாராயண அவதாரம்' என்று நொடிக்கொருதரம் சொல்லிக் கொண்டு, சில ஃபோட்டோக்களைக் காட்டுகிறார். "இது என் உடல். அருகே பாருங்கள்... '8' வடிவில் ஜோதி தெரிகிறதல்லவா? அது தான் என் ஆத்மா!'' என்கிறார். அந்த 'ஆத்மா'வைப் 'படம்பிடித்த', போட்டோகிராபர் எங்கிருந்தாலும் தொடர்பு கொள்ளவும்.

●● ஏஷியா நெட்டில் நியூஸ் படிக்கிறவர்களெல்லாம் சங்கீதத்தில் டிகிரி வாங்கியவர்களா தெரியவில்லை. செய்திகளின் இயல்புக்கேற்ப குரலில் குழைவு, நெளிவு கூட்டி ரொம்ப ராகமாகப் படிக்கிறார்கள். மொழி புரியாவிட்டாலும் பாதகமில்லை; ரசிக்க முடிகிறது.

●● சன் மியூஸிக்கில் மசாலா மிக்ஸ் என்ற பெயரில் சகிக்கவொண்ணாத தெலுங்கு டப்பிங் பாடல்களை தினம் தினம் ஒளி/லி பரப்புவதை உடனே நிறுத்தவும். டப்பிங் படங்களுக்குப் பாட்டெழுதும்போது நம் கவி அரசர், சக்கரவர்த்தி, சேனாதிபதி, காவலர்களெல்லாம் எத்தனை கீழே இறங்கி விடுகிறார்கள் என்பதைப் பார்க்க, மனசுக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. இனிமேல் பாடல் வரிகளுக்கும் சென்சார் ரொம்ப முக்கியம். (கேஸட் லெவலிலேயே) அல்லாத பட்சத்தில் உடுக்கை, குடுக்கை என்று தொடங்கி டப்பிங் பாடல்களுக்கான சுமார் நூறு பிரத்யேக வார்த்தைகளை தேசப் பிரஷ்டம் செய்தாக வேண்டும். (லிஸ்ட் வேண்டுபவர்கள் போதிய தபால்தலை ஒட்டிய, சுயமுகவரி எழுதிய அஞ்சல் கவர் அனுப்பவும்.)

– 'டிஷ்'

முதலில் வெல்வெட்



ஷாம்பு. அப்புறம் நிவாரண் - 90 - தொண்டைக் கரகரப்புக்கான சாஷே மருந்து. இப்போது மெமரி பிளஸ்- ஞாபக சக்தி மாத்திரைத் தயாரிப்பு.

தொழிலதிபர், டாக்டர் சி.கே ராஜ்குமார், அடிப்படையில் ஒரு கண் மருத்துவர்!

"தொழிலதிபராக இருந்தாலும் நான் பெரிய நிர்வாகி அல்ல. புதிய கண்டுபிடிப்புகளில் ஆர்வம் உள்ளவன். அதனால்தான் ஆரம்பத்தில் என் கணிப்புகளில் சில தவறுகள் ஏற்பட்டன. ஓஹோ வென்று ஓடிக்கொண்டிருந்த என் பிராடக்ட்களை ஒரு பெரிய கம்பெனியின் விற்பனைப் பொறுப்பில் விட, அவர்கள் செய்த சில சொதப்பல் வேலைகளால் விற்பனை கீழே விழுந்து விட்டது. இப்போதுதான் மீண்டு, எழுந்து கொண்டிருக்கிறேன்!" என்னும் ராஜ்குமார், தினம் காலை எட்டு மணியிலிருந்து இரவு ஒன்பது வரை உழைத்துக் கொண்டே இருக்க வேண்டியதாக உள்ளது என்றார்.

பிரச்னைதான்; சவால் தான்! ஆனால், மனுஷனுக்கு ஒரு ரிலாக்சேஷன் வேண்டாமா?

"எதை ரிலாக்ஸ் என்கிறீர்கள்? பார்ட்டிகளுக்கு, கிளப்களுக்குப் போவதா? எனக்கு அந்தப் பழக்கமே இல்லை. நேரமும் இல்லை. அதில் விருப்பமும் இல்லை! என் வேலையின் டென்ஷனிலிருந்து அவ்வப்போது தாற்காலிகமாக விடுபட எனக்குப் பேருதவியாக இருப்பது என் வீடுதான்!

"மனைவி, இரண்டு மகள்கள், ஒரு மகனுடன் சுமார் ஒரு மணி நேரமாவது தினம் பேசிக் கொண்டிருப்பதுதான் எனக்குப் பிடித்தமான விஷயம். என்ன டென்ஷன் இருந்தாலும், என் குடும்பத்துடன் செலவிடும் அந்த ஒரு மணி நேரத்தில் எல்லாம் பறந்து போய்விடும்! அந்தச் சந்தோஷம், நிம்மதிதான், தெளிவான சிந்தனை, செயல்திறனுக்கு வழி வகுத்துக் கொடுக்கிறது!" என்கிற இவர், வருடம் ஒரு வாரமாவது தம் குடும்பத்துடன் வெளியூர் எதற்காவது சுற்றுலா சென்று வருகிறாராம்.

"செக்குகளில் கையெழுத்துப் போடுவது தவிர, பெரும்பாலான நிர்வாகப் பணிகளை என் மனைவி பார்த்துக் கொள்கிறாள். ஆகவே மார்க்கெட்டிங், ஆராய்ச்சி விஷயங்களில் என்னால் முழுக்கவனம் செலுத்த முடிகிறது!

"தவிர, நான் எதிலும் மிக நிதானமாகச் செயல்படுபவன். கையில் நூறு ரூபாயை வைத்துக் கொண்டு, நூற்றைம்பது ரூபாய்க்குத் திட்டம் போடுகிறவனல்ல நான். அதனால் அமைதியற்ற நிலையும் டென்ஷனும்தான் மிஞ்சும்! நுணுக்கமாக யோசித்து, என்னிடம் வேலை பார்க்கிறவர்களின் கருத்துக்களையும் கவனமாகக் கேட்டு, சரியானவற்றை ஏற்றுக் கொண்டு செயல்படுகிறேன்!" என்கிற ராஜ்குமார், தம் நிறுவனத் தயாரிப்புக்களுக்கான விளம்பர டிஸைன்களையும் தானேதான் செய்கிறார்!

\- ஸ்ரீனிவாசன்

ஒரு மணி நேர சொர்க்கம்!

திருப்பதிக்கு லட்டு

பஸ் பயணம் என்றாலே சில்லறை ஒரு பெரும் பிரச்னை. நடத்துனர், சரியான சில்லறை கேட்பதும், சில்லறை இல்லா விட்டால் இறங்கச் சொல்வதும் நடைமுறைதான். சில்லறை இல்லாமல் திண்டாடிய அனுபவம் கண்டக்டருக்கும் ஏற்பட்டிருக்கும் அல்லவா?

சென்னை தி.நகர் பேருந்து நிலையத்துக்குப் போனோம். எதிரே வந்த ஒரு கண்டக்டரை நிறுத்தி, (சேகர்) லட்டு கொடுத்தோம். சொன்ன பதில் :

''அதெப்படி சார்! கரெக்டா என்னை நிறுத்தி, இந்தக் கேள்வியைக் கேட்டீங்க?'' என்று ஆச்சரியப்பட்டார். ''இரண்டு வாரங்களுக்கு முன்பு பரங்கிமலை ரயில் நிலையத்தில் சில்லறை இல்லாமல் தவியாய்த் தவித்தேன். பரங்கிமலையில் ஒரு நண்பர் வீட்டுக்குப் போய் விட்டு, பிற்பகல் இரண்டு மணி டியூட்டிக்கு, வர வேண்டும். பரங்கிமலை ரயில் நிலையத்தின் டிக்கெட் கவுண்டரில் ஐந்து ரூபாயை நீட்டி, மாம்பலத்துக்கு டிக்கெட் கேட்டேன்.

''ரயில்வே ஊழியர், 'சில்லறையா ரெண்டு ரூபாய் கொடுங்க' என்றார். என்னிடமோ சில்லறை கிடையாது. வேறு யாராவது வந்து டிக்கெட் வாங்கினாலாவது சில்லறை கிடைக்குமா என்று காத்துக் கொண்டிருந்தேன்.

''பரங்கிமலையில் பெரும்பாலான ரயில் பயணிகள் சீசன் டிக்கெட்காரர்கள். மதிய நேரம் வேறு. கால் மணி நேரம் காத்திருந்தும் வேஸ்ட்.

''எதிரே இருந்த ஒரு டீக்கடையில் டீ குடித்தாலாவது சில்லறை கிடைக்காதா என்ற எண்ணத்தில், கொளுத்தும் வெயிலில், சுடச்சுட ஒரு டீ வாங்கிக் குடித்தேன். டீக்கடைக்காரரிடம் ஐந்து ரூபாயை நீட்டினேன். 'சில்லறை இல்லை. எட்டணா குடுங்க. நாலு ரூபாய் தரேன்' என்று அவர் சொல்ல, நான் நொந்து போனேன்.

''தவிச்சுப் போயிட்டேன் சார்!''

''இரண்டு மணிக்கு, டியூட்டிக்குப் போயாக வேண்டிய அவசரம். அதற்குள் ஒரு ரயிலையும் தவறவிட்டு விட்டேன்.

''டீக்கடைக்காரரிடம், 'என்னிடம் சில்லறை இல்லை. பரவாயில்லை; இரண்டு ரூபாய் எடுத்துக் கொண்டு, பாக்கி மூணு ரூபாய் கொடுங்கள் போதும்'' என்றேன். அவர் கொடுத்த மூணு ரூபாயுடன் ஸ்டேஷனை நோக்கி விரைந்தேன்.

''இரண்டு ரூபாயினை நீட்டி, டிக்கெட் வாங்கிக் கொண்டிருக்கும் போதே அடுத்த ரயில் வரும் சத்தம் கேட்டது. அவசரமாய் ஓடி, ரயிலைப் பிடித்து, மாம்பலம் வந்து சேர்ந்தேன்.

''தினமும் ஒரு ஆயிரம் பேருக்காவது பாக்கி சில்லறை கொடுக்கிற நானே இன்று சில்லறையில்லாமல் திண்டாடும்படியாகிவிட்டதே என்று அன்று முழுவதும் ஆதங்கப்பட்டுக் கொண்டே இருந்தேன்.''

சந்திப்பு : சி.எம்.
படம் : ஸ்ரீஹரி



• சேகர்

பி.யூ. சின்னப்பா அவர்களுடன் பழகிய நாட்கள், என் வாழ்வில் மறக்கவே முடியாத மிகச் சில காலகட்டங்களுள் ஒன்று.

மிகச் சிறந்த நடிகர். மாபெரும் பாடகர். லட்சக்கணக்கான ரசிகர்களின் மனத்தில் வீற்றிருந்த கனவு நாயகன். ஆனபோதிலும் துளிக்கூட கர்வமோ, பந்தாவோ இல்லாத மிக எளிய மனிதர் அவர்.

பெரிய நடிகர், புதுமுக நடிகர், துணை நடிகர்கள் என்றெல்லாம் வித்தியாசம் பார்க்காமல் எல்லோரோடும் சரிசமமாகப் பழகுவார். நாடக உலகிலிருந்து கஷ்டப்பட்டு முன்னேறி, சினிமாவுக்கு வந்தவர்களுள் அவரும் ஒருவர் என்பதால், கடந்து வந்த பாதையை மறக்காமல் கடைசிவரை எளிமையும் இனிமையுமாகவே பழகி வந்தார்.

வனசுந்தரி படத்தில் அவர் கதாநாயகன். கலைவாணர், மதுரம் மற்றும் அவர்களது பட்டறையில் தயாரான நான், சி.எஸ். பாண்டியன் எல்லாம் காமெடி கோஷ்டி.

ஒருநாள் நானும் பாண்டியனும் சம்பந்தப்பட்ட காட்சி ஒன்று படமாக இருந்தது. நாங்கள் இருவரும் சிறைச்சாலைக் காவலர்கள்.

மேக்-அப் போட அறைக்கு வந்தபோது அங்கே இருந்த பி.யூ. சின்னப்பா, "வாங்க, இன்னிக்கு உங்களுக்கு சீன் இருக்கு போலிருக்கு?" என்று கேட்டார்.

"ஆமாண்ணே, ஜெயில் சீன்" என்று நான் பதில் சொன்னேன்.

"எங்க, கொஞ்சம் விளக்கமா சொல்லு, என்ன காட்சி?" என்று கேட்டார்.

"கலைவாணரும் மதுரமும் ஜெயிலுக்குள்ள இருப்பாங்க. நாங்க

ஓடினேன், ஓடினேன் மூச்சிரைக்க ஓடினேன்!

வி.கே. ராமசாமி



* படம் : ஸ்ரீஹரி

ரெண்டு பேரும் காவலர்கள். அவரு மெதுவா எங்ககிட்ட பேச்சுக் கொடுத்து 'ஆடு புலி ஆட்டம்' ஆடலான்னுவாரு. நாங்களும் சரின்னு உட்காருவோம். கம்பிக்கு நடுவுல கட்டம் போட்டு, அவுங்க உள்ள - நாங்க வெளியில உட்கார்ந்து ஆடுவோம். புலி இங்க, ஆடு அங்க; ஆடு இங்க; புலி அங்கன்னு மெதுவா பேசிப்



பேசி எங்களுக்கு ஆட சொல்லிக்குடுக்கறா மாதிரி போக்குக்காட்டி, நைசா, ஜெயில் லேருந்து அவங்க தப்பிச்சுருவாங்க. அப்புறம் விஷயம் விளங்கி, 'உன்னாலதான் கோட்டை விட்டோம்; என்னால்தான் தப்ப விட்டோம்'னு நாங்க ரெண்டு பேரும் அடிச்சிக் கிட்டு சண்டை போடுவோம்..."

நான் காட்சியை விளக்கிச் சொல்ல, ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்த பி.யூ. சின்னப்பா, "அடடே, பிரமாதமா வரும்போல இருக்கே!" என்று சிலாகித்தார்.

சற்று நேரம் கழித்து, "நீங்க ரெண்டு பேரும் சண்டை போட்டுக்கறமாதிரி சீன் வரு தில்லே? வாங்க, நான் சண்டை கத்துத் தரேன்!" என்று எங்கள் இருவரையும் அழைத் துக் கொண்டு, செட்டுக்குப் போனார்.

"யார் முதல்ல வரீங்க?" என்று அவர் கேட் டதும், உடனே நான் பாண்டியனை முன் னால் தள்ளினேன்.

சின்னப்பா, தயாரானார். அந்த விஸ்தார மான ஹாலின் நடுவே பாண்டியனை அழைத் துப்போய் தடாலென்று தள்ளி, இரண்டு குத்து விட்டார்!

அவ்வளவுதான்! தலைகுப்புற விழுந்த பாண்டியன், எழுந்திருக்கவேயில்லை!

அடுத்தபடியாக, 'காத்திருந்த' என்னைத் திரும்பிப் பார்த்தார் சின்னப்பா.

எனக்கு மரணபயம் பிடித்துக் கொண்டு விட, தலைதெறிக்க வெளியே ஓடினேன்.

"ராமசாமி! ஏன் ஓடறே? நில்லு! நில்லு!" என்று சின்னப்பா அண்ணன் குரல் கொடுக்க, நானா நிற்பேன்?

பாதம் தலையில் படும்படியான ஒரு ஓட் டம். அலறிக் கொண்டு கண்மண் தெரியாமல் ஓடியவன், குறுக்கே ஒரு கார் வருவதுகூடத் தெரியாமல் நடுவே பாய, மயிரிழையில் பிரேக் பிடித்து நின்றது கார்!

இறங்கியவர் கலைவாணர்! என் பதற்றத்தைப் பார்த்து, என்னவோ ஏதோ என்று பயந்தவர், "என்ன ராமசாமி! இப்படி ஓடி வரே! ஒரு விநாடி தாமதமா பிரேக் அடிச்சிருந்தேன்னா கை, கால் உடைஞ்சிருக்கு மேய்யா! என்ன ஆச்சு?" என்றார் வேகமாக.

நான் நின்று, மூச்சிறைக்க பாண்டியனை, சின்னப்பா 'படுக்க'வைத்த கதையைச் சொல்லி முடித்தேன்.

அவ்வளவுதான். கலைவாணர் விறுவிறு வென்று உள்ளே போனார்.

"ஏம்பா சின்னா! பாண்டியனை ஒரே அடியில படுக்க வெச்சிட்டியாமே? நல்ல ஆளுப்பா நீ. நீ ஹீரோ. அடி, தடி, ஃபைட் டெல்லாம் முக்கியம்: கத்துக்கணும். இவனுங்க காமெடியன்தானே? குஸ்தியெல்லாம் எதுக்கு? பாரு, ராமசாமி அலறி அடிச்சிட்டு ஓடி வந்ததைப் பார்த்து நானே பயந்துட்டேன்!"



சின்னப்பா, என்னை ஒரு கணம் உற்றுப் பார்த்தார். களுக்கென்று சிரித்துவிட்டு, வெளியே போய் விட்டார்!

இது மட்டுமல்ல; நான் பி.யூ. சின்னப்பா விடமிருந்து பயந்து, தப்பித்து ஓடிய இன் னொரு சம்பவமும் உண்டு. ஆச்சரியம், அதுவும் அதே படத்தின் படப்பிடிப்பு சமயத் தில்தான் நடந்தது.

அப்போதெல்லாம் எனக்குப் புகை பிடிக் கும் பழக்கம் உண்டு. என் நண்பர் சி.எஸ். பாண்டியனும் சிகரெட் பிடிப்பார்.

ஒருநாள் படப்பிடிப்பு தொடங்கும் முன், மேக்-அப் எல்லாம் போட்டுக் கொண்டபின் இருவரும் புகை பிடிக்கக் கிளம்பினோம்.

குழுவில் மிகவும் இளையவர்களான நாங்

கள், மற்றவர்கள் முன் அந்தக் காரியத்தைச் செய்ய முடியுமா?

ஆகவே, மறைவான இடம் தேடி, ஸ்டுடியோவின் பின்புறம் இருந்த ஒரு பழைய சுவரின் பின்னால் மறைவாகச் சென்று பற்ற வைத்தோம்.

அப்போதுதான் அவர் கண்ணில்பட்டார்! அதே மறைவிடத்தின் இன்னொரு மூலையில் பி.யூ. சின்னப்பா!

ஒரு நீளமான சுருட்டைப் பிடித்துக் கொண்டு, மேக்-அப்புடன் அங்கே அமர்ந்திருந்தார் அவர்.

எங்களை அவர் பார்த்தும் விட்டார்! ஆனால், பார்த்தும் பார்க்காததுபோல முகத்தை வேறுபுறம் அவர் திருப்பிக் கொண்டது, எங்களுக்குக் கலவரமாகி விட்டது!

அந்த நேரத்தில் என்ன செய்வது என்று தெரியாமல், வாயிலிருந்த சிகரெட்டை எடுத்துக் கீழே போடக்கூடத் தோன்றாமல் தலை தெறிக்க ஓட ஆரம்பித்தோம்.

கொஞ்ச தூரம் ஓடியதும் ஓரிடத்தில் ஆணி அடித்தாற்போல அதிர்ச்சியில் உறைந்து நின்று விட்டோம்! எதிரே பி.யூ. சின்னப்பா!

ஒரே குழப்பம்!

இப்போதுதானே இவரிடமிருந்து தப்பி ஓடி வந்தோம்? அதற்குள் இவரே எப்படி எதிரே வந்து நிற்க முடியும்?

தலையைப் பிய்த்துக் கொண்டோம்.

"என்னப்பா? வாயில இருக்கறதை முதல்ல எடுங்க! ஏன் ஓடி வரீங்க?" என்று கேட்டார்.

அவசரமாக சிகரெட்டை எடுத்துத் தூக்கிப் போட்டுவிட்டு, "அண்ணே, நீங்க எப்படி இங்க... அங்க..." என்று குழறினேன்.

"அட என்னப்பா சொல்றே? விவரமா சொல்லு!" என்றார்.

"அண்ணே, நாங்க அந்தப் பக்கமா ஒதுங்கினோம், சிகரெட் பிடிக்க- ஆனா, நீங்க அங்க உட்கார்ந்து சுருட்டு பிடிச்சிட்டிருந்தீங்க. உங்க கண்ணுல பட்டுட்டமேன்னு பயந்து, ஓடி வந்தா நீங்க எதிரே நிக்கறீங்க. ஒண்ணுமே புரியலையே..." என்று சொல்லி முடிப்பதற்குள் உண்மை பளிச்சிட்டுவிட்டது.

அங்கே நாங்கள் பார்த்தது பி.யூ. சின்னப்பாவை அல்ல; அவரைப் போலவே மேக்-அப் போட்டுக் கொண்டு, அவரைப் போலவே சுருட்டுப் பிடித்துக்கொண்டு காட்சிக்காகக் காத்திருந்த அவரது டூப்!

இதைச் சொன்னதும் அவர் விழுந்து விழுந்து சிரித்தார்.

"என்னது? என்னைப் போலவே சுருட்டு பிடிச்சிட்டிருந்தானா? கூப்பிடு அவனை" என்றார்.

இதற்குள் விஷயம் கேள்விப்பட்ட அந்த டூப் நடிகர், சின்னப்பாவைப் பார்க்க வெட்கப்பட்டுக்கொண்டு, மேக்-அப்பைக் கூடக்



கலைக்காமல் நைஸாக ஸ்டுடியோவை விட்டுப் போய்விட்டார்!

அன்றைய படப்பிடிப்பில் டூப் இல்லாமலேயே அவர் நடிக்க வேண்டியதாகி விட்டது!

இப்படி மகிழ்ச்சியும் உற்சாகமும் நல்ல வாய்ப்புக்களுமாக நான் வளர்ந்து கொண்டிருந்த வேளையில் ஒருநாள் திடீரென்று ஜூபிடர் பிக்சர்ஸிலிருந்து என்னைக் கூப்பிட்டார்கள். அவர்கள் அப்போது எடுத்துக் கொண்டிருந்த 'அழகி' என்ற படத்தில் நடிப்பதற்குத்தான் அந்த அழைப்பு.

கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் அந்தப் படம் வளர்ந்து கொண்டிருந்த விஷயம் எனக்கு முன்பே தெரியும்.

மைலாப்பூர் லஸ்ஸில்



இருந்த ஜுபிடர் அலுவல கத்தில் நான் அந்த நிறு வனத்தின் மானேஜரைச் சந்தித்தபோது. "இந்தப் படத் தில் நீங்கள் நடித்தே ஆக வேண்டும் என்பது டைரக்டரின் விருப்பம். இந்த கேரக்டரில் நீங்கள் நடிக்காவிட்டால் கதையையே மாற்றியாக வேண்டும் என்கிறார். உடனே ஒப்புக் கொள்ளுங்கள்" என்றார்.

எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. அப்படி என்ன கேரக்டர்?

"அதெல்லாம் டைரக்டர் சொல்லுவார். நீங்கள் தயவு செய்து உடனே ஒப்புக் கொள்ளுங்கள். என்ன சம்பளம் வேண்டும் என்று சொல்லுங்கள்" என்றார்.

நான் என்ன சொல்வது?

"சரி. நானே சொல்லி விடுகிறேன். தமிழ், தெலுங்கு இரு மொழிகளில் படம் தயாராகிறது. இரண்டுக்கும் சேர்த்து ரூ.25,000 சம்பளம் சரியா?" என்று கேட்டுவிட்டு, நான் பதில் சொல்வதற்கு முன்பே ரூ.2,500 அட்வான்ஸும் கொடுத்து விட்டார்.

எல்லாம் சில நிமிடங்களுக்குள் நடந்து முடிந்து விட்டது!

"சரி. நீங்கள் கிளம்புங்கள். நாளை காலை கோவை கிளம்புகிறீர்கள். உங்களுக்கு ஒரு அஸிஸ்டெண்ட் தருகிறோம். அவரும் உங்களுடன் வருவார்" என்றார் அந்த மானேஜர்.

'நான் நடிக்காவிட்டால் கதையையே மாற்றிவிட வேண்டும்' என்று டைரக்டர் சொன்னார் என்று அவர் சொன்னதுதான் திரும்பத் திரும்ப என் ஞாபகத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

என் மேல் எத்தனை நம்பிக்கை இருந்தால் அப்படிச் சொல்லி இருப்பார்?

மேலும் அந்தப் படத்தின் இயக்குநர் சாதாரணமான ஆளல்ல! அன்றைய தினத்தில் நட்சத்திர இயக்குநர்! - சுந்தர்ராவ் நட்கர்ணி.

நிறைய கனவுகளுடனும் எதிர்பார்ப்புகளுடனும் நான் கோவைக்குப் பயணமானேன்.

வழியில் ரயில் அரக்கோணத்தில் நின்றபோது சிகரெட் வாங்கக் கீழே இறங்கினேன், முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து.

தற்செயலாக என் பார்வை நாலைந்து கம்பார்ட்மெண்ட் தாண்டிப் போக, வேறொரு பெட்டியிலிருந்து ஓர் உருவம் இறங்கியதைக் கண்டேன்.

எனக்குத் தெரிந்த முகம்தான்.

அவர் - ஏ.பி.என்.

(தொடரும்)

கல்கி கன்ஸல்டன்சி

'ஓடிப்போன' செல்லப்பிள்ளை!

போன வருடம் தமிழகத்தில் பல நிதி கம்பெனிகள் திவாலாகி பொதுமக்களுக்கு பேரிழப்பையும் மனக்கஷ்டத்தையும் ஏற்படுத்தின. இந்த நிறுவனங்கள் அனேகமாக மழைக்காலக் காளான்களாக முளைத்து வெளிச்சம் போட்டவை.

ஆனால் சமீபத்தில் திவாலான பம்பாய் நிதி நிறுவனம் அப்படிப்பட்ட காளான் நிறுவனம் அல்ல... மதிப்புமிக்க NBFC (Non Banking Finance Company) வரிசையில் இடம்பெற்றது. சென்னை உள்பட, நாட்டின் பல முக்கிய நகரங்களில் அதன் கிளைகள் இயங்கின. 'சி.ஆர்.பி. காபிடல் மார்க்கெட்' என்ற அந்த நிறுவனத்துக்கு, ஒரு மியூசுவல் ஃபண்ட் துவங்கக்கூட அனுமதி அளிக்கப்பட்டது. (மியூசுவல் ஃபண்ட் என்றால், யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா போல் பொதுமக்களிடமிருந்து தொகைகளைப் பெற்று, பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்து, அதன் மூலம் கிடைக்கும் லாபத்தை அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் அமைப்பு)

இந்த மியூசுவல் ஃபண்ட் மூலம் முந்நூறு கோடி ரூபாயும், வேறு முதலீடுகள் மூலம் இருநூறு கோடி ரூபாயுமாக மொத்தம் ஐந்நூறு கோடி ரூபாய் திரட்டியது சி.ஆர்.பி. காபிடல் மார்க்கெட்ஸ்.

இப்போது, திடீரென்று இரவோடு இரவாக இந்த நிறுவனம் இழுத்து மூடப்பட்டுவிட, உரிமையாளர்களைக் காணவில்லை! இந்த நிறுவனத்தின் சொத்துக்களை, அரசாங்கம் கையகப்படுத்தி, டெபாஸிட்தாரர்களுக்கு ஓரளவு நஷ்டஈடு தரலாம். ஆனால் இருக்கிற மொத்த சொத்து மதிப்பே இருநூறு கோடி ரூபாய்தான்; அதிலும் விற்றுக் காசாக்கக்கூடிய நிலையில் நூறு கோடி ரூபாய்க்கான சொத்துக்களே உள்ளன!

இந்த லட்சணத்தில் சி.ஆர்.பி. காபிடல் மார்க்கெட்ஸ் நிறுவனத்துக்கு முழுமையான வங்கி ஒன்றைத் தொடங்க ரிசர்வ் வங்கி அனுமதி அளித்திருந்தது. பல பிரபல நிறுவனங்கள் இப்படி அனுமதி கேட்டு கியூவில் நிற்க, செல்லப்பிள்ளையான சி.ஆர்.பிக்கு மட்டும் முந்திக்கொண்டு அனுமதி! இந்த விஷயத்தை விளம்பரமாக்கியே அந்நிறுவனம் இன்னும் கொஞ்சம் டெபாஸிட் சேர்த்துவிட்டது!

ரிசர்வ் வங்கி எப்படி ஏமாந்து போனது? அல்லது ஏன் அலட்சியமாய் இருந்தது என்கிற கேள்வி ஒரு பக்கம் இருக்க, இனி NBFCக்களைக் கூட நம்ப முடியாது போலிருக்கிறதே என்று பொதுமக்கள் சோர்ந்துபோய் விட்டார்கள். இனி முதலீடுகளை தேசிய மயமான வங்கிகளில் போட்டுவிட்டு வருகிற வட்டி போதும் என்று இருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள். இதனால் நிதி நிறுவனங்கள் நலிந்து போகும் என்பதுடன் தொழில் வளமும் வர்த்தகமும் நிச்சயமாக பாதிக்கப்படும். நாட்டின் பொருளாதார நிலை இருக்கிற இருப்பில் இதெல்லாம் கட்டுப்படியாகிற விஷயமா...?

இப்படிப்பட்ட பிரச்னைகள் எதிர்காலத்திலாவது ஏற்படாமலிருக்க அரசாங்கம் ஒரு காரியம் செய்யலாம்.

வங்கிகளின் டெபாஸிட் தொகையை இன்ஷூர் செய்யும் நடைமுறை வழக்கத்தில் இருக்கிறது. (இதற்கான ப்ரீமியம் செலவை வங்கிகளே ஏற்கும் - டெபாஸிட்தாரர்கள் தலையில் விழாது!)

இந்தக் காப்பீடு முறையை அனைத்து நிதி நிறுவனங்களுக்கும் கட்டாயமாக்கினால், பொதுமக்கள் இப்படிப் பெரிய அளவில் ஏமாற்றப்பட நேர்ந்தால் இன்ஷூரன்ஸ் தொகை கைகொடுக்கும்.

சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் பாளை சென்ட்ரல் வங்கி என்ற கேரளத்து வங்கி திவாலானபோது பொதுமக்கள் கொதிப்படைந்துள்ளார்கள். அந்த நேரத்தில்தான் இன்ஷூரன்ஸ் முறையை அரசாங்கமும் ரிசர்வ் வங்கியும் இணைந்து அறிமுகப்படுத்தின. டெபாஸிட் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா என்கிற அமைப்பு இதற்கென்றே ஏற்படுத்தப்பட்டது.

வங்கிகள் தேசியமயமான பிறகு, அவற்றின் முதலீடுகள் பெரும்பாலும் அரசுத் துறையிலேயே செய்யப்பட்டன. எனவே அந்த வங்கிகள் திவாலாகும் அபாயமோ, பொதுமக்கள் நஷ்டமடையும் அபாயமோ இல்லாமல் போயிற்று.

இந்த டெபாஸிட் இன்ஷூரன்ஸ் முறையைத் தனியார் நிதி நிறுவனங்களுக்குக் கட்டாயமாக்குவது குறித்து ஒரு நல்ல முடிவுக்கு வர இதுவே சரியான நேரம்.

நடந்து முடிந்த ஒரு தீமையின் விளைவாக ஒரு நன்மை நடக்கட்டுமே!

— வி. கோபாலன்


முன்னாள் பிரதமர்

தேவேகௌடா, தம் மகன் குமாரசாமியின் 5, சப்தர்ஜங் சாலை வீட்டுக்குக் குடிபுகுந்திருக்கிறார். 'எனக்கு வேறு வீடு எதுவும் தேட வேண்டாம். நாடாளுமன்ற உறுப்பினரான மகனுக்கு வேறு வீடு ஒதுக்கித் தந்து விடுங்கள், அது போதும்' என்று நகர்ப்புற நிர்வாக அமைச்சகத்துக்கு ஒரு கடிதமும் எழுதி விட்டார். இந்த வீடு தேவேகௌடாவுக்கு ரொம்ப ராசியானதாம். இந்த வீட்டில்தான், அவர் முதன்முதலில் நாடாளுமன்றத் தேர்தலில் ஜெயித்து வந்தபோது வசித்தார். அப்புறம் பிரதமரானார். சப்தர்ஜங் சாலை வீட்டில், பெரிய பூஜையும், மந்திர கோஷ முழக்கங்களுமாக அமர்க்களப்பட்டது. தேவே கௌடா குடி வருமுன், அவர் மனைவியின் விருப்பப்படி, அவர் மேற்பார்வையிலேயே, பூஜை அறை, சமையலறை, மற்ற அறைகள் யாவும் திருத்தி அமைக்கப்பட்டன; வர்ணம் பூசப்பட்டது. ஸ்பெஷல் பாதுகாப்புக் குழுவுக்குத்தான் பாவம், திண்டாட்டம். உள்ளே சரியாக இடம்கொடுக்கப்படவில்லை. வெளியே டெண்ட்டுகள் போட்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்!

● பிரதமரின்

குஜ்ராலின் புதிய தலைவலி!

போக்குவரத்துப் பாதுகாப்புப் பணியை மாற்றி அமைக்க உள்துறை அமைச்சகம் ஒரு புதிய திட்டத்தை வகுத்திருக்கிறது. மார்ட்டின் மாஸே என்கிற அப்பாவி, தெரியாத்தனமாய், பிரதமர் போகிற பாதையில் ஸ்கூட்டரைச் செலுத்தி, போலீசாரால் படுபயங்கரமாகத் தாக்கப்பட்ட சம்பவத்துக்குப் பிறகு குஜ்ரால் மிகுந்த கவலைப்பட்டார். காபினெட் செக்ரட்ரி டி.எஸ்.ஆர். சுப்பிரமணியம் கூட்டிய இந்தக் கூட்டத்தில் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் தவிர, உள்துறை தனிச் செயலரும், பாதுகாப்புச் செயலரும் கலந்துகொண்டு விவாதித்தார்களாம். பாதுகாப்புக்கான கார்களும் குறைக்கப்படுகின்றன. பாதுகாப்பு சம்பந்தப்பட்ட மிகைப்படுத்தலான ஏற்பாடுகளும் மாற்றி அமைக்கப்படுகின்றனவாம். பாதுகாப்பும் இருக்க வேண்டும், ஆனால் அது இருக்கிற மாதிரியும் தெரியக்கூடாது என்று தீர்மானித்திருக்கிறார்களாம்! "என்ன வேணுமானாலும் செய்யுங்கள். ஆனால் என்னால் மக்களுக்கு அசௌகரியம் மட்டும் ஏற்பட்டு விடக்கூடாது!" என்று பிரதமர் குஜ்ரால் கேட்டுக் கொண்டாராம்.


குஜ்ரால்

● பஞ்சாப் காங்கிரஸ் தலைவர் எஸ். எஸ். ரந்தவா, கேசரியை எதிர்த்துப் போர்க் கொடி தூக்கி, பதவியையும் வீசி

எறிந்தார், பிறகு சமாதானமாகி விட்டார். இப்போது மேற்கு வங்க காங்கிரஸ் தலைவி மம்தா பானர்ஜியும் கேசரிக்கு எதிராகக் கிளம்பியிருக்கிறார். அதிலும் தமது எதிரியான சோமன் மித்ரா, போகஸ் ஆட்களை உறுப்பினர்களாகச் சேர்த்து விட்டார் என்று குற்றம்சாட்டியிருக்கிறார். "ஆமாம், இது சகஜம்தான். ஏன் என்றால் காங்கிரஸ் ஒரு 'மாபெரும்' கட்சி!" என்று சமாதானம் செய்தாராம் கேசரி!



• கௌடா



• மம்தா

● குஜ்ராலுக்கு இப்போதைக்குப் புதிய தலைவலி ஜனதா தளத் தலைவர் சரத் யாதவ்தான். நாடாளுமன்றத்தில் காரசாரமாகப் பேசிய யாதவ், 'இந்த அரசு எப்படி நடைபெறுகிறது என்பதே மூடு மந்திரமாக இருக்கிறது. பிரதமர் வெறும் அலங்காரப் பதுமையாகத்தான் இருக்கிறார்' என்று பேசியிருப்பது, ஜனதா தளத்திலேயே சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

● மறுபடியும் மதன்லால் குரானாவை தில்லி முதலமைச்சராக்கும் பேச்சுக்கே இடமில்லை என்று எல்.கே. அத்வானி சொன்னதைக் கேட்டு, குரானாவின் ஆதரவாளர்கள் கொஞ்சம் கோபமாகி விட்டார்கள். குரானாவின் ஆதரவாளர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அதிலும் எம்.எல்.ஏக்களில் கணிசமான ஆதரவு அவருக்குத்தான் இன்னும் இருக்கிறது. ஒரு டஜன் எம்.எல்.ஏக்களின் ஆதரவே இப்போதைய முதலமைச்சர் சாகிப் சிங் வர்மாவுக்கு இருக்கிறதாம். ஆக மொத்தம், பா.ஜ.க.விலும் கோஷ்டிகள் வெளிப்படையாகவே மோதிக் கொள்ளத் தொடங்கி விட்டன என்பது தெளிவாகி விட்டது!

● ப்ளஸ் ஒன், ப்ளஸ் டூ வகுப்பு மாணவ மாணவிகள் இனி தவளை முதலான பிராணிகளை வகுப்பில் 'டிஸ்ஸெக்ஷன்' செய்ய வேண்டியதில்லை என்ற மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் முடிவு, மருத்துவப் படிப்பு மேற்கொள்ள விரும்பும் மாணவ - மாணவிகளுக்குப் பாதகமாகப் போய்விடுமோ என்று ஒரு கவலை எழுந்திருக்கிறது. தேசிய கல்வி ஆராய்ச்சி நிறுவனமும், சி.பி.எஸ்.இ.யும் இந்த முடிவை ஆதரிக்கவில்லை. பிராணிகளுக்கு இழைக்கப்படும் சித்திரவதைகளை எதிர்த்துப் போராடும் எஸ்.பி.சி.ஏ. அமைப்பு தில்லி உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்குக்குத்தான் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் தன் முடிவைத் தெரிவித்தது. 'டிஸ்ஸெக்ஷனே செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. விருப்பமானவர்கள் செய்யலாம் என்றுதானே சொல்கிறோம்?' என்று பிளேட்டைத் திருப்புகிறது அமைச்சகம்.

● கௌடா அரசுக்கு அளித்துவந்த ஆதரவை கேசரி மார்ச் 30 அன்று திரும்பப் பெற, குறிப்பாக என்ன காரணம் என்று நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது பலரும் கேட்டார்கள். ராவ் உட்பட, காங். உறுப்பினர்கள் மௌனம் சாதித்தார்கள். இப்போது அந்த ரகசியம் வெளியாகியுள்ளது. மார்ச் 29 அன்று அன்னிய நன்கொடைகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி அயல்நாடுகளிலிருந்து 3.75 கோடி ரூபாய் நன்கொடை பெற்றதற்காக உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா காங். மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருந்தாராம். மறுநாள் முப்பதாம் தேதி, தம் ஆதரவை வாபஸ் வாங்கி விட்டார். இப்போது

புரிகிறதா?

- நியூஸ்வாலா

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
வி. எஸ். கோவிந்தன்,
ஆய்வக உதவியாளர்,
அ.கு.க. நிலையம்,
தே. கல்லுப்பட்டி - 626 702.

● கே. பெருமாள்,
கூனியூர்.

? ஜாதி சங்கங்களில் நடிகர்கள் சேரக் கூடாது என்று விஜய்காந்த் கூறியிருப்பது பற்றி...?

! குறுகலான கண்ணோட்டம். ஜாதி சங்கமே கூடாது என்று சொல்லியிருந்தால் பாராட்டலாம். அந்த விஷயத்தில் ரஜினி ரொம்ப பெட்டர்!

● எம். அசோக்ராஜா, திருச்சி - 15.

? திருநாவுக்கரசு நிலை எங்களுக்கு வரவே வேண்டாம் என்கிறாரே கண்ணப்பன்...?

! முதுகெலும்பைக் கழற்றி வைக்காமல் அம்மை யாரிடம் நல்ல பேர் வாங்க முடியாது.

● எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? உங்கள் கணிப்பில் சுதந்தர தினக் கோப்பை எந்த நாட்டுக்குக் கிடைக்கும்...?

! ஸ்ரீலங்காவுக்கு உள்ள டீம் ஸ்பிரிட், வெற்றி பெறும் வெறி, ஆட்டத்திறமை, வியூகம் வகுக்கும் நுணுக்கம் - இவை வேறு யாரிடமும் காணப்பட வில்லை. அவர்கள் கோப்பையைப் பெறாவிட்டால் ஆச்சர்யமே.

● சீதாமகன், திருவண்ணாமலை.

? சேலத்தில் தி.மு.க. மாநில மாநாடு நடத்த ஏற்பாடு செய்து, நுழைவுச் சீட்டு விற்பனை செய்கிறதே... நியாயமா?

! விற்பனை நியாயம் தான். கட்டாய விற்பனைதான் கண்டிக்கத்தக்கது.

● ச. ஆ. கேசவன்,
குருமலை.

? சுதந்தரம் கிடைத்த ஐம்பது ஆண்டுகளில் நாம் சாதித்தவை என்ன...?

! கல்கி வெளியிட விருக்கும் சுதந்தரப் பொன்விழா மலரை வாங்கிப் படித்தால், உங்கள் கேள்விக்கு விடை கிடைத்துவிடும். ஆகஸ்டு முதல் வாரத்தில் எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

● இரா. கமலக்கண்ணன், நாமகிரிப்பேட்டை.

? வயது ஆக, ஆக, மனிதர்கள் பக்குவம் அடைந்து விடுவார்களா?

! அது பொதுவான எதிர்பார்ப்பு. ஆனால் பக்குவத்துக்கும் முதுமைக்கும் தொடர்பு இருக்க வேண்டிய கட்டாயமில்லை. இளமையில் துறவறம் மேற்கொள்பவரையும் முதுமையில் மறுமணம் செய்துகொள்பவரையும் ஒருங்கே பார்த்த தேசம் இது.

● என். சண்முகம், திருவண்ணாமலை.

? 'ஜெயலலிதாவை சந்திக்க நல்ல முகூர்த்தம் பார்க்கிறேன்' என்று சு. சுவாமி கூறியிருப்பது பற்றி...?

! எந்த நேரத்தில் சந்தித்தாலும் அது ராகுகாலம் தான்!

● வீ. முத்துக்குமரன், திருமானூர்.

? நரசிம்மராவ் பேசாமலிருந்தே எல்லாவற்றையும் சாதிச்சாரு! கௌடா பேசியே எல்லாவற்றையும் கெடுத்தாரு... குஜ்ரால் எப்படி...?

! பட்டுக் கொள்ளாமலிருந்து கெடுத்துக் கொண்டிருக்கிறார் - குறிப்பாக லல்லு விஷயத்தில்!

● ப. சங்கர், திருப்பூர்.

? மகாராஷ்டிராவில், 'முதல் மூன்று வகுப்புக் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்களின் எடை ஒரு கிலோவுக்கு மேல் இருக்கக் கூடாது' என்று ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியிருப்பது குறித்து...?

! மற்ற வகுப்புக் குழந்தைகள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்! பாடப் புத்தகம் என்பது ஒரு துணைதான். முக்கியமான கல்வி சாதனம், ஆசிரியரின் போதனை முறையே.

தி.மு.க. ஆட்சியில



• கண்டுகொள்ளாமல்...



• இரும்புக் கரம்!

● ஆர்.கி. முத்துக்கண்ணு,
திருத்தியமலை அஞ்சல்.

? ஜனநாயகத்தின் மிகப் பெரிய கொடுமை எதுவாக இருக்கும்...?

! அது அளிக்கும் சுதந்தரத்தை துஷ்பிரயோகம் செய்வதுதான்!

● ஆர். ஜெயச்சந்திரன், ஆரூர்.

? நமது பிரதமர், டாக்டர் பட்டத்தைப் போட்டுக் கொள்வதில்லையே...?

! பிரதமரை விடுங்கள்! நமது முதல்வரைக் கூட முன்பெல்லாம் 'டாக்டர் கலைஞர்' என்றுதான் கழக உடன்பிறப்புகள் அழைப்பார்கள். இப்போது பாருங்கள்... வெறுமனே கலைஞர் என்றுதான் அழைக்கிறார்கள். பக்குவம் வந்துவிட்டது போலில்லை...?!


● சூர்யநிலா, சேலம் – 2.

? **சமீபத்தில் உங்களை எரிச்சலடையச் செய்த சம்பவம்...?**


! ராணி மங்கம்மாள் பஸ்ஸுக்கு கொடைக்கானல் – பழனி மலைப்பாதையில் நேர்ந்த விபத்து. சமீபத்தில்தான் ஓவர் லோடிங் காரணமாக இதே போல் தனியார் பஸ் விழுந்து உயிர்ச்சேதம் உண்டாயிற்று. இப்போது அரசாங்க பஸ்... அக்கறையின்மையை அப்பட்டமாக உணர்த்தும் இந்த நிகழ்ச்சி, பரிதாபத்தோடு எரிச்சலையும் உண்டாக்குகிறது. போக்குவரத்துக் கழகங்களுக்குப் பெயர் சூட்டுவதோடு அரசின் 'வீரம்' முடிந்து போகிறதே!



• மறந்த பட்டம்!



• குறுகிய பார்வை



• போதாத நேரம்



• காப்பாற்றும் முயற்சி

ஓராண்டுச் சாதனை...?

● டி. கண்ணதாசன், வைரிசெட்டிப்பாளையம்.

? **இந்திரா காந்தி பிரதமராக இருக்கும் போது 25 மாநிலங்களிலும் கலவரம் ஏற்பட்டது. அவற்றையெல்லாம் திறமையாக முறியடித்தார். ஆனால் அரசியல் நுட்பம் தெரிந்தவர் என்று பேசப்படும் கருணாநிதியால் ஒரு மாவட்டத்தின் கலவரத்தைக் கூட அடக்க முடியவில்லையே... திணறுகிறாரே?**

! முக்கியமான காரணம் வன்முறை கலாசாரம் வேரூன்றி விட்டது என்பதுதான். முறுக்கு, சீடை, வத்தல், வடகம் போல், குண்டுகளை வீட்டிலேயே தயாரிக்கிற அளவுக்கு 'முன்னேற்றம்' அடைந்து விட்டோம்! போலீஸில் புலனாய்வுப் பிரிவு அதற்கேற்ப மேம்பட வேண்டும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் – இவைதான் பிரச்னைக்குத் தீர்வு. புலனாய்வுத் துறையின் கணிப்புகளை அரசும் ஏற்று, உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மாறாக அந்த அறிக்கைகளை அலட்சியப்படுத்தும் அரசு உருப்படாது!

● என். முருகேஷ், பெருஞ்சேரி.

? **விஸ்கி குடிப்பதில் உலகிலேயே இரண்டாவது இடம் இந்தியாவுக்காமே...?**

! ஏழை நாட்டுக்குக் கட்டுப்படியாகாத கெட்ட பழக்கம்! வசதியானவர்கள்தான் வாங்கிக் குடிப்பார்கள் என்றாலும் அத்தனை தொகையும் ஏதேனும் ஆக்க பூர்வ முயற்சிக்குத் திசை திருப்பப்பட்டால் எத்தனை சாதனைகள் நிகழும்! – சிந்தித்தால் மலைப்பாக இருக்கிறது.

● இ. மகாராசன், கடமலைக்குண்டு.

? **தி.மு.க. அரசின் ஓராண்டுச் சாதனை பற்றி...?**

! சாதனைகள் விளம்பரப்படுத்தப்படுகின்றன. வேதனைகள் 'ஏர்போர்ஸ்' விமானத்தில் பறக்கின்றன!

● வி.எஸ். கோவிந்தன், தே. கல்லுப்பட்டி. ❑

? **சோனியா காந்தி காங்கிரஸில் சேர்ந்திருப்பது காங்கிரஸைக் காப்பாற்றவா? தம் உறவினரைக் காப்பாற்றவா...?**

! இத்தனை காலதாமதமாக வந்து சேர்ந்திருப்பதைப் பார்த்தால், போஃபர்ஸ் பூதத்துக்குப் பயந்து வந்திருப்பதாகவே தோன்றுகிறது. ஆனால் உறவினரின் நற்பெயர், காங்கிரஸின் நற்பெயர் இரண்டையுமே காப்பாற்ற அவரால் முடியாது.



பிஸ்தா

"கீழே விழுந்தவங்களைப் பார்த்துச் சிரிக்கக் கூடாது ஸார்; கையைப் பிடித்துத் தூக்கி விடணும். அப்பத்தான் நீங்க கீழே விழும்போது மற்றவர்கள் தூக்கி விடுவார்கள்" என்று 'தத்துவம்' பேசும் ஹோட்டல் சர்வர் கார்த்திக்கை, தொழிலதிபர் மௌலிக்குப் பிடித்துப் போகிறது. விளைவு :

ஊட்டியில் உள்ள அவரது தொழிற்சாலையில் மானேஜர் உத்தியோகம்.

மௌலியின் அடங்காப்பிடாரி பெண் நக்மா. ஊரெல்லாம் அலம்பல் செய்பவர். அவர் வெண் கலக் கடை யானையாய்ச் செய்யும் அட்டகாசத்திற்கு ஃபாக்டரி மானேஜர் நஷ்டஈடு வழங்க வேண்டும். புது மானேஜர் கார்த்திக் விடுவாரா? ஆக, மோதல். 'உன்னை துரத்திக் காட்டுகிறேன் பார்' என்று நக்மாவின் சவால்.

"இந்தச் சொத்தை நீ அனுபவிக்க முடியுமே தவிர விற்க முடியாது; கல்யாணமானால்தான் உனக்குப் பாதி சொத்து விற்க உரிமை உண்டு" என்று மௌலி தூக்கிப் போடும் குண்டால் ஸ்தம்பித்து நிற்கும் நக்மா, சுதாரித்துக் கொண்டு, கார்த்திக்கை விரும்புவது போல் நடித்து, கல்யாணம் செய்து கொண்டு, சொத்தை அபகரிக்க முயல்கிறார்.

கார்த்திக் கதாநாயகன் ஆயிற்றே; நடக்குமா? இடையில் ஒரு கிளைக்கதை வேறு. நக்மாவின் அக்கா ஜெயபுஷ்பியின் கோர மரணம். அக்காவைக் காதலித்திருப்பவர், கடைசியில் நக்மாவிற்குக் கொடுக்கும் ஷாக். ஓடிப் போன மௌலியின் மானேஜர், கார்த்திக்கின் உதவியால் கூட்டி வரப்பட்டு, சிக்கலை விடுவிக்க, எல்லாம் பளிச்! கார்த்திக்கின் கழுத்தில் நக்மா மாலையாக சுற்றிக் கொள்ள, சுபம்...

திரையுலகப் பிஸ்தாக்களான ரஜினியையும், கமலையும் டைரக்ட் செய்ததைத் தொடர்ந்து, ரவிக்குமார் டைரக்ட் செய்துள்ள படம். லாஜிக்கையெல்லாம் தூக்கியெறிந்து, காதில் பூ சுற்றிக் கொண்டு விட்டால், எதைப் பற்றியும் கேள்வி கேட்காமல் இரண்டு மணி நேரம் சிரித்து விட்டு வரலாம்.

ஊட்டி குளிரில் நக்மா, தண்ணீரில் ஐஸ் கட்டிகளைக் கலந்து விட, விடியற்காலை அந்த ஐஸ் தண்ணீரில் குளித்துவிட்டு நடுங்கும் போது கார்த்திக் கலக்குகிறார். மணிதருக்கு, நகைச்சுவையாக நடிக்க குரல் மிகவும் கைகொடுக்கிறது. கல்யாணக் கோலத்தில் இருக்கும் கார்த்திக், ஜெயிலிலிருந்து விடுதலை ஆகிவரும் மணிவண்ணனைப் பார்க்க... மாப்பிளை... மாம்ஸ் என்று இருவரும் குசலம் விசாரித்துக் கொண்டு, பழைய கதைகளை அவிழ்த்து விடுவது படா ஷோக்கு நைனா!

உள்ளத்தை அள்ளித் தந்த படத்தில் வந்த பாடல்களின் சாயல், இந்தப் படத்திலும் உண்டு. காமிராக்காரரும் ஊட்டி குளிரில் நடுங்கிப் போய் விட்டாரா? அசத்தியிருக்கலாமே!

- கௌசி

பாதன் அச்சகத்தில் அச்சிட்டு, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; ஃபேக்ஸ் : 2345621.

ஆண்டுச் சந்தா : ரூ. 208/-; ஆறு மாதச் சந்தா : ரூ. 104/- (உள்நாடு).

கல்கி



ஜெயலலிதாவுக்குத் திருநாவுக்கரசு சவால்!



"அரசியலை விட்டே விலகத் தயார்!"

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 * Licensed to